பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு

பத்துப் பாட்டு

பதிப்பு-ஆசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதற் பதிப்பு—1957
உரிமை பதிவு செய்யப்பெற்றது

கிடைக்கும் இடம்
மர்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

எஸ். விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பெற்றது

பதிப்புரை

பழந் தமிழ் நூல்களைப் பொதுவாக, 'பத்துப் பாட்டு', 'எட்டுத் தொகை', 'பதினெண் கீழ்க்கணக்கு' என்று பாகுபடுத்தி உரைப்பது உரையாசிரியர்கள் காலந்தொட்டுப் பயின்றுவரும் ஒரு மரபாகும். 'தமிழ் விடு தூதின்' ஆசிரியர்,

—மூத்தோர்கள்
பாடியருள் பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும்,
கேடு இல் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்

என்று குறிப்பிடுதலும் இம் மரபைப் புலப்படுத்தும். இம் முறை வைப்பில் 'பத்துப் பாட்டு' சங்க காலத் தொகை நூல்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படுகிறது. இது பத்துப் பெரிய அகவற் பாடல்களைக் கொண்ட தொகுதி. நீண்ட அகவற் பாடலுக்கு உதாரணமாக இளம்பூரணர் பத்துப் பாட்டுப் பாடல்களையும் குறித்துள்ளார். 'பெரிய பாட்டு பத்துப் பாட்டினுள்ளும், சிலப்பதிகாரத்துள்ளும், மணிமேகலையுள்ளும் கண்டு கொள்க' (தொல். செய்யு. 150) என்பது அவரது வாக்கு.

பத்துப் பாட்டின் ஏட்டுப் பிரதிகளில் குறிக்கப்பெற்றுள்ள பாடல் ஒன்று இத் தொகுதியில் அடங்கிய பாடல்களை முறைப்படுத்திக் கூறுகின்றது. அப்பாட்டு வருமாறு:

முருகு, பொருநாறு, பாண் இரண்டு, முல்லை,
பெருகு வள மதுரைக் காஞ்சி, மருவினிய
கோல நெடுநல்வாடை, கோல் குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும், பத்து.

இப் பாடலில் குறித்த வரிசையிலேயே பல பிரதிகளிலும் பாடல்கள் அமைந்திருந்தன. அன்றியும், முதலாவது, இரண்டாவது, என எண்ணுப் பெயராலும் இவை குறிக்கப்பெற்றுள்ளன.

எனினும், 'பத்துப் பாட்டு' எனக் குறிக்கும் வழக்கம் மிக முற்பட்டது என்று கொள்ளுவதற்கு இல்லை. இப் பெயரை இளம்பூரணரும், மயிலைநாதருமே (நன். 387), தத்தம் உரைகளில் குறித்துள்ளனர். பேராசிரியரோ தமது தொல்காப்பிய உரையில் 'பாட்டு' என்றே (செய்யு. 50, 80 உரை) வழங்கியுள்ளனர். இளம்பூரணரும் பிற உரையாசிரியர்களும் பத்துப் பாட்டுப் பாடல்களை மேற்கோள்களாக எடுத்துக் காட்டும்பொழுது, அவ்வவற்றின் தனிப் பெயராலேயே குறித்துள்ளார்கள். எட்டுத்

தொகை நூற்களிற்போல இத் தொகுதியைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிய குறிப்புக்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. கடைச் சங்க வரலாறு கூறுமிடத்து, எட்டுத் தொகை நூல்களை முறையாக எடுத்து விளக்கும் இறையனாரகப் பொருள் உரையில் (சூ. 1) பத்துப் பாட்டைப் பற்றிய செய்தி எதுவும் காணப் பெறவில்லை.

பிற்காலத்திலே எழுந்த பன்னிரு பாட்டியலில் 'பத்துப் பாட்டு' என்னும் நூலின் இயல்பு குறித்து இரண்டு சூத்திரங்கள் உள்ளன.

நூறு அடிச் சிறுமை, நூற்றுப் பத்து அளவே.
ஏறிய அடியின் ஈர்-ஐம் பாட்டுத்
தொகுப்பது பத்துப் பாட்டு எனப்படுமே. (384)
அதுவே, அகவலின் வரும் என அறைகுவர் புலவர். (385)

இந்தச் சூத்திரங்கள் 'பத்துப் பாட்டு' என்னும் வழக்குப் பெருகிய காலத்தில் இயற்றப் பெற்றவை. 'பத்துப் பாட்டு' இலக்கியத்தை நோக்கி வகுக்கப்பெற்றதே இந்த இலக்கணம். வேறு வகையான பத்துப் பாட்டுக்கள் தமிழுலகில் இல்லை.

பத்துப் பாட்டு நூல் பத்துப் பாடல்களைக் கொண்ட ஒரு கோவையாயினும், 'குறுந்தொகை', 'புற நானூறு' போன்ற நூற் கோவை யன்று. இவை ஒன்றற்கு ஒன்று தொடர்பு இன்றி, வெவ் வேறு சூழ்நிலையில், வெவ்வேறு காலத்தில், எழுந்த பாட்டுக்கள்.

இவற்றுள் செம்பாதி ஆற்றுப்படைகள். அவையாவன: திரு முருகு ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற் றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, மலைபடுகடாம். திரு முருகு ஆற்றுப்படைக்குப் 'புலவர் ஆற்றுப்படை' என்ற ஒரு பெயரும் உண்டு. மலைபடுகடாம் 'கூத்தர் ஆற்றுப்படை' எனவும் வழங்கும். 'முல்லைப் பாட்டு', 'குறிஞ்சிப் பாட்டு', 'பட்டி னப் பாலை', என்னும் மூன்றும் அகத்திணை யொழுக்கம் பற்றியன. குறிஞ்சிப் பாட்டைப் 'பெருங்குறிஞ்சி' என்ற பெயராலும் உரை யாசிரியர்கள் வழங்கியுள்ளனர். 'நெடுநல் வாடை' அகப்பொருட் செய்தி போதிந்ததாயினும், பாண்டியனது அடையாளப் பூவைக் கூறினமையால், இதனைப் புறத்திணைப்பாற் படுத்துவர். வாகைத் திணையுள் கூறிய 'கூதிர்ப் பாசறை' என்னும் துறையுள் இதனை நச்சினார்க்கினியர் அடக்குவர். 'மதுரைக் காஞ்சி' வீடு பேறு நிமித் தமாகப் பல்வேறு நிலையாமைகளைச் சான்றோர் எடுத்துக் கூறும் பகுதியாகிய 'காஞ்சித் திணை' என்னும் புறப்பொருட் பகுதியைச் சார்ந்தது.

பத்துப் பாட்டுள் மிகச் சிறியது முல்லைப் பாட்டு; இதில் 103 அடிகள் உள்ளன. மிகப் பெரிய பாடல் மதுரைக் காஞ்சி; இதில் உள்ள அடிகள் 782.

ஒவ்வொரு பாடலையும் இயற்றிய புலவர் பெயரும், அவரால் பாடப் பெற்ற பாட்டுடைத் தலைவர் பெயரும், அவ்வப் பாடல்களின் இறுதியில் கொடுக்கப்பெற்றுள்ள பழைய வாக்கியங்களால் புலனாகின்றன. பட்டினப் பாலை, மலைபடுகடாம் நூல்களைப் பாடினோர், அவற்றின் பாட்டுடைத் தலைவர்கள் பற்றிய செய்திகள் பிற்கால இலக்கியங்களிலிருந்தும் சிலாசாஸனங்களிலிருந்தும் தெரியவருகின்றன.

பத்துப் பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் சிறந்த முறையில் உரை வகுத்துள்ளார்.

சான்றோர் உரைத்த தண் தமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டும் உணர்வார்க்கு எல்லாம்
உரையற முழுதும் புரைபட உரைத்தும்

என்பது நச்சினார்க்கினியர் உரையைப் பற்றிய சிறப்புப் பாயிரப் பகுதி.

பத்துப் பாட்டுப் பாடற் பிரதிகளின் ஈற்றில் சில தனி வெண்பாக்கள் உள்ளன. அவைகள் 'தனிப் பாடல்கள்' என்னும் தலைப்புடன் அந்தந்தப் பாடல்களின் ஈற்றில் அமைக்கப் பெற்றுள்ளன. செய்யுட்களின் பொருட்போக்கை விளக்கும் வகையில் பாடல்களின் இடையிடையே தலைப்புக்கள் கொடுத்து அமைக்கப் பெற்றுள்ளன. அவ்வப் பாடல்களில் வரும் சிறப்புப் பெயர் முதலியவை தொகுக்கப்பெற்று, அகராதி வரிசையில் தரப்பட்டுள்ளன. இங்ஙனமே, 'நற்றிணை', 'குறுந்தொகை', முதலிய தொகை நூல்களிலும் 'சிறப்புப் பெயர் முதலியவை' இடம் பெற்றுள்ளன. தவிரவும், தொகை நூல்கள் ஒவ்வொன்றிலும் பாடினோர் பாடப்பட்டோர்களின் பெயர்கள் பாடல் எண்களுடன் அகராதி வரிசையில் அமைக்கப் பெற்றுள்ளன. 'பத்துப் பாட்டு', 'எட்டுத் தொகைகளில்' வரும் அருஞ் சொற்களுக்கு உரிய உரை விளக்கமும், புலவர் அகராதியும், இவற்றில் பயின்று வந்துள்ள 'பழைய கதைகள்', பிற வரலாறுகள், பழமொழிகள், அறவுரைகள் முதலிய குறிப்புக்களும் 'பாட்டும் தொகையும்' என்னும் தனித் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இத் தொகுதி சங்க நூற்கள் அனைத்திற்கும் ஒரு வழிகாட்டியாய் அமையும்.

பாட்டு தொகைகளின் பதிப்புப் பெரு முயற்சியில் ஈடுபட்டு உழைத்த தமிழ்ப் பெரியார்களும் அன்பர்களும் பலராவர். அவர்களுள் முதன்மையாக நன்றியோடு குறிப்பிடத்தக்கவர் பத்துப்

பாட்டையும், எட்டுத் தொகை நூல்களில் ஐந்தையும் செம்மை யுற நன்கு பரிசோதித்து, தமிழுலகிற்கு வழங்கிய மகாமகோபாத் தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். ஐயர் அவர் களின் பதிப்புக்களை இப் பதிப்பிற்குப் பயன் படுத்திக்கொள்ள மனம் உவந்து இசைந்த ஐயரவர்களின் பெயரர் திரு. க. சுப்பிர மணியம் அவர்களுக்கு எமது நன்றி உரியதாகும். மற்றும், அக நானூறு, கலித்தொகை, முதலிய ஏனைய நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்த் ஸேது ஸம்ஸ்தான மகாவித்வான் பாஷா கவிசேகரர் ரா. ராகவையங்கார், ஸ்ரீ வத்ஸ சக்கரவர்த்தி ராஜகோபாலையங்கார் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை, திரு. இ. வை. அனந்த ராமையர் முதலியவர்களும் நன்றியுடன் பாராட்டத் தக்கவர்கள். முற்பதிப்புக்கள் அனைத்தையும் பற்பல ஏட்டுப் பிரதிகளையும் ஒப்பு நோக்கி, எத்தனையோ திருத்தங்கள் கண்டு, புலவர் வரிசையில் சங்கப் பாடல்களை அச்சிட்டு, 'சங்க இலக்கியம்' என்ற பெயரில் உலவச் செய்த பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களு டைய உதவியும் மறக்கற்பாலதன்று. இந்தச் சங்க இலக்கிய மூலபாடம் முதலியவைகளைப் பயன் படுத்திக்கொள்ள இசைவு தந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் செயற் குழுவினருக்கு எமது நன்றி உரித்தாகுக. இன்னும் பல்வேறு வகைகளில் பாட்டு தொகைகளை வெளியிட்ட ஏனையோர்களுக்கும் எமது நன்றி உரித் தாகும்.

பதிப்புக் குழுவில் திருவாளர்கள் பெ. நா. அப்புஸ்வாமி, பி.ஸ்ரீ., வி. மு. சுப்பிரமணியம், அ. ச. ஞானசம்பந்தன், மு. சண் முகம், ஆகிய ஐவரும் இருந்து, பாட்டு தொகைகளைத் தக்க வண் ணம் அழகுறப் பதிப்பித்துள்ளார்கள். இவர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றி உரியதாகுக.

பண்டைத் தமிழின் அழகையும் பெருமையையும் பாட்டு தொகைளில் கண்டு மகிழ்வோமாக! பழந் தமிழ்க் கருவூலங்களா கிய இவற்றைத் தமிழுலகம் விருப்புடன் ஏற்றுப் போற்றுவீதாக!

மர்ரே அண்டு கம்பெனி,
சென்னை—5-12-57

வெளியீடுவோர்

உள்ளுறை

		பக்கம்
திருமுருகு ஆற்றுப்படை	...	9
பொருநர் ஆற்றுப்படை	...	23
சிறுபாண் ஆற்றுப்படை	...	34
பெரும்பாண் ஆற்றுப்படை	...	46
முல்லைப் பாட்டு	...	67
மதுரைக் காஞ்சி	...	73
நெடுநல்வாடை	...	103
குறிஞ்சிப் பாட்டு	...	112
பட்டினப் பாலை	...	124
மலைபடுகடாம்	...	138

பத்துப் பாட்டு

முருகு, பொருநாறு, பாண் இரண்டு, முல்லை,
பெருகு வள மதுரைக் காஞ்சி, மருவினிய
கோல நெடு நல் வாடை, கோல் குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும், பத்து.

பாடினோர்

முருகும் நல்வாடையும் கீரன்; முடத்தாமக்கண்ணி பொருந்;
மருவு பாண், பாலை, உருத்திரங்கண்ணன்; மகிழ் சிறு பாண்
புரியும் நத்தத்தன்; மருதன் நன்காஞ்சி; நப்பூதன் முல்லை;
வரும் எம் கபிலன் குறிஞ்சி, மலைகடாம் கௌசிகனே.

பாடப்பட்டோர்

முருகாறு செவ்வேள்; பொருநாறு, பாலை,
கரிகால்; நெடுஞ்செழியன் காஞ்சி; இரு பாணும்
நல்லியக்கோடன், இளந்திரையன்; நன்னன் கடாம்;
கல்வித் தலைவர் கருத்து.

நூலையும் உரையையும் காப்பாற்றினோர்

முருகாறு, பொருநாறு, சிறுபாணாறு,
முல்லை, பெரும்பாணாறு, மதுரைக் காஞ்சி,
பரிது ஆய பொருள் தழுவா நெடுநல்வாடை,
பட்டினப் பாலை, குறிஞ்சி, மலைகடாமும்,
மரு ஆரும் பொழில் புடை சூழ் களந்தை மூதூர்
வரு சிவப்ப பூபன் அருள் வேல பூபன்
உரையோடும் எழுதினன் ஆதலினால் அன்னான்
ஓங்கு பெருஞ் செல்வம், இசை, உற்று வாழி.

திரிபு சந்தி பற்றிய ஒரு குறிப்பு

திரிபு சந்தியில் ஓர் எழுத்து பிறிது ஒன்றாக மாறும். வருமொழியில் வல்லின முதல்மொழி வரும்பொழுது, நிலைமொழி ஈற்றில் 'ன்', 'ல்', இரண்டும் வரின், 'ற்' ஆகவும், 'ண்', 'ள்', இரண்டும் வரின், 'ட்' ஆகவும், வேறுபடும். மற்றும் 'ல்', 'ள்', இவ் இரண்டின் முன் மெல்லின முதல் மொழி வந்தால், ல் 'ன்' ஆகவும், ள் 'ண்' ஆகவும், மாறுவது உண்டு. எனவே, நிலைமொழிச் சொல்லை ன், ல், ண், ள், இவற்றுள் ஒன்றைக் கொண்ட சொல்லாக இடத்திற்கு ஏற்றபடி கொள்ளுதல் வேண்டும். உருபுகள் பெயருடன் சேர்ந்து வரும் இடங்களிலும் இவ் வகைத் திரிபு சந்திகளில் சில வரும்.

மேலும், 'ம்' ஈற்றுச் சொற்கள் பின்வரும் மொழிகளுக்குத் தக்கபடி, 'க' முதல் மொழி வரின் 'ங்' ஆகவும், 'ச' முதல் மொழி வரின் 'ஞ்' ஆகவும், 'த' முதல் மொழி வரின் 'ந்' ஆகவும், இனம் ஒத்த மெல்லினமாகத் திரிந்து வரும்.

மேற் குறித்தவை ஒருசில இடங்களில் திரியாமல் இருத்தலும் உண்டு.

திருமுருகு ஆற்றுப்படை

1. திருப்பரங்குன்றம்

குமரவேளின் பெருமை

தெய்வயானையின் கணவன்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டாஅங்கு,
ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி,
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்,
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக் கை,
மறு இல் கற்பின் வாணுதல் கணவன்——

கடப்பமாலை புரளும் மார்பினன்

கார்கோள் முகந்த கமஞ் சூல் மா மழை,
வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறி,
தலைப் பெயல் தலைஇய தண் நறுங் கானத்து,
இருள் படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன்——

சூரரமகளிரின் இயல்பு

மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி,
கணைக் கால், வாங்கிய நுசுப்பின், பணைத் தோள்,
கோபத்து அன்ன தோயாப் பூந் துகில்,
பல் காசு நிரைத்த சில் காழ் அல்குல்,
கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர்இழை,
சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி——
துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதிச்
செங் கால் வெட்சிச் சீறிதழ் இடை இடுபு,
பைந் தாட் குவளைத் தூ இதழ் கிள்ளி,
தெய்வஉத்தியொடு வலம்புரி வயின் வைத்து,
திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல்
மகரப்பகுவாய் தாழ மண்ணுறுத்து,
துவர முடித்த துகள் அறும் முச்சிப்
பெருந் தண் சண்பகம் செரீஇ, கருந் தகட்டு
உளைப் பூ மருதின் ஒள் இணர் அட்டி,
கிளைக் கவின்று எழுதரு கீழ் நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇ, துணைத் தக

வண் காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்
நுண் பூண் ஆகம் திளைப்ப, திண் காழ்
நறுங் குறடு உரிஞ்சிய பூங் கேழ்த் தேய்வை,
தேம் கமழ் மருது இணர் கடுப்ப, கோங்கின்
குவி முகிழ் இள முலைக் கொட்டி, விரி மலர்
வேங்கை நுண் தாது அப்பி, காண்வர,
வெள்ளில் குறு முறி கிள்ளுபு தெறியா,
'கோழி ஓங்கிய வென்று அடு விறற் கொடி
வாழிய பெரிது!' என்று ஏத்தி, பலர் உடன்
சீர் திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடி—
சூரரமகளிர் ஆடும் சோலை,

காந்தளின் கண்ணி சூடிய சென்னியன்

மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து,
சுரும்பும் மூசாச் சுடர்ப் பூங் காந்தட்
பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன்—

முருகன் சூரனைத் தடிந்த வகை

பார் முதிர் பனிக் கடல் கலங்க உள் புக்கு,
சூர் முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்—

பேய்மகளின் துணங்கைக் கூத்து

உலறிய கதுப்பின், பிறழ் பல் பேழ் வாய்,
சுழல் விழிப் பசுங் கண், சூர்த்த நோக்கின்,
கழல் கட் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெரு முலை அலைக்கும் காதின், பிணர் மோட்டு,
உரு கெழு செலவின், அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல்
கண் தொட்டு உண்ட கழி முடைக் கருந் தலை
ஒண் தொடித் தடக் கையின் ஏந்தி, வெருவர
வென்று அடு விறற் களம் பாடி, தோள் பெயரா,
நிணம் தின் வாயள் துணங்கை தூங்க—

மாமரத்தை வெட்டிய வெற்றி

இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை,
அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி,
அவுணர் நல் வலம் அடங்க, கவிழ் இணர்
மா முதல் தடிந்த மறு இல் கொற்றத்து,
எய்யா நல் இசை, செவ் வேற் சேஎய்—

ஆற்றுப்படுத்தல்

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு,
நலம் புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்,
செலவு நீ நயந்தனை ஆயின், பல உடன்,
நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப,
இன்னே பெறுதி, நீ முன்னிய வினையே:

திருப்பரங்குன்றில் முருகன் வீற்றிருத்தல்

செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங் கொடி
வரிப் புனை பந்தொடு பாவை தூங்க,
பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில்,
திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து,
மாடம் மலி மறுகின் கூடற் குடவயின்—
இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள் தாட் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி, எல் படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனை மலர்,
அஞ்சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும்—
குன்று அமர்ந்து உறைதலும் உரியன். அதாஅன்று,

2. திருச் சீர் அலைவாய்

ஆறுமுகன் யானையின்மேல் ஏறி வருதல்

வைந்நுதி பொருத வடு ஆழ் வரி நுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வர,
படு மணி இரட்டும் மருங்கின், கடு நடை,
கூற்றத்தன்ன மாற்று அரு மொய்ம்பின்,
கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு—

ஆறு முகங்களின் இயல்புகள்

ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண் மிகு திரு மணி
மின் உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப,
நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங் குழை
சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப,
தா இல் கொள்கைத் தம் தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள் நிற முகனே:

மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்க,
பல் கதிர் விரிந்தன்று, ஒரு முகம்; ஒரு முகம்,
ஆர்வலர் ஏத்த, அமர்ந்து இனிது ஒழுகி,
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே; ஒரு முகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒரு முகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடி,
திங்கள் போலத் திசை விளக்கும்மே; ஒரு முகம்
செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கி,
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒரு முகம்,
குறவர் மட மகள், கொடி போல் நுசுப்பின்
மடவரல், வள்ளியொடு நகை அமர்ந்தன்றே;
ஆங்கு, அம் மூ-இரு முகனும், முறை நவின்று ஒழுகலின்—

பன்னிரு கைகளின் தொழில்கள்

ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின்
செம் பொறி வாங்கிய, மொய்ம்பின், சுடர் விடுபு,
வண் புகழ் நிறைந்து, வசிந்து வாங்கு, நிமிர் தோள்:
விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒரு கை, உக்கம் சேர்த்தியது ஒரு கை;
நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒரு கை,
அங்குசம் கடாவ ஒரு கை; இரு கை
ஐ இரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப; ஒரு கை
மார்பொடு விளங்க, ஒரு கை
தாரொடு பொலிய; ஒரு கை
கீழ் வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒரு கை
பாடு இன் படு மணி இரட்ட; ஒரு கை
நீல் நிற விசும்பின் மலி துளி பொழிய, ஒரு கை
வான்அரமகளிர்க்கு வதுவை சூட்ட;
ஆங்கு, அப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி—

அலைவாயில் ஆறுமுகன் வந்தருளியிருக்கும் காட்சி

அந்தரப் பல்லியம் கறங்க, திண் காழ்
வயிர் எழுந்து இசைப்ப, வால் வளை ஞரல,
உரம் தலைக்கொண்ட உரும் இடி முரசமொடு
பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ,
விசும்பு ஆறு ஆக விரைசெலல் முன்னி,
உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச் சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே. அதாஅன்று,

3. திரு ஆவினன்குடி

முன் செல்லும் முனிவரது இயல்புகள்

சீரை தைஇய உடுக்கையர், சீரொடு
வலம் புரி புரையும் வால் நரை முடியினர்,
மாசு அற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தைஇய ஊன் கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர், நன் பகல்
பல உடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமையர், காமமொடு
கடுஞ் சினம் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மேவரத்
துனி இல் காட்சி முனிவர், முன் புக—

பாடுவார் இயல்பு

புகை முகந்தன்ன மாசு இல் தூ உடை,
முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து,
செவி நேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல் யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென் மொழி மேவலர், இன் நரம்பு உளர—

பாடும் மகளிர் இயல்பு

நோய் இன்று இயன்ற யாக்கையர், மாவின்
அவிர் தளிர் புரையும் மேனியர், அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர், இன் நகைப்
பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல்,
மாசு இல் மகளிரொடு மறு இன்றி விளங்க:

திருமால், சிவன், இந்திரன், ஆகியோரின் இயல்புகள்

கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று,
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந் திறல்,
பாம்பு படப் புடைக்கும் பல் வரிக் கொடுஞ் சிறைப்
புள் அணி நீள் கொடிச் செல்வனும்—வெள் ஏறு
வலம்வயின் உயரிய, பலர் புகழ் திணி தோள்,
உமை அமர்ந்து விளங்கும், இமையா முக் கண்,
மூஎயில் முருக்கிய, முரண் மிகு செல்வனும்—
நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்து, நூறு பல்
வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து,
ஈர்-இரண்டு ஏந்திய மருப்பின், எழில் நடை,
தாழ் பெருந் தடக் கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக் கிளர் செல்வனும்—

பிரமனுக்காகத் திரண்டு வந்த தேவர்கள்

நாற் பெருந் தெய்வத்து நல் நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கைப்
பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக,
ஏமுறு ஞாலம்தன்னில் தோன்றி,
தாமரை பயந்த தா இல் ஊழி
நான்முக ஒருவற் சுட்டி, காண்வர,
பகலில் தோன்றும் இகல் இல் காட்சி
நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு,
ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர்—

தேவர்கள் வருகின்ற காட்சி

மீன் பூத்தன்ன தோன்றலர், மீன் சேர்பு
வளி கிளர்ந்தன்ன செலவினர், வளியிடைத்
தீ எழுந்தன்ன திறலினர், தீப் பட
உரும் இடித்தன்ன குரலினர், விழுமிய
உறு குறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார்,
அந்தரக் கொட்பினர், வந்து உடன் காண,

முருகன் மடந்தையோடு வீற்றிருத்தல்

தா இல் கொள்கை மடந்தையொடு, சில் நாள்,
ஆவினன்குடி அசைதலும் உரியன். அதாஅன்று,

4. திரு ஏரகம்

இருபிறப்பாளரின் இயல்பு

இரு-மூன்று எய்திய இயல்பினின் வழாஅது,
இருவர்ச் சுட்டிய பல் வேறு தொல் குடி,
அறு-நான்கு இரட்டி இளமை நல் யாண்டு
ஆறினில் கழிப்பிய, அறன் நவில் கொள்கை,
மூன்று வகைக் குறித்த முத் தீச் செல்வத்து,
இருபிறப்பாளர், பொழுது அறிந்து நுவல—

அந்தணர் வழிபடும் முறை

ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்,
புலராக் காழகம் புலர உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து,
ஆறு எழுத்து அடக்கிய அரு மறைக் கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப் பாடி,
விரை உறு நறு மலர் ஏந்தி—பெரிது உவந்து,
ஏரகத்து உறைதலும் உரியன். அதாஅன்று,

5. குன்றுதொறு ஆடல்

குரவைக் கூத்து

பைங்கொடி, நறைக் காய் இடை இடுபு, வேலன்,
அம் பொதிப் புட்டில் விரைஇ, குளவியொடு
வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்;
நறுஞ் சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின்:
கொடுந் தொழில் வல் வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக் கட் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,
தொண்டகச் சிறு பறைக் குரவை அயர—

குன்றுதோறும் ஆடல்புரியும் தன்மை

விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங் கான்,
குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி,
இணைத்த கோதை, அணைத்த கூந்தல்;
முடித்த குல்லை, இலையுடை நறும் பூ,
செங் கால் மராஅத்த வால் இணர், இடை இடுபு,
சுரும்பு உணத் தொடுத்த பெருந் தண் மாத் தழை
திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ,
மயில் கண்டன்ன மட நடை மகளிரொடு—
செய்யன், சிவந்த ஆடையன், செவ்வரைச்
செயலைத் தண் தளிர் துயல் வரும் காதினன்,
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்,
குழலன், கோட்டன், குறும் பல்லியத்தன்,
தகரன், மஞ்ஞையன், புகர் இல் சேவல்அம்-
கொடியன், நெடியன், தொடி அணி தோளன்—
நரம்பு ஆர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு,
குறும் பொறிக் கொண்ட நறுந் தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்,
முழவு உறழ் தடக் கையின் இயல ஏந்தி,
மென் தோள் பல் பிணை தழீஇ, தலைத்தந்து,
குன்றுதொறு ஆடலும் நின்ற தன் பண்பே. அதாஅன்று,

6. பழமுதிர்சோலை

முருகன் இருப்பிடங்கள்

சிறு தினை மலரொடு விரைஇ, மறி அறுத்து,
வாரணக் கொடியொடு வயிற் பட நிறீஇ,
ஊர்ஊர் கொண்ட சீர் கெழு விழவினும்,

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்,
வேலன் தைஇய வெறி அயர் களனும்,
காடும் காவும், கவின் பெறு துருத்தியும்,
யாறும் குளனும், வேறு பல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும், புதுப் பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்—

குறமகளின் வெறியாட்டு

நகரில் முருகனை ஆற்றுப்படுத்தல்

மாண் தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரைத்து,
குடந்தம்பட்டு, கொழு மலர் சிதறி,
முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ,
செந் நூல் யாத்து, வெண் பொரி சிதறி,
மத வலி நிலைஇய மாத் தாட் கொழு விடைக்
குருதியொடு விரைஇய தூ வெள் அரிசி
சில் பலிச் செய்து, பல் பிரப்பு இரீஇ,
சிறு பசுமஞ்சளொடு நறு விரை தெளித்து,
பெருந் தண் கணவீர நறுந் தண் மாலை
துணை அற அறுத்துத் தூங்க நாற்றி,
நளி மலைச் சிலம்பில் நல் நகர் வாழ்த்தி,
நறும் புகை எடுத்து, குறிஞ்சி பாடி,
இமிழ் இசை அருவியொடு இன் இயம் கறங்க,
உருவப் பல் பூத் தூஉய், வெருவரக்
குருதிச் செந் தினை பரப்பி, குறமகள்
முருகு இயம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியல் நகர்—

முருகனை வழிபடுதல்

ஆடு களம் சிலம்பப் பாடி, பலவுடன்
கோடு வாய்வைத்து, கொடு மணி இயக்கி,
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட,
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தவாறே.

முருகனைக் கண்டு துதித்தல்

ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக, காண் தக
முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்தி,
கை தொழூஉப் பரவி, கால் உற வணங்கி—
'நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ் சுனை,
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ!

ஆல் கெழு கடவுட் புதல்வ! மால் வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ!
இழை அணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர், வணங்கு வில், தானைத் தலைவ!
மாலை மார்ப! நூல் அறி புலவ!
செருவில் ஒருவ! பொரு விறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல் கெழு தடக் கைச் சால் பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து,
விண் பொரு நெடு வரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேர் ஆள!
அலந்தோர்க்கு அளிக்கும், பொலம் பூண், சேஎய்!
மண்டு அமர் கடந்த நின் வென்று ஆடு அகலத்து,
பரிசிலர்த் தாங்கும் உரு கெழு நெடு வேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்!
சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர் மிகு பொருந! குரிசில்!' எனப் பல,
யான் அறி அளவையின், ஏத்தி, ஆனாது—

கருதி வந்ததை மொழிதல்

'நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்,
நின் அடி உள்ளி வந்தனென்; நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்!' எனக்
குறித்தது மொழியா அளவையின்—

சேவிப்போர் கூற்று

குறித்து உடன்
வேறு பல் உருவின் குறும் பல் கூளியர்,
சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி,
'அளியன் தானே முது வாய் இரவலன்;
வந்தோன், பெரும! நின் வண் புகழ் நயந்து' என—
'இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி:'

முருகன் அருள்புரிதல்

தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின்,
வான் தோய் நிவப்பின், தான் வந்து எய்தி,
அணங்கு சால் உயர்நிலை தழீஇ, பண்டைத் தன்
மணம் கமழ் தெய்வத்து இள நலம் காட்டி,

‘அஞ்சல் ஓம்புமதி, அறிவல் நின் வரவு’ என,
அன்புடை நல் மொழி அளைஇ, விளிவு இன்று,
இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒரு நீ ஆகித் தோன்ற, விழுமிய
பெறல் அரும் பரிசில் நல்குமதி—

அருவியின் காட்சியும் இயற்கைவளமும்

பலவுடன்
வேறு பல் துகிலின் நுடங்கி, அகில் சுமந்து,
ஆர முழு முதல் உருட்டி, வேரற்
பூவுடை அலங்கு சினை புலம்ப, வேர் கீண்டு,
விண் பொரு நெடு வரைப் பரிதியின் தொடுத்த
தண் கமழ் அலர் இறால் சிதைய, நன் பல
ஆசினி முது சுளை கலாவ, மீமிசை
நாக நறு மலர் உதிர, யூகமொடு
மா முக முசுக்கலை பனிப்ப, பூ நுதல்
இரும் பிடி குளிர்ப்ப வீசி, பெருங் களிற்று
முத்துடை வான் கோடு தழீஇ, தத்துற்று
நன் பொன் மணி நிறம் கிளர, பொன் கொழியா,
வாழை முழு முதல் துமிய, தாழை
இளநீர் விழுக் குலை உதிர, தாக்கி,
கறிக் கொடிக் கருந் துணர் சாய, பொறிப் புற
மட நடை மஞ்ஞை பலவுடன் வெரீஇ,
கோழி வயப் பெடை இரிய, கேழலொடு
இரும் பனை வெளிற்றின் புன் சாய் அன்ன
குரூஉ மயிர் யாக்கைக் குடா அடி உளியம்
பெருங் கல் விடர்அளைச் செறிய, கருங் கோட்டு
ஆமா நல் ஏறு சிலைப்ப, சேண் நின்று
இழுமென இழிதரும் அருவி,
பழம் முதிர் சோலைமலை கிழவோனே.!

குமரவேளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

திருமுருகு ஆற்றுப்படை முற்றும்

தனிப் பாடல்கள்

குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர் தடிந்தாய்!
புன் தலைய பூதப் பொரு படையாய்! என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறு ஊர்ந்தான் ஏறே!
உளையாய்! என் உள்ளத்து உறை. 1

குன்றம் எறிந்ததுவும், குன்றப் போர் செய்ததுவும்,
அன்று அங்கு அமரர் இடர் தீர்த்ததுவும், இன்று என்னைக்
கைவிடா நின்றதுவும், கற்பொதும்பில் காத்ததுவும்,
மெய் விடா வீரன் கை வேல்! 2

வீர வேல், தாரை வேல், விண்ணோர் சிறை மீட்ட
தீர வேல், செவ்வேள் திருக் கை வேல், வாரி
குளித்த வேல், கொற்ற வேல், சூர் மார்பும் குன்றும்
துளைத்த வேல்—உண்டே துணை. 3

இன்னம் ஒரு கால், எனது இடும்பைக் குன்றுக்கும்,
கொல் நவில் வேல் சூர் தடிந்த கொற்றவா! முன்னம்
பனி வேய் நெடுங் குன்றம் பட்டு உருவத் தொட்ட
தனி வேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்—பன்னிரு கைக்
கோலப்பா! வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே! 5

அஞ்சும் முகம் தோன்றின், ஆறுமுகம் தோன்றும்;
வெஞ் சமரில், 'அஞ்சல்' என வேல் தோன்றும்; நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின், இரு காலும் தோன்றும்—
'முருகா!' என்று ஓதுவார் முன். 6

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒரு கை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக் கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன், நான். 7

காக்கக் கடவிய நீ காவாது இருந்தக்கால்,
ஆர்க்குப் பரம் ஆம் அறுமுகவா! பூக்கும்
கடம்பா! முருகா! கதிர் வேலா! நல்ல
இடம்காண்; இரங்காய், இனி! 8

பரங்குன்றில் பன்னிரு கைக் கோமான்தன் பாதம்
கரம் கூப்பி, கண் குளிரக் கண்டு, சுருங்காமல்,
ஆசையால், நெஞ்சே! அணி முருகு ஆற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர்தாம் உரைத்த நல் முருகு ஆற்றுப்படையை,
தற்கோல, நாள்தோறும் சாற்றினால், முன் கோல
மா முருகன் வந்து, மனக் கவலை தீர்த்தருளி,
தான் நினைத்த எல்லாம் தரும். 10

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அங்குசம் 110
அந்தணர் 263
அந்தணர் வேள்வி 96
அந்தரக் கொட்பினர் 174
அந்தரப் பல்லியம் 119
அமரர் வெ. 2
அமை 195
அலைவாய் 125
அறுமுகம் வெ. 8
அறுவர் 255

ஆ

ஆசினி 301
ஆடுகளம் 245
ஆமா 315
ஆர்வலர் 93
ஆல் 256
ஆவினன்குடி 176

இ

இயம் 240
இயவுள் 274
இரவலன் 284
இருபிறப்பாளர் 182
இழை 18
இளநீர் 308

ஈ

ஈசன் வெ. 7
ஈசன் மகன் வெ. 7

உ

உடை 138
உமை 153
உலகம் 1, 124
உளியம் 313

எ

எஃகு (வேல்) 111

ஏ

ஏரகம் 189
ஏறு ஊர்ந்தான் வெ. 1

ஐ

ஐ இரு வட்டம் (பரிசை) 111
ஐயர் 107
ஐயவி 228

ஒ

ஒரு கை முகன் வெ. 7

ஓ

ஓடை (பட்டம்) 79

க

கச்சினன் 208
கடம்பன் வெ. 8
கடம்பு 225
கடல் 2
கணவீரம் 236
கதிர் வேலன் வெ. 8
கந்துடை நிலை 226
கலிங்கம் 109
கழலினன் 208
கள் 195
களிறு 304

கா

கா 223
காசு (மணி) 16
காடு 223
காழகம் 184
கானம் 9
கானவர் 194

கி

கிண்கிணி 13

கு

குரவை 197
குரிசில் 276
குல்லை 201
குவளை 22
குழலன் 209
குழை 86
குளவி 191
குளன் 224
குறமகள் 242
குறிஞ்சி 239
குறிஞ்சிக் கிழவன் 267
குன்று 77, 217
குன்றுதொறு ஆடல் 217

கூ

கூகை 49
கூடல் 71
கூளியர் 282
கூற்றம் 81
கூற்று 257

கே

கேழல் 311

கை

கை புனைந்து இயற்றாக் கவின் 17

கொ

கொடு மணி 246
கொற்றவை 258

கோ

கோட்டன் 209
கோடு 246
கோபம் 15
கோழி 38, 311

ச

சண்பகம் 27
சதுக்கம் 225
சந்தி 225
சமர் வெ. 6

சா

சாந்து 193

சி

சிவந்த ஆடை 206
சிறுகுடி 196

சீ

சீரை 126

சு

சுரும்பு 43, 203
சுனை 199, 253
சுனை மலர் 75

சூ

சூர் 275
வெ. 1, 3
சூர் (சூரபன்மன்) 46
சூர் தடிந்த கொற்றவன் வெ. 4
சூரரமகளிர் 41

செ

செச்சைக் கண்ணியன் 208
செந்தி வெ. 5
செந்தி முதல்வன் வெ. 7
செந்தி வாழ்வு வெ. 5
செயலை 207

சே

சேஎய் 61, 271
சேவல்அம் கொடியன் 210-211

ஞா

ஞாயிறு 2

த

தகரன் 210
தண்டை வெ. 7
தலைப்பெயல் 9

தா

தாமரை 73
தார் (மார்பின் மாலை) 113
தாழை 307

தி

திலகம் 24
தினை 218, 242

து

துணங்கை 56
துருத்தி 223

தெ

தெய்வஉத்தி 23
தெய்வத்து இள நலம் 290
தெய்வம் 287

தே

தேய்வை 33

தொ

தொடி 114
தொண்டகச் சிறு பறை 197
தொல் குடி 178

ந

நக்கீரர் வெ. 10
நகர் 238, 244
நறைக் காய் 190

நா

நாகம் 302
நாற் பெருந் தெய்வம் 160
நான்முக ஒருவன் 165

நெ

நெடுவேள் 273
நெய்தல் 74

ப

பந்து 68
பரங்குன்று வெ. 9
பருமம் (மேகலை) 146
பலி 234
பழம் முதிர் சோலைமலை 317
பழையோள் 259
பன்னிருகைக் கோமான் வெ. 9
பன்னிருகைக் கோலப்பன் வெ. 5

பா

பாடு இன் படு மணி 115
பாம்பு 49, 150
பார் முதிர் பனிக் கடல் 45
பாவை 68

பி

பிடி 304
பிண்டி 31
பிணிமுகம் 247
பிணையல் 30
பிரப்பு 234

பு

புட்டில் 191
புலவர் ஏறு 268
புலவன் 261
புள் அணி நீள் கொடிச் செல்வன் 151

பூ

பூதப் பொரு படை வெ. 1
பூந் துகில் 15

பே

பேய்மகள் 51

பொ

பொதியில் 226
பொரி 231
பொன்னுரை 145

ம

மகரப்பகுவாய் 25
மஞ்சள் 235
மஞ்ஞை 122, 310
மஞ்ஞையன் 210
மணி (ஒலிக்கின்ற மணி) 80
மந்தி 42
மயில் 205
மராஅம் 10, 202
மருது 28
மருது இணர் 34
மலைமகள் 257
மள்ளன் 262
மறி 218
மறை 186
மன்றம் 226

மா

மா (மா வடிவினை சூரபன்மன்) 60
மாயோன் வெ. 7
மாயோன் மருகன் வெ. 7
மாவின் தளிர் 143-144
மானின் உரிவை 128-129

மீ

மீன் (நட்சத்திரம்) 169

மு

முசுக்கலை 303
முடி 84
முத் தீ 181
முதல்வன் வெ. 7
முரசம் 121
முருகன் 269, வெ. 6, 7, 8,10
முருகு ஆற்றுப்படை வெ. 9, 10
முருகு இயம் 243
முனிவர் 137

மூ

மூஎயில் (முப்புரம்) 154
மூன்று புரி நுண் ஞாண் 183

யா

யாழ் 141
யாறு 224

யூ

யூகம் 302

வ

வண்டு 76, 199
வயல் 72
வயிர் 120
வல் வில் 194
வலம்புரி 23, 127
வள்ளி 102
வளை (சங்கு) 120

வா

வாடா மாலை (பொன்னரி மாலை) 79
வாழை 307
வான்அரமகளிர் 117
வானோர் 260, வெ.5

வி

விடை 232
விண்ணோர் வெ. 3
விழவு 220
விறற் களம் 55

வெ

வெட்சி 21
வெண் கூதாளம் 192
வெள் ஏறு (கொடி) 151
வெள்ளில் 37
வெறி அயர் களன் 222

வே

வேங்கை 36
வேல் வெ.2, 3, 4, 6
வேலப்பன் வெ. 5
வேலன் 190, 222
வேழம் 82

பொருநர் ஆற்றுப்படை

பொருநனை விளித்தல்

அறாஅ யாணர் அகன் தலைப் பேர் ஊர்,
சாறு கழி வழி நாள், சோறு நசை உறாது,
வேறு புலம் முன்னிய விரகு அறி பொருந!

பாலையாழின் அமைப்பு

குளப்பு வழி அன்ன கவடு படு பத்தல்;
விளக்கு அழல் உருவின் விசி உறு பச்சை,
எய்யா இளஞ் சூல் செய்யோள் அவ் வயிற்று
ஐது மயிர் ஒழுகிய தோற்றம் போல,
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை;
அளை வாழ் அலவன் கண் கண்டன்ன,
துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி;
எண் நாள் திங்கள் வடிவிற்று ஆகி,
அண்-நா இல்லா அமை வரு வறு வாய்;
பாம்பு அணந்தன்ன ஓங்கு இரு மருப்பின்;
மாயோள் முன்கை ஆய் தொடி கடுக்கும்;
கண்கூடு இருக்கைத் திண் பிணித் திவவின்;
ஆய் தினையரிசி அவையல் அன்ன
வேய்வை போகிய விரல் உளர் நரம்பின்
கேள்வி போகிய நீள் விசித் தொடையல்;
மணம் கமழ் மாதரை மண்ணியன்ன,
அணங்கு மெய்ந் நின்ற அமை வரு, காட்சி;
ஆறு அலை கள்வர் படை விட அருளின்
மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை—

யாழை மீட்டிப் பாடுதல்

வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்,
சீருடை நன்மொழி நீரொடு சிதறி—

பாடினியின் கேசாதிபாத வருணனை

அறல் போல் கூந்தல், பிறை போல் திரு நுதல்,
கொலை வில் புருவத்து, கொழுங் கடை மழைக் கண்,
இலவு இதழ் புரையும் இன் மொழித் துவர் வாய்,
பல உறு முத்தின் பழி தீர் வெண் பல்,
மயிர் குறை கருவி மாண் கடை அன்ன
பூங் குழை ஊசற் பொறை சால் காதின்,

நாண் அடச் சாய்ந்த நலம் கிளர் எருத்தின்,
ஆடு அமைப் பணைத் தோள், அரி மயிர் முன்கை,
நெடு வரை மிசைய காந்தள் மெல் விரல்,
கிளி வாய் ஒப்பின் ஒளி விடு வள் உகிர்,
அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து,
ஈர்க்கு இடை போகா ஏர் இள வன முலை,
நீர்ப் பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்,
உண்டு என உணரா உயவும் நடுவின்,
வண்டு இருப்பு அன்ன பல் காழ் அல்குல்,
இரும் பிடித் தடக் கையின் செறிந்து திரள் குறங்கின்,
பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப
வருந்து நாய் நாவின், பெருந் தகு சீறடி,
அரக்கு உருக்கு அன்ன செந் நிலன் ஒதுங்கலின்,
பரற்பகை உழந்த நோயொடு சிவணி,
மரல் பழுத்தன்ன மறுகு நீர் மொக்குள்
நன் பகல் அந்தி நடை இடை விலங்கலின்,
பெடை மயில் உருவின், பெருந் தகு பாடினி

காடுறை தெய்வத்திற்குக் கடன் கழித்தல்

பாடின பாணிக்கு ஏற்ப, நாள்தொறும்
களிறு வழங்கு அதர கானத்து அல்கி,
இலை இல் மராஅத்த, எவ்வம் தாங்கி,
வலை வலந்தன்ன மென் நிழல் மருங்கில்,
காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை—

பரிசு பெற்றோன் பொருநனை விளித்தல்

பீடு கெழு திருவின், பெரும் பெயர், நோன் தாள்,
முரசு முழங்கு தானை, மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போல—
பாடல் பற்றிய பயனுடை எழாஅல்
கோடியர் தலைவ! கொண்டது அறிந!
அறியாமையின் நெறி திரிந்து ஒராஅது,
ஆற்று எதிர்ப்படுதலும் நோற்றதன் பயனே;
போற்றிக் கேண்மதி, புகழ் மேம்படுந!

பரிசு பெற்றோன் பாடின முறை

ஆடு பசி உழந்த நின் இரும் பேர் ஒக்கலொடு
நீடு பசி ஒராஅல் வேண்டின், நீடு இன்று
எழுமதி; வாழி, ஏழின் கிழவ!
பழுமரம் உள்ளிய பறவையின், யானும், அவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்,

நசையுநர்த் தடையா நன் பெரு வாயில்
இசையேன் புக்கு, என் இடும்பை தீர,
எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகி,
பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப,
கைக் கசடு இருந்த என் கண் அகன் தடாரி
இரு சீர்ப் பாணிக்கு ஏற்ப, விரி கதிர்
வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்,
ஒன்று யான் பெட்டா அளவையின்——

அரசன் விருந்தோம்பலின் சிறப்பு

ஒன்றிய
கேளிர் போல, கேள் கொளல் வேண்டி,
வேளாண் வாயில் வேட்பக் கூறி,
கண்ணில் காண நண்ணு வழி இரீஇ,
பருகு அன்ன அருகா நோக்கமோடு,
உருகுபவை போல் என்பு, குளிர் கொளீஇ,
ஈரும் பேனும் இருந்து இறைகூடி,
வேரொடு நனைந்து, வேற்று இழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி,
நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக் கனிந்து
அரவு உரி அன்ன, அறுவை நல்கி,
மழை என மருளும் மகிழ் செய் மாடத்து,
இழை அணி வனப்பின் இன் நகை மகளிர்,
போக்கு இல் பொலங் கலம் நிறைய, பல் கால்,
வாக்குபு தரத்தர, வருத்தம் வீட,
ஆர் உண்டு, பேர் அஞர் போக்கி,
செருக்கொடு நின்ற காலை,

இரவில் சுற்றத்துடன் கவலையின்றித் தூங்கி எழுதல்

மற்று-அவன்
திருக் கிளர் கோயில் ஒரு சிறைத் தங்கி,
தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது
அதன் பயம் எய்திய அளவை மான,
ஆறு செல் வருத்தம் அகல நீக்கி,
அனந்தர் நடுக்கம் அல்லது யாவதும்
மனம் கவல்பு இன்றி, மாழாந்து எழுந்து,

காலையில் அரசவைக்குச் செல்லுதல்

மாலை அன்னது ஓர் புன்மையும், காலைக்
கண்டோர் மருளும் வண்டு சூழ் நிலையும்,
கனவு என மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப,
வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப,
கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட,

அரசனை அணுகுதல்

கதுமெனக் கரைந்து, 'வம்' எனக் கூஉய்,
அதன் முறை கழிப்பிய பின்றை, பதன் அறிந்து,

உணவு கொடுத்து ஓம்பிய முறை

துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின்
பராஅரை வேவை 'பருகு' எனத் தண்டி,
காழின் சுட்ட கோழ் ஊன் கொழுங் குறை
ஊழின் ஊழின் வாய் வெய்து ஒற்றி,
அவைஅவை முனிகுவம்எனினே, சுவைய
வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ,
மண் அமை முழவின் பண் அமை சீறியாழ்
ஒண் நுதல் விறலியர் பாணி தூங்க,
மகிழ்ப் பதம் பல் நாள் கழிப்பி, ஒரு நாள்,
'அவிழ்ப் பதம் கொள்க' என்று இரப்ப, முகிழ்த் தகை
முரவை போகிய முரியா அரிசி
விரல் என நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்,
பரல் வறைக் கருனை, காடியின் மிதப்ப
அயின்ற காலை, பயின்று இனிது இருந்து,
கொல்லை உழு கொழு ஏய்ப்ப, பல்லே
எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி,
உயிர்ப்பிடம் பெறுஅது, ஊண் முனிந்து,

ஊருக்குச் செல்லப் பரிசிலன் விரும்புதல்

ஒருநாள்,
'செயிர்த்து எழு தெவ்வர் திறை துறை போகிய
செல்வ! சேறும், எம் தொல் பதிப் பெயர்ந்து' என,
மெல்லெனக் கிளந்தனம் ஆக,

அரசன் பிரிய மனமின்றிப் பரிசு வழங்கி அனுப்புதல்

'வல்லே
அகறிரோ எம் ஆயம் விட்டு?' என,
சிரறியவன்போல் செயிர்த்த நோக்கமொடு,
'துடி அடி அன்ன தூங்கு நடைக் குழவியொடு
பிடி புணர் வேழம் பெட்டவை கொள்க!' என,
தன் அறி அளவையின் தரத்தர, யானும்
என் அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு,
இன்மை தீர வந்தனென்.

கரிகால் வளவனது சிறப்புக்கள்

வென் வேல்
உருவப் பல் தேர் இளையோன் சிறுவன்,

முருகற் சீற்றத்து உரு கெழு குருசில்,
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி,
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப,
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப,
பவ்வ மீமிசைப் பகற் கதிர் பரப்பி,
வெவ் வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்கு,
பிறந்து தவழ் கற்றதன் தொட்டு, சிறந்த நன்
நாடு செகிற்கொண்டு நாள்தொறும் வளர்ப்ப,

வெண்ணிப் போர் வெற்றி

ஆளி நன் மான் அணங்குடைக் குருளை—
மீளி மொய்ம்பின் மிகு வலி செருக்கி—
முலைக் கோள் விடாஅ மாத்திரை, ஞெரேரென,
தலைக்கோள் வேட்டம் களிறு அட்டாங்கு,
இரும் பனம் போந்தைத் தோடும், கருஞ் சினை
அர வாய் வேம்பின் அம் குழைத் தெரியலும்,
ஓங்கு இருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இரு பெரு வேந்தரும் ஒரு களத்து அவிய,
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன் தாள்,
கண் ஆர் கண்ணி, கரிகால் வளவன்
தாள் நிழல் மருங்கின் அணுகுபு குறுகித்
தொழுது முன் நிற்குவிர்ஆயின்,

கரிகாலனது கொடையின் சிறப்பு

பழுது இன்று,
ஈற்று ஆ விருப்பின், போற்றுபு நோக்கி, நும்
கையது கேளாஅளவை, ஒய்யென,
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கி, தூய
கொட்டைக் கரைய பட்டு உடை நல்கி,
'பெறல் அருங் கலத்தில் பெட்டாங்கு உண்க' என,
பூக் கமழ் தேறல் வாக்குபு தரத்தர,
வைகல் வைகல் கை கவி பருகி,
எரி அகைந்தன்ன ஏடு இல் தாமரை
சுரி இரும் பித்தை பொலியச் சூட்டி,
நூலின் வலவா நுணங்கு அரில் மாலை
வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய,
கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந் தேர்
ஊட்டு உளை துயல்வர, ஓரி நுடங்க,
பால் புரை புரவி நால்கு உடன் பூட்டி,

காலின் ஏழ் அடிப் பின் சென்று, ‘கோல் இன்
தாறு களைந்து, ஏறு’ என்று ஏற்றி, வீறு பெறு
பேர் யாழ் முறையுளிக் கழிப்பி, நீர் வாய்த்
தண் பணை தழீஇய தளரா இருக்கை
நன் பல் ஊர நாட்டொடு, நன் பல்,
வெரூஉப் பறை நுவலும், பரூஉப் பெருந் தடக் கை,
வெருவரு செலவின், வெகுளி வேழம்
தரவிடைத் தங்கல் ஓவிலனே: வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க்கு ஆர்த்தி, தெற்றென,
செலவு கடைக்கூட்டுதிர்ஆயின், பல புலந்து,
நில்லா உலகத்து நிலைமை தூக்கி,
‘செல்க’ என விடுக்குவன்அல்லன்—

சோழ நாட்டின் வளமும் வனப்பும்

ஒல்லெனத்
திரை பிறழிய இரும் பௌவத்துக்
கரை சூழ்ந்த அகன் கிடக்கை,
மா மாவின் வயின் வயின் நெல்,
தாழ் தாழைத் தண் தண்டலை,
கூடு கெழீஇய, குடிவயினான்,
செஞ் சோற்ற பலி மாந்திய
கருங் காக்கை கவர்வு முனையின்,
மனை நொச்சி நிழல் ஆங்கண்,
ஈற்று யாமை தன் பார்ப்பு ஓம்பவும்;
இளையோர் வண்டல் அயரவும் ; முதியோர்
அவை புகு பொழுதில் தம் பகை முரண் சொலவும்—
முடக் காஞ்சிச் செம் மருதின்,
மடக் கண்ண மயில் ஆல,
பைம் பாகற் பழம், துணரிய
செஞ் சுளைய கனி, மாந்தி;
அறைக் கரும்பின் அரி நெல்லின்
இனக் களமர் இசை பெருக,
வறள் அடும்பின் இவர் பகன்றைத்
தளிர்ப் புன்கின் தாழ் காவின்
நனை ஞாழலொடு மரம் குழீஇய
அவண் முனையின், அகன்று மாறி,
அவிழ் தளவின் அகன் தோன்றி,
நகு முல்லை, உகு தேறு வீ,
பொன் கொன்றை, மணிக் காயா,
நல் புறவின் நடை முனையின்,

சுற வழங்கும் இரும் பௌவத்து
இறவு அருந்திய இன நாரை
பூம் புன்னைச் சினைச் சேப்பின்,
ஓங்கு திரை ஒலி வெரீஇ,
தீம் பெண்ணை மடல் சேப்பவும்;
கோட் தெங்கின், குலை வாழை,
கொழுங் காந்தள், மலர் நாகத்து,
துடிக் குடிஞை, குடிப் பாக்கத்து,
யாழ் வண்டின் கொளைக்கு ஏற்ப,
கலவம் விரித்த மட மஞ்ஞை
நிலவு எக்கர்ப் பல பெயர;

நில மயக்கமும் நல் ஆட்சியும்

தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்;
தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்;
குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்
நறும் பூங் கண்ணி குறவர் சூட;
கானவர் மருதம் பாட, அகவர்
நீல் நிற முல்லைப் பல் திணை நுவல;
கானக் கோழி கதிர் குத்த,
மனைக் கோழி தினைக் கவர;
வரை மந்தி கழி மூழ்க,
கழி நாரை வரை இறுப்ப;
தண் வைப்பின் நால் நாடு குழீஇ,
மண் மருங்கினான் மறு இன்றி,
ஒரு குடையான் ஒன்று கூற,
பெரிது ஆண்ட பெருங் கேண்மை,
அறனொடு புணர்ந்த திறன் அறி செங்கோல்,
அன்னோன் வாழி, வென் வேற் குருசில்!

காவிரியின் வெள்ளச் சிறப்பு

மன்னர் நடுங்கத் தோன்றி, பல் மாண்
எல்லை தருநன் பல் கதிர் பரப்பி,
குல்லை கரியவும், கோடு எரி நைப்பவும்,
அருவி மா மலை நிழத்தவும், மற்று அக்
கருவி வானம் கடற்கோள் மறப்பவும்,
பெரு வறன் ஆகிய பண்பு இல் காலையும்—
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்,

துறைதுறைதோறும், பொறை உயிர்த்து ஒழுகி,
நுரைத் தலைக் குரைப் புனல் வரைப்பு அகம் புகுதொறும்,
புனல் ஆடு மகளிர் கதுமெனக் குடைய—

காவிரி நாட்டு வயல் வளம்

கூனி, குயத்தின் வாய் நெல் அரிந்து,
சூடு கோடாகப் பிறக்கி, நாள்தொறும்,
குன்று எனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந் தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்,
சாலி நெல்லின், சிறை கொள் வேலி,
ஆயிரம் விளையுட்டு ஆக,
காவிரி புரக்கும் நாடு கிழவோனே.

சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடியது.

பொருநர் ஆற்றுப்படை முற்றும்

தனிப் பாடல்கள்

ஏரியும், ஏற்றத்தினானும், பிறர் நாட்டு
வாரி சுரக்கும் வளன் எல்லாம் தேரின்,
அரிகாலின் கீழ் உகூஉம் அந் நெல்லே சாலும்—
கரிகாலன் காவிரி சூழ் நாடு. 1

அரிமா சுமந்த அமளி மேலானைத்
திருமாவளவன் எனத் தேறேன்; திரு மார்பின்
மான மால் என்றே தொழுதேன்; தொழுத கைப்
போனவா பெய்த வளை! 2

முச் சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச் சக்கரமே அளந்ததால்—செய்ச் செய்
அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய் புனல் நீர்நாடன்
கரிகாலன் கால் நெருப்பு உற்று. 3

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகவர் 220
அகில் 238
அடும்பு 195
அணங்கு 20, 35
அரக்கு 43
அரசவை 55
அரம் 144
அரவு 83
அரிமா வெ. 2
அருவி 235
அலவன் 9
அவல் 216
அவிழ்ப் பதம் 112
அவை 188
அவையல் 16
அறல் 25
அறன் 230
அறுவை 83
அனந்தர் 94

ஆ

ஆணி 10
ஆயம் 123
ஆரம் 238
ஆளி 139
ஆறு அலை கள்வர் 21

இ

இரவு 118
இரு சீர்ப் பாணி 71
இரு பெரு வேந்தர் (சேர பாண்டியர்) 146
இலவு இதழ் 27
இழை 85
இளையோர் 187
இறவு 204

ஈ

ஈர் 79
ஈர்க்கு 36
ஈற்று 151

உ

உருவப் பல் தேர் இளையோன் சிறுவன் 130
உழு கொழு 117

ஊ

ஊசல் 30
ஊண் 119
ஊர் 170
ஊன் 105, 118

எ

எக்கர் 213
எண் நாள் திங்கள் 11
எரி 159, 234
எல்லை 118
எழாஅல் 56

ஏ

ஏரி வெ. 1
ஏழின் கிழவன் 63
ஏற்றம் வெ. 1

ஒ

ஒக்கல் 61

க

கடல் 236
கடுந் தெற்று மூடை 245
கதிர் 222
கரிகால் வளவன் 148
கரிகாலன் வெ. 1, 3
கருங் காக்கை 184
கரும்பு 193, 216
கருனை 115
கல்லா இளைஞர் 100
கலம் 156
கலவம் 212
கழி நாரை 225
களமர் 194
களிறு 49, 142
கனவு 98

கா

கா 196
காஞ்சி 189
காடு உறை கடவுள் 52
காந்தள் 33, 209
காயா 201
காலை 96
காவிரி 248, வெ. 1
காழ் 105
கானக்கோழி 222

கி

கிழங்கு 214
கிளி 34

கு

குடை 228
குயம் 242
குருளை 139
குல்லை 234
குழை 30
குறவர் 219
குறிஞ்சி 218

கே

கேள்வி 18

கொ

கொட்டைக் கரைய பட்டு உடை 155
கொடுஞ்சி 163
கொல்லை 117
கொளை 211
கொன்றை 201

கோ

கோடியர் 57
கோடு (யானைக் கொம்பு) 163
கோயில் 90

ச

சக்கரம் வெ. 3

சா

சாலி 246
சாறு 2

சீ

சீறியாழ் 109

சு

சுற 203

சூ

சூடு 243

செ

செங்கோல் 230
செஞ் சுளைய கனி (பலாப் பழம்) 192
செஞ் சோற்ற பலி 183
செந் நிலன் 43

சோ

சோறு 2

ஞா

ஞாழல் 197

த

தடாரி 70
தண்டலை (சோலை) 181
தவம் செய் மாக்கள் 91
தளவு 199

தா

தாமரை 159
தாய் 132
தாயம் 132
தாழை (தெங்கு) 181
தாறு 167

தி

திருமாவளவன் வெ. 2
திவவு 15
தினை 223
தினையரிசி 16

து

துடி 125
துடிக் குடிஞை 210
துராஅய் 103
துருவை 103
துறை 239
துன்னற் சிதாஅர் 81, 154

தெ

தெங்கு 208
தெவ்வர் 120, 133

தே

தேர் 163
தேறல் 157
தேறு (தேற்று) 200
தேன் 214

தொ

தொடி 14

தோ

தோன்றி 199

ந

நரம்பு 17
நறவு 215
நறை 238
நன் பகல் அந்தி 46

நா

நாகம் 209
நாடு 170, வெ.1
நாய் 42
நாரை 204
நால் நாடு 226

நீ

நீர் நாடன் வெ. 3

நூ

நூலின் வலவா நுணங்கு அரில் மாலை 161

நெ

நெல் 242, 246, வெ. 1
நெல்லி 193
நெற் கூடு 180-182

ப

பகன்றை 195
பச்சை 5

பசி 61, 62
பண் 109
பணை (மருத நிலம்) 169
பதி 121
பரதவர் 218
பரல் 115
பவ்வம் 135
பழுமரம் 64
பனம் போந்தை 143

பா

பாக்கம் 210
பாகற் பழம் 191
பாசி வேர் 153
பாடல் 56
பாடினி 47, 162
பாணி 48, 110
பாம்பு 13, 69
பார்ப்பு 186
பால் 165
பாலை (பண்) 22

பி

பிடி 40, 126
பிறை 25

பு

புரவி 165
புழுக்கு 103
புறவு (காடு) 202
புன்கு 196
புன்னை 205
புனலாடு மகளிர் 241

பெ

பெண்ணை 207

பே

பேர் யாழ் 168
பேன் 79

பொ

பொருந 3
பொலங் கலம் 86

போ

போர்வை 8

பௌ

பௌவம் 178, 203

ம

மஞ்ஞை 212
மண் (மார்ச்சனை) 109
மது 217
மந்தி 224
மயிர் குறை கருவி 29
மயில் 47, 190
மரல் 45
மராஅ 50
மருதம் 220
மருது 189
மருப்பு (யாழின் தண்டு) 13
மழை 26, 84
மனை 185
மனைக் கோழி 223

மா

மாடம் 84
மாதர் 19
மாயோள் 14
மாலை 96
மான் 217

மீ

மீளி 140
மீன் 215

மு

முத்தம் 162
முத்து 28
முதியோர் 187
முரசு 54
முருகன் 131
முல்லை 200, 221
முழவு 109

மூ

மூவர் 54

யா

யாமை 186
யாழ் 211

வ

வண்டல் அயர 187
வண்டு 39
வண்டு சூழ் நிலை 97
வலை 51
வளை வெ. 2
வறன் 237

வா

வாயில் 66
வாழை 208
வானம் 236

வி

விடியல் 72
விரகு (பண்ணியாரம்) 108
வில் 26
விறலியர் 110

வெ

வெண்ணி 147
வெவ் வெஞ் செல்வன் 136
வெள்ளி 72

வே

வேம்பின் அம் குழைத் தெரியல் 144
வேர் (வேர்ப்பு) 80
வேல் 129
வேழம் 126, 172
வேளாண் வாயில் 75

வை

வைப்பு 226

சிறுபாண் ஆற்றுப்படை

வேனிற்காலம்

மணி மலைப் பணைத் தோள் மா நில மடந்தை
அணி முலைத் துயல்வரூஉம் ஆரம் போல,
செல்புனல் உழந்த சேய் வரல் கான்யாற்றுக்
கொல்கரை நறும் பொழில் குயில் குடைந்து உதிர்த்த
புதுப் பூஞ் செம்மல் சூடி, புடை நெறித்து,
கதுப்பு விரித்தன்ன காழ் அக நுணங்கு அறல்
அயில் உருப்பனைய ஆகி, ஐது நடந்து,
வெயில் உருப்புற்ற வெம் பரல் கிழிப்ப,
வேனில் நின்ற வெம் பத வழி நாள்
காலை ஞாயிற்றுக் கதிர் கடாவுறுப்ப,
பாலை நின்ற பாலை நெடு வழிச்
சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ—

அழகு மிக்க விறலியருடன் இளைப்பாறும் இரவலன்

ஐது வீழ் இகு பெயல் அழகு கொண்டு, அருளி,
நெய் கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பு என,
மணிவயின் கலாபம், பரப்பி, பல உடன்
மயில், மயிற் குளிக்கும் சாயல்; சாஅய்
உயங்கு நாய் நாவின் நல் எழில் அசைஇ,
வயங்கு இழை உலறிய அடியின்; அடி தொடர்ந்து,
ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக் கையின்,
சேர்ந்து—உடன் செறிந்த குறங்கின், குறங்கு—என,
மால் வரை ஒழுகிய வாழை: வாழைப்
பூ எனப் பொலிந்த ஓதி; ஓதி,
நளிச் சினை வேங்கை நாள்மலர் நச்சி,
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின் சுணங்கு பிதிர்ந்து,
யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளி,
பூண் அகத்து ஒடுங்கிய வெம் முலை; முலை என,
வண் கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன் சேறு இகுதரும் எயிற்றின்; எயிறு என,
குல்லை அம் புறவில் குவி முகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின்; மெல் இயல்;
மட மான் நோக்கின்—வாள் நுதல் விறலியர்
நடை மெலிந்து அசைஇய நல் மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவர,
பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
இன் குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,

நைவளம் பழுநிய நயம் தெரி பாலை
கை வல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனி கூர் எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப,
முனிவு இகந்திருந்த முது வாய் இரவல!

வஞ்சி மாநகரின் சிறப்பு

கொழு மீன் குறைய ஒதுங்கி, வள் இதழ்க்
கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை
பைங் கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல் இலை மயிர்ப் புறம் தைவர,
விளையா இளங் கள் நாற, மெல்குபு பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குட புலம் காவலர் மருமான்—ஒன்னார்
வட புல இமயத்து, வாங்கு விற் பொறித்த
எழு உறழ் திணி தோள், இயல் தேர்க் குட்டுவன்—
வரு புனல் வாயில் வஞ்சியும் வறிதே: அதாஅன்று,

தமிழ் நிலை பெற்ற மதுரையின் மாண்பு

நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து
அறை வாய்க் குறுந் துணி அயில் உளி பொருத
கை புனை செப்பம் கடைந்த மார்பின்,
செய் பூங் கண்ணி செவிமுதல் திருத்தி,
நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்
நகாஅர் அன்ன, நளி நீர் முத்தம்
வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,
தோள் புறம் மறைக்கும், நல் கூர் நுசுப்பின்,
உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்
தத்து நீர் வரைப்பின் கொற்கைக் கோமான்;
தென் புலம் காவலர் மருமான்; ஒன்னார்
மண் மாறு கொண்ட, மாலை வெண் குடை,
கண் ஆர் கண்ணி, கடுந் தேர்ச் செழியன்;
தமிழ் நிலைபெற்ற, தாங்கு அரு மரபின்
மகிழ் நனை, மறுகின் மதுரையும் வறிதே: அதாஅன்று,

உறந்தையின் சிறப்பு

நறு நீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறு நீர்க் கடம்பின் துணை ஆர் கோதை,
ஓவத்து அன்ன உண்துறை மருங்கில்

கோவத்து அன்ன கொங்கு சேர்பு உறைத்தலின்,
வரு முலே அன்ன வண் முகை உடைந்து,
திரு முகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை,
ஆசு இல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன
சேயிதழ் பொதிந்த செம் பொற் கொட்டை,
ஏம இன் துணே தழீஇ, இறகு உளர்ந்து,
காமரு தும்பி காமரம் செப்பும்
தண் பணே தழீஇய தளரா இருக்கைக்
குண புலம் காவலர் மருமான்—ஒன்ஞர்
ஓங்கு எயிற் கதவம் உருமுச் சுவல் சொறியும்
தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை,
நாடா நல் இசை, நல் தேர்ச் செம்பியன்—
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே: அதாஅன்று,

ஏழு வள்ளல்களின் சிறப்பு

வானம் வாய்த்த வள மலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந் திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்,
பெருங் கல் நாடன், பேகனும்; சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடு வழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந் தேர் நல்கிய,
பிறங்கு வெள் அருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான், பாரியும்; கறங்கு மணி
வால் உளேப் புரவியொடு வையகம், மருள,
ஈர நல் மொழி, இரவலர்க்கு ஈந்த,
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சு வரு நெடு வேல்,
கழல் தொடித் தடக் கை, காரியும்; நிழல் திகழ்,
நீல, நாகம் நல்கிய, கலிங்கம்
ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த,
சாவம் தாங்கிய சாந்து புலர் திணி தோள்,
ஆர்வ நன் மொழி, ஆயும்; மால் வரைக்
கமழ் பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளே தீம் கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்,
அரவக் கடல் தானே, அதிகனும்; கரவாது,
நட்டோர் உவப்ப, நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த, முனே விளங்கு தடக் கை,
துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங் கோட்டு
நளி மலே நாடன், நள்ளியும்; நளி சினே
நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்து,
குறும் பொறை, நல் நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலேந்த

ஓரிக் குதிரை, ஓரியும்; என ஆங்கு,
எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந் நுகம்,

நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பு

விரி கடல் வேலி வியலகம் விளங்க,
ஒரு தான் தாங்கிய—உரனுடை நோன் தாள்—
நறு வீ நாகமும் அகிலும் ஆரமும்
துறை ஆடு மகளிர்க்குத் தோட் புணை ஆகிய
பொரு புனல் தரூஉம், போக்கு அரு மரபின்,
தொல் மா இலங்கைக் கருவொடு பெயரிய
நல் மா இலங்கை மன்னருள்ளும்,
மறு இன்றி விளங்கிய வடு இல் வாய் வாள்,
உறு புலித் துப்பின், ஓவியர் பெருமகன்—
களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி,
பிடிக் கணம் சிதறும் பெயல் மழைத் தடக் கை,
பல் இயக் கோடியர் புரவலன்—பேர் இசை
நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு,

புரவலனிடம் பரிசுபெறச் சென்ற விதம்

தாங்கு அரு மரபின் தன்னும், தந்தை
வான் பொரு நெடு வரை வளனும், பாடி,
முன் நாள் சென்றனம் ஆக—

வருத்தம் போக்கிய வண்மைச் சிறப்பு

இந் நாள்,
திறவாக் கண்ண சாய் செவிக் குருளை
கறவாப் பால் முலை கவர்தல் நோனாது,
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்—
காழ் சோர், முது சுவர்க் கணச் சிதல் அரித்த,
பூழி பூத்த புழல் காளாம்பி:
ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்,
வளைக் கை, கிணை மகள் வள் உகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பு இலி வெந்ததை,
மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,
இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்
அழி பசி வருத்தம் வீட; பொழி கவுள்,
தறுகண் பூட்கை, தயங்கு மணி மருங்கின்,
சிறு கண் யானையொடு பெருந் தேர் எய்தி;
யாம் அவண் நின்றும் வருதும்.

எயிற்பட்டினத்தில் கிடைக்கும் பொருள்கள்

நீயிரும்,
இவண் நயந்து இருந்த இரும் பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு, செல்குவிர்ஆயின்,
அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,
கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்,
நெடுங் காற் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர,
பாடல் சான்ற நெய்தல் நெடு வழி,
மணி நீர் வைப்பு, மதிலொடு பெயரிய,
பனி நீர்ப் படுவின், பட்டினம் படரின்—
ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரை மர விறகின்
கரும் புகைச் செந் தீ மாட்டி, பெருந் தோள்,
மதி ஏக்கறூஉம் மாசு அறு திரு முகத்து,
நுதி வேல் நோக்கின், நுளைமகள் அரித்த
பழம் படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி,
அறற் குழற் பாணி தூங்கியவரொடு,
வறற் குழற் சூட்டின், வயின் வயின் பெறுகுவிர்:

வேலூர் வளமும் எயினர் விருந்தும்

பைந் நனை அவரை பவழம் கோப்பவும்,
கரு நனைக் காயாக் கண மயில் அவிழவும்,
கொழுங் கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்,
செழுங் குலைக் காந்தள் கை விரல் பூப்பவும்,
கொல்லை நெடு வழிக் கோபம் ஊரவும்,
முல்லை சான்ற முல்லை அம் புறவின்,
விடர் கால் அருவி வியல் மலை மூழ்கிச்
சுடர் கால்மாறிய செவ்வி நோக்கி,
திறல் வேல் நுதியின் பூத்த கேணி,
விறல் வேல் வென்றி, வேலூர் எய்தின்—
உறு வெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ் சோறு,
தேமா மேனிச் சில் வளை ஆயமொடு
ஆமான் சூட்டின அமைவரப் பெறுகுவிர்.

ஆமூர் வளமும் உழவர் விருந்தும்

நறும் பூங் கோதை தொடுத்த நாட் சினைக்
குறுங் காற் காஞ்சிக் கொம்பர் ஏறி,
நிலை அருங் குட்டம் நோக்கி, நெடிது இருந்து,
புலவுக் கயல் எடுத்த பொன் வாய் மணிச் சிரல்
வள் உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை,
முள் அரைத் தாமரை முகிழ் விரி நாட்போது
கொங்கு கவர் நீலச் செங் கட் சேவல்
மதி சேர் அரவின் மானத் தோன்றும்
மருதம் சான்ற மருதத் தண் பணை,
அந்தணர் அருகா, அருங் கடி வியல் நகர்,
அம் தண் கிடங்கின், அவன் ஆமூர் எய்தின்—
வலம் பட நடக்கும் வலி புணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,
பிடிக் கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்துத்
தொடிக் கை மகடூஉ, மக முறை தடுப்ப,
இருங் காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு,
கவைத் தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்.

நல்லியக் கோடனின் மூதூர் அண்மையது என்று அறிவித்தல்

எரி மறிந்தன்ன நாவின், இலங்கு எயிற்று,
கரு மறிக் காதின், கவை அடிப் பேய்மகள்
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர், பணைத் தாள்,
அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப,
நீறு அடங்கு தெருவின் அவன் சாறு அயர் மூதூர்
சேய்த்தும் அன்று; சிறிது நணியதுவே.

வாயிலின் சிறப்பு

பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்,
அரு மறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்,
கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன,
அடையா வாயில் அவன் அருங் கடை குறுகி—

நல்லியக்கோடன் அவையில் வீற்றிருக்கும் காட்சி

அவன் குணங்களும் அவற்றை ஏத்துவோரும்

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன் முகம் உடைமையும், இனியன் ஆதலும்,
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த;
அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ் சினம் இன்மையும்,

ஆண் அணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள் மீக் கூற்றத்து வயவர் ஏத்த;
கருதியது முடித்தலும், காமுறப் படுதலும்,
ஒரு வழிப் படாமையும், ஓடியது உணர்தலும்,
அரி ஏர் உண்கண் அரிவையர் ஏத்த;
அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த;
பல் மீன் நடுவண் பால் மதி போல,
இன் நகை ஆயமொடு இருந்தோற் குறுகி—

யாழ் வாசித்து, அரசனைப் புகழ்ந்து பாடுதல்

பைங் கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன,
அம் கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்;
மணி நிரைத்தன்ன வனப்பின்; வாய் அமைத்து,
வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து,
கானக் குமிழின் கனி நிறம் கடுப்ப,
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு; தேம் பெய்து,
அமிழ்து பொதிந்து இலிற்றும், அடங்கு புரி நரம்பின்;
பாடு துறை முற்றிய பயன் தெரி கேள்விக்
கூடு கொள் இன் இயம்—குரல் குரல் ஆக,
நூல் நெறி மரபின், பண்ணி, 'ஆனாது,
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை' எனவும்,
'இளையோர்க்கு மலர்ந்த மார்பினை' எனவும்,
'ஏரோர்க்கு நிழன்ற கோலினை' எனவும்,
'தேரோர்க்கு அழன்ற வேலினை' எனவும்,
நீ சில மொழியா அளவை—

பாணர் முதலியோர்க்கு அவன் உண்டி முதலியன கொடுத்தல்

மாசு இல்,
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ,
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்
பூ விரி கச்சைப் புகழோன் தன்முன்,
பனிவரை மார்பன், பயந்த நுண் பொருட்
பனுவலின் வழாஅப் பல் வேறு அடிசில்,
வாள் நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங் கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி,
ஆனா விருப்பின், தான் நின்று ஊட்டி,

நல்லியக்கோடன் அளிக்கும் பரிசில்

திறல் சால் வென்றியொடு தெவ்வுப் புலம் அகற்றி,
விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி,
நயவர், பாணர், புன்கண் தீர்த்தபின்,
வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு;
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான் மதி ஊர்கொண்டாங்கு,
கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில் வாய் நேமியொடு,
சிதர் நனை முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ் சினைத்
ததர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள் அரக்கு எறிந்த உருக்குறு போர்வை,
கருந் தொழில் வினைஞர் கைவினை முற்றி,
ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு;
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன் தாள்
வாள் முகப் பாண்டில் வலவனொடு; தரீஇ,
அன்றே விடுக்கும், அவன் பரிசில்—

நல்லியக்கோடனது புகழும் பண்பும்

மென் தோள்,
துகில் அணி அல்குல், துளங்கு இயல் மகளிர்
அகில் உண விரித்த அம் மென் கூந்தலின்,
மணி மயில் கலாபம் மஞ்சு இடைப் பரப்பி,
துணி மழை தவழும் துயல் கழை நெடுங் கோட்டு,
எறிந்து உரும் இறந்த ஏற்று-அருஞ் சென்னி,
குறிஞ்சிக் கோமான், கொய் தளிர்க் கண்ணி,
செல் இசை நிலைஇய பண்பின்,
நல்லியக்கோடனை நயந்தனிர் செலினே.

ஒய்மான் நாட்டு நல்லியக்கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது.

சிறுபாண் ஆற்றுப்படை முற்றும்

தனிப் பாடல்கள்

அணி இழையார்க்கு ஆர் அணங்கு ஆகி, மற்று அந் நோய்
தணி மருந்தும் தாமே ஆம் என்ப—மணி மிடை பூண்
இம்மென் முழவின் எயிற்பட்டின நாடன்
செம்மல் சிலை பொருத தோள். 1

நெடு வரைச் சந்தனம் நெஞ்சம் குளிர்ப்பப்
படும், அடும் பாம்பு ஏர் மருங்குல்—இடு கொடி
ஓடிய மார்பன் உயர் நல்லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும். 2

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகளம் (பத்தர்) 224
அகில் 116, 263
அஞ்சினர் 210
அட்டில் 132
அடிசில் 241
அதிகன் 103
அந்தணர் 187, 204
அமிழ்து 227
அயில் 7
அரக்கு 74, 256
அரவு 185
அரிசி 194
அரிவையர் 215
அருவி 90, 170
அலவன் 195
அவரை 164
அவைப்பு 194
அழிபடை 211
அறல் 6
அறிந்தோர் 209
அறுவை 236
அன்னம் 146

ஆ

ஆண் அணி 211
ஆமான் சூட்டு 177
ஆமூர் 188
ஆய் 99
ஆயம் 176, 220
ஆரம் (ஆர்) 253
ஆரம் (சந்தனம்) 116
ஆரம் (முத்து வடம்) 2
ஆல் அமர் செல்வன் 97
ஆவியர் பெருமகன் 86

இ

இமயம் 48
இயம் 125, 229
இரவலர் 93
இரவலன் 40
இலங்கை 119, 120
இளையோர் 232
இன் புளி வெஞ் சோறு 175

ஈ

ஈகைச் செந் நுகம் 113

உ

உமட்டியர் 60
உமணர் 55
உரும் 266
உலக்கை 193
உழவர் தங்கை 190
உளி 52, 252
உறந்தை 83

ஊ

ஊகம் 221

எ

எயில் 247
எயிற்பட்டின நாடன் வெ. 1
எயிற்றியர் 175
எயிறு 28
எருது 189
எருந்து (கிளிஞ்சில்) 58
எருமை 42
எழு 112
எழுவர் 113

ஏ

ஏம இன் துணை 76
ஏரோர் 233

ஒ

ஒக்கல் 139
ஒட்டகம் 154
ஒழுகை 55

ஓ

ஓதி 22
ஓரி 111
ஓரிக் குதிரை 111
ஓவம் 70
ஓவியர் பெருமகன் 122

ஔ

ஔவை 101

க

கச்சை 239
கடம்பு 69
கடல் 114, 150
கடவுள் மால் வரை 205
கடை 138
கண்ணி 65, வெ.2
கணை 238
கதுப்பு 6, 14
கயல் 181
கருந் தொழில் வினைஞர் 257
கல்லா இளைஞர் 33
கலவை 195
கலாபம் 15
கலிங்கம் 85, 96
கழுநீர் 42

கழை 265
கள் 45
களிறு 123
கறி 43

கா

கா (காண்டவ வனம்) 238
காஞ்சி 179
காந்தள் 167
காம்பு 236
காமரம் (சீகாமரம்) 77
காயா 165
காரி 95, 110
காரிக் குதிரை 110
காலை 10
காளாம்பி 134
கான்யாறு 3
கானல் 150

கி

கிடங்கில் 160
கிடங்கில் கோமான் 160
கிடங்கு 188
கிலுகிலி 61

கு

குட்டம் 180
குட்டுவன் 49
குடபுலம் 47
குடபுலம் காவலர் மருமான் 47
குணபுலம் 79
குணபுலம் காவலர் மருமான் 79
குதிரை 110, 111
குப்பை 137
குமிழ் 225
குயில் 4
குரம்பை 174
குரல் 229
குருளை 130
குல்லை 29
குழற் சூட்டு 163
குழற் பாணி 162
குளவி 46
குறங்கு 20
குறடு 252
குறிஞ்சிக் கோமான் 267

கே

கேணி 172
கேள்வி 228

கொ

கொங்கு 71
கொங்கு கவர் நீலச் செங்கட் சேவல் 184
கொட்டம் 166
கொட்டை 75
கொல்லை 168
கொற்கைக் கோமான் 62

கோ

கோங்கு 25
கோடியர் 109, 125
கோபம் 168
கோமான் 91
கோவம் 71
கோள்மீன் 242

ச

சந்தனம் வெ. 2

சா

சாந்து 98
சாவம் (வில்) 98
சாறு 201

சி

சிதல் 133
சிரல் 181
சிலை வெ. 1
சிற்றினம் 207

சீ

சீறியாழ் 35

சு

சுடர் கால் மாறிய செவ்வி 171
சுணங்கு 24
சுரன் 12
சுரும்பு 24, 87

செ

செம்பியன் 82
செம்மல் 5
செருந்தி 147
செழியன் 65

ஞா

ஞாயிறு 10, 243

த

தங்கை 190
தமனியம் 147
தமிழ் 66
தளிர்க் கண்ணி 267

தா

தாமரை 73, 183
தாழை 146
தானை 103

தி

திவவு 222

து

துகில் 262
தும்பி 77
துறை ஆடு மகளிர் 117

தூ

தூங்கு எயில் 81
தூணி 238

தெ

தெரு 201
தெவ்வுப் புலம் 246
தென் புலம் 63
தென் புலம் காவலர் மருமான் 63

தே

தேம் 226
தேர் 65, 82, 142
தேரோர் 234
தேறல் 159, 237

தொ

தொடி 81, 95, 192

ந

நட்டோர் 104
நடைப் பரிகாரம் 104
நயவர் 248
நரம்பு 34, 227
நல்லியக்கோடன் 126, 269, வெ.2
நள்ளி 107
நறவு 51
நன் மொழி 99

நா

நாகம் 88, 96, 108, 116
நாய் 17, 132

நி

நிணன் 198
நித்திலம் 149
நிதியம் 249

நு

நுங்கு 27
நுணவம் 51
நுளைமகள் 158

நூ

நூல் (இசை நூல்) 230

நெ

நெய் 14
நெய்தல் 151
நெல்லி 100

நே

நேமி 253

நை

நைவ்ளம் 36

நோ

நோய் வெ. 1

ப

பச்சை 226
படப்பை 160
பணை 1, 78
பரதவர் 159
பரிசில் 261
பரிசில் வாழ்க்கை 218
பரிசிலர் 218
பலவு 43
பவழம் 164
பறம்பு 91
பனிவரை 240
பனுவல் (மடை நூல்) 241

பா

பாகர் 258
பாடல் 151
பாடு துறை 228
பாண்டில் 260
பாண்மகன் 37
பாணர் 248
பாம்பு 221, 237, வெ. 2
பாரி 91
பாலை 11, 36

பி

பிடி 19, 191
பிடிக் கணம் 124
பிணன் 199

பு

புரவி 92
புலவர் 203
புலி 122
புன்னை 149

பெ

பெண்ணை 27

பே

பேகன் 87
பேய்மகள் 197
பேர் ஒக்கல் 144

பொ

பொய்கை 68
பொருநர் 204
பொற்கலம் 244

போ

போர்வை 256

ம

மகடூஉ 192
மகமுறை 192
மகாஅர் 56
மஞ்சள் 44
மஞ்சு 264
மஞ்ஞை 85
மணி 1, 148
மதி 157, 185, 219, 251
மதில் 152

மதிலொடு பெயரிய பனிநீர்ப் படுவின்
பட்டினம் (எயிற்பட்டினம்) 152 - 153
மதுரை 67
மந்தி 56
மயில் 16, 165, 264
மராஅம் 12
மருதத் தண் பணை 186
மருதம் 186
மருந்து வெ. 1
மலை 1
மழை 106, 124, 265
மறி 197
மறை 204

மா

மா 259
மாநில மடந்தை 1

மீ

மீன் 41, 219

மு

முசுண்டை 166
முண்டகம் 148
முத்தம் 57
முதுவோர் 231
முருக்கு 254
முல்லை 30, 89, 169
முல்லைஅம் புறவு 169
முல்லை சான்ற கற்பு 30
முழவு வெ. 1
முனை 105

மூ

மூதூர் 201

யா

யானை 142, 200

வ

வஞ்சி 50
வயவர் 212, 249
வரையாது கொடுத்தல் 217
வலவன் 260
வள்ளியோர் 38
வளை 176

வா

வாயில் 206
வாழை 21
வாழைப்பூ 21 - 22
வாள் 121, 212
வான் (தேவருலகம்) 128
வானம் 84

வி

வியலகம் 114
விரைமரம் 155
விற் பொறித்தல் 48
விறலியர் 31

வெ

வெண்குடை 64
வெண் சோறு 194

வே

வேங்கை 23
வேல் 94, 102, 158, 172, 173, 234, 247
வேலூர் 173
வேளை 137
வேனில் 9

வை

வையம் 38

பெரும்பாண் ஆற்றுப்படை

பாணனது யாழின் வருணனை

அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி,
பகல் கான்று, எழுதரு பல் கதிர்ப் பருதி
காய் சினம் திருகிய கடுந் திறல் வேனில்,
பாசிலை ஒழித்த பராஅரைப் பாதிரி
வள் இதழ் மா மலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சை;
பரியரைக் கமுகின் பாளை அம் பசும் பூக்
கரு இருந்தன்ன, கண்கூடு செறி துளை;
உருக்கியன்ன, பொருத்துறு போர்வை;
சுனை வறந்தன்ன, இருள் தூங்கு வறு வாய்;
பிறை பிறந்தன்ன, பின் ஏந்து கவைக் கடை;
நெடும் பணைத் திரள் தோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி ஏய்க்கும், மெலிந்து வீங்கு திவவின்;
மணி வார்ந்தன்ன, மா இரு மருப்பின்;
பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
தொடை அமை கேள்வி—இட வயின் தழீஇ,

பாணனது வறுமை

வெந் தெறற் கனலியொடு மதி வலம் திரிதரும்
தண் கடல் வரைப்பில், தாங்குநர்ப் பெறாது,
பொழி மழை துறந்த புகை வேய் குன்றத்துப்
பழுமரம் தேரும் பறவை போல,
கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவு வாய்ப் பாண!—

பரிசு பெற்றோன் தன் செல்வ நிலையை எடுத்து உரைத்தல்

பெரு வறம் கூர்ந்த கானம் கல்லெனக்
கருவி வானம் துளி சொரிந்தாங்கு,
பழம் பசி கூர்ந்த எம் இரும் பேர் ஒக்கலொடு
வழங்கத் தவாஅப் பெரு வளன் எய்தி,
வால் உளைப் புரவியொடு வயக் களிறு முகந்துகொண்டு,
யாம் அவணின்றும் வருதும்—

திரையனது சிறப்பை அறிவித்தல்

நீயிரும்,
இரு நிலம் கடந்த திரு மறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந் நீர்த்

திரை தரு மரபின், உரவோன் உம்பல்,
மலர் தலை உலகத்து மன் உயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்,
இலங்கு நீர்ப் பரப்பின் வளை மீக்கூறும்
வலம்புரி அன்ன, வசை நீங்கு சிறப்பின்,
அல்லது கடிந்த அறம் புரி செங்கோல்,
பல் வேல் திரையற் படர்குவிர்ஆயின்—
கேள், அவன் நிலையே; கெடுக நின் அவலம்!

திரையனது ஆணை

அத்தம் செல்வோர் அலறத் தாக்கி,
கைப் பொருள் வெளவும் களவு ஏர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று, அவன் கடியுடை வியன் புலம்;
உருமும் உரறுது; அரவும் தப்பா;
காட்டு மாவும் உறுகண் செய்யா:
வேட்டு, ஆங்கு, அசைவுழி அசைஇ, நசைவுழித் தங்கி,
சென்மோ, இரவல! சிறக்க நின் உள்ளம்!

உப்பு வாணிகர் செல்லும் நெடிய வழி

கொழுஞ் சூட்டு அருந்திய, திருந்து நிலை ஆரத்து,
முழவின் அன்ன முழுமர உருளி,
எழூஉப் புணர்ந்தன்ன பரூஉக் கை நோன் பார்,
மாரிக் குன்றம் மழை சுமந்தன்ன,
ஆரை வேய்ந்த அறை வாய்ச் சகடம்—
வேழம் காவலர் குரம்பை ஏய்ப்பக்
கோழி சேக்கும் கூடுடைப் புதவின்,
முளை எயிற்று இரும் பிடி முழந்தாள் ஏய்க்கும்
துளை அரைச் சீறுரல் தூங்கத் தூக்கி,
நாடக மகளிர் ஆடு களத்து எடுத்த
விசி வீங்கு இன் இயம் கடுப்பக் கயிறு பிணித்து,
காடி வைத்த கலனுடை மூக்கின்,
மகவுடை மகடூஉப் பகடு புறம் துரப்ப—
கோட்டுஇணர் வேம்பின் ஏட்டுஇலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரு ஏர் எறுழ்த் திணி தோள்,
முடலை யாக்கை, முழு வலி மாக்கள்
சிறு துளைக் கொடு நுகம் நெறிபட நிரைத்த
பெருங் கயிற்று ஒழுகை மருங்கில் காப்ப,
சில் பத உணவின் கொள்ளை சாற்றி,
பல் எருத்து உமணர் பதி போகு நெடு நெறி—

வம்பலர் கழுதைச் சாத்தொடு செல்லும் காட்டு வழி

எல்லிடைக் கழியுநர்க்கு ஏமம் ஆக
மலையவும் கடலவும் மாண் பயம் தரூஉம்
அரும் பொருள் அருத்தும், திருந்து தொடை—நோன் தாள்
அடி புதை அரணம் எய்தி, படம் புக்கு—
பொரு கணை தொலைச்சிய புண் தீர் மார்பின்,
விரவு வரிக் கச்சின், வெண் கை ஒள் வாள்,
வரை ஊர் பாம்பின், பூண்டு புடை தூங்க,
சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை,
கரு வில் ஓச்சிய கண் அகன் எறுழ்த் தோள்,
கடம்பு அமர் நெடு வேள் அன்ன, மீளி,
உடம்பிடித் தடக் கை ஓடா வம்பலர்,
தடவு நிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறு சுளைப் பெரும் பழம் கடுப்ப, மிரியல்
புணர்ப் பொறை தாங்கிய வடு ஆழ் நோன் புறத்து
அணர்ச் செவிக் கழுதைச் சாத்தொடு, வழங்கும்
உல்குடைப் பெரு வழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டு-இயவின்—

எயிற்றியர் குடிசை

நீள் அரை இலவத்து அலங்கு சினை பயந்த
பூளை அம் பசுங் காய் புடை விரிந்தன்ன
வரிப் புற அணிலொடு, கருப்பை ஆடாது,
யாற்று அறல் புரையும் வெரிநுடைக் கொழு மடல்,
வேற் தலை அன்ன வைந் நுதி, நெடுந் தகர்,
ஈத்து இலை வேய்ந்த எய்ப் புறக் குரம்பை—

புல்லரிசி எடுத்தல்

மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி,
ஈன் பிணவு ஒழியப் போகி, நோன் காழ்
இரும்பு தலை யாத்த திருந்து கணை விழுக் கோல்
உளி வாய்ச் சுரையின் மிளிர மிண்டி,
இரு நிலக் கரம்பைப் படு நீறு ஆடி,
நுண் புல் அடக்கிய வெண் பல் எயிற்றியர்—

எயிற்றியர் அளிக்கும் உணவு

பார்வை யாத்த பறை தாள் விளவின்
நீழல் முன்றில், நில உரல் பெய்து,
குறுங் காழ் உலக்கை ஓச்சி, நெடுங் கிணற்று
வல் ஊற்று உவரி தோண்டி, தொல்லை
முரவு வாய்க் குழிசி முரி அடுப்பு ஏற்றி,
வாராது அட்ட, வாடு ஊன், புழுக்கல்—

'வாடாத் தும்பை வயவர் பெருமகன்,
ஓடாத் தானை, ஒண் தொழிற் கழற் கால்,
செவ் வரை நாடன், சென்னியம்' எனினே—
தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ, நும்
பை தீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவிர்.

பாலை நிலக் கானவர்களின் வேட்டை

மான் அடி பொறித்த மயங்கு அதர் மருங்கின்,
வான் மடி பொழுதில், நீர் நசைஇக் குழித்த
அகழ் சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கி,
புகழா வாகைப் பூவின் அன்ன
வளை மருப்பு ஏனம் வரவு பார்த்திருக்கும்
அரை நாள் வேட்டம் அழுங்கின், பகல் நாள்,
பகுவாய் ஞமலியொடு பைம் புதல் எருக்கி,
தொகு வாய் வேலித் தொடர் வலை மாட்டி,
முள் அரைத் தாமரைப் புல் இதழ் புரையும்
நெடுஞ் செவிக் குறு முயல் போக்கு அற வளைஇ,
கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும்
அருஞ் சுரம் இறந்த அம்பர்—

எயினரது அரணில் பெறும் பொருள்கள்

பருந்து பட,
ஒன்னாத் தெவ்வர் நடுங்க, ஓச்சி,
வைந் நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம்
வடி மணிப் பலகையொடு நிரைஇ, முடி நாண்
சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர்;
ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்,
வரைத் தேன் புரையும் கவைக் கடைப் புதையொடு
கடுந் துடி தூங்கும் கணைக் காற் பந்தர்,
தொடர் நாய் யாத்த துன் அருங் கடி நகர்;
வாழ் முள் வேலிச் சூழ் மிளைப் படப்பை,
கொடு நுகம் தழீஇய புதவின், செந் நிலை
நெடு நுதி வயக் கழு நிரைத்த வாயில்,
கொடு வில் எயினக் குறும்பில்—சேப்பின்,
களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன,
சுவல் விளை நெல்லின் செவ் அவிழ்ச் சொன்றி,
ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின்
வறை கால்யாத்தது, வயின்தொறும் பெறுகுவிர்.

குறிஞ்சி நில மக்களின் இயல்பும் தொழிலும்

யானை தாக்கினும், அரவு மேல் செலினும்,
நீல் நிற விசும்பின் வல் ஏறு சிலைப்பினும்,

சூல் மகள் மாறா மறம் பூண் வாழ்க்கை,
வலிக் கூட்டு உணவின் வாட்குடிப் பிறந்த,
புலிப் போத்து அன்ன, புல் அணற் காளை,
செல் நாய் அன்ன கரு வில் சுற்றமொடு,
கேளா மன்னர் கடி புலம் புக்கு,
நாள் ஆ தந்து, நறவு நொடை தொலைச்சி,
இல் அடு கள் இன் தோப்பி பருகி,
மல்லல் மன்றத்து மத விடை கெண்டி,
மடி வாய்த் தண்ணுமை நடுவண் சிலைப்பச்
சிலை நவில் எறுழ்த் தோள் ஓச்சி, வலன் வளையூஉ,
பகல் மகிழ் தூங்கும் தூங்கா இருக்கை
முரண் தலை கழிந்த பின்றை—

கோவலர் குடியிருப்பு

மறிய
குளகு அரை யாத்த குறுங் கால், குரம்பை,
செற்றை வாயில், செறி கழிக் கதவின்,
கற்றை வேய்ந்த கழித் தலைச் சாம்பின்,
அதளோன் துஞ்சும் காப்பின் உதள,
நெடுந் தாம்பு தொடுத்த குறுந் தறி முன்றில்,
கொடு முகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடு முள் வேலி எருப் படு வரைப்பின்,
நள் இருள் விடியல் புள் எழப் போகி—
புலிக் குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி,
ஆம்பி வால் முகை அன்ன கூம்பு முகிழ்
உறை அமை தீம் தயிர் கலக்கி, நுரை தெரிந்து,
புகர் வாய்க் குழிசி பூஞ் சுமட்டு இரீஇ—
நாள் மோர் மாறும் நல் மா மேனி,
சிறு குழை துயல்வரும் காதின், பணைத் தோள்,
குறு நெறிக் கொண்ட கூந்தல், ஆய் மகள்—
அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி,
நெய் விலைக் கட்டிப் பசும் பொன் கொள்ளாள்,
எருமை, நல் ஆன், கரு நாகு, பெறூஉம்
மடி வாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்,
இருங் கிளை ஞெண்டின் சிறு பார்ப்பு அன்ன
பசுந் தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்.

முல்லை நிலக் கோவலரின் குழலிசை

தொடுதோல் மரீஇய வடு ஆழ் நோன் அடி,
விழுத் தண்டு ஊன்றிய மழுத் தின் வன் கை,

உறிக் கா ஊர்ந்த மறுப் படு மயிர்ச் சுவல்,
மேம் பால் உரைத்த ஓரி, ஓங்கு மிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇ, காட்ட
பல் பூ மிடைந்த படலைக் கண்ணி,
ஒன்று அமர் உடுக்கை, கூழ் ஆர் இடையன்—
கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி,
அம் நுண் அவிர் புகை கமழ, கைம் முயன்று
ஞெலிகோல் கொண்ட பெரு விறல் ஞெகிழிச்
செந் தீத் தோட்ட கருந் துளைக் குழலின்
இன் தீம் பாலை முனையின், குமிழின்
புழற் கோட்டுத் தொடுத்த மரல் புரி நரம்பின்
வில் யாழ் இசைக்கும், விரல் எறி, குறிஞ்சி,
பல்காற் பறவை கிளை செத்து, ஓர்க்கும்
புல் ஆர் வியன் புலம் போகி—

முல்லை நிலத்து உழுது உண்பாரது ஊர்களில் கிடைப்பன

முள் உடுத்து
எழு காடு ஓங்கிய தொழுவுடை வரைப்பில்
பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில்,
களிற்றுத் தாள் புரையும் திரி மரப் பந்தர்,
குறுஞ் சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ் சுவர் பறைந்த புகை சூழ் கொட்டில்,
பருவ வானத்துப் பா மழை கடுப்பக்
கரு வை வேய்ந்த, கவின் குடிச் சீறூர்—
நெடுங் குரல் பூளைப் பூவின் அன்ன,
குறுந் தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றி,
புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன,
அவரை வான் புழுக்கு அட்டி, பயில்வுற்று,
இன் சுவை மூரல் பெறுகுவிர்.

மருத நிலத்தைச் சேர்ந்த முல்லைநிலம்

ஞாங்கர்க்
குடி நிறை வல்சிச் செஞ் சால் உழவர்
நடை நவில் பெரும் பகடு புதவில் பூட்டி,
பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில்
உடுப்பு முக முழுக் கொழு மூழ்க ஊன்றி,
தொடுப்பு எறிந்து உழுத துளர் படு துடவை
அரி புகு பொழுதின், இரியல் போகி,
வண்ணக் கடம்பின் நறு மலர் அன்ன
வளர் இளம் பிள்ளை தழீஇ, குறுங் கால்
கறை அணற் குறும்பூழ், கட்சிச் சேக்கும்
வன் புலம் இறந்த பின்றை—

மருத நிலக் கழனிகளில் காணும் காட்சிகள்

நாற்று நடுதல்

மென் தோல்

மிதி உலைக் கொல்லன் முறி கொடிற்றன்ன
கவைத் தாள் அலவன் அளற்று அளை சிதைய,
பைஞ் சாய் கொன்ற மண் படு மருப்பின்
கார் ஏறு பொருத கண் அகன் செறுவின்,
உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர்
முடி நாறு அழுத்திய நெடு நீர்ச் செறுவில்,

நெல் விளைதற் சிறப்பு

களைஞர் தந்த கணைக் கால் நெய்தற்
கள் கமழ் புதுப் பூ முனையின், முட் சினை
முகை சூழ் தகட்ட பிறழ் வாய் முள்ளிக்
கொடுங் கால் மா மலர் கொய்து கொண்டு, அவண
பஞ்சாய்க் கோரை பல்லின் சவட்டி,
புணர் நார்ப் பெய்த புனைவு இன் கண்ணி
ஈருடை இருந் தலை ஆரச் சூடி,
பொன் காண் கட்டளை கடுப்ப, கண்பின்
புன் காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்,
இரும்பு வடித்தன்ன மடியா மென் தோல்,
கருங் கை வினைஞர் காதல் அம் சிறாஅர்
பழஞ் சோற்று அமலை முனைஇ, வரம்பில்
புது வை வேய்ந்த கவி குடில் முன்றில்
அவல் எறி உலக்கைப் பாடு விறந்து, அயல
கொடு வாய்க் கிள்ளை படு பகை வெரூஉம்,
நீங்கா யாணர், வாங்கு கதிர்க் கழனி——

நெல் அரிந்து கடா விடுதல்

கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன,
பைது அற விளைந்த பெருஞ் செந்நெல்லின்
தூம்புடைத் திரள் தாள் துமித்த வினைஞர்
பாம்பு உறை மருதின் ஓங்கு சினை நீழல்,
பலி பெறு வியன் களம் மலிய ஏற்றி,
கணம் கொள் சுற்றமொடு கை புணர்ந்து ஆடும்
துணங்கை அம் பூதம் துகில் உடுத்தவை போல்,
சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின்
குழுமு நிலைப் போரின் முழு முதல் தொலைச்சி,
பகடு ஊர்பு இழிந்த பின்றை, துகள் தப,
வையும் துரும்பும் நீக்கி, பைது அற,
குட காற்று எறிந்த குப்பை, வட பால்
செம்பொன்மலையின், சிறப்பத் தோன்றும்
தண் பணை தழீஇய தளரா இருக்கை——

மருத நிலத்து ஊர்களில் பெறும் உணவுகள்

பகட்டு ஆ ஈன்ற கொடு நடைக் குழவிக்
கவைத் தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்,
ஏணி எய்தா நீள் நெடு மார்பின்,
முகடு துமித்து அடுக்கிய பழம் பல் உணவின்,
குமரி மூத்த கூடு ஓங்கு நல் இல்;
தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நல் தேர் உருட்டிய புதல்வர்
தளர் நடை வருத்தம் வீட, அலர் முலைச்
செவிலி அம் பெண்டிர்த் தழீஇ, பால் ஆர்ந்து,
அமளித் துஞ்சும் அழகுடை நல் இல்;
தொல் பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லல் பேர் ஊர் மடியின், மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்.

ஆலைகளில் கருப்பஞ் சாறும் கட்டியும் அருந்துதல்

மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலின், பல உடன்
கணம் சால் வேழம் கதழ்வுற்றாஅங்கு,
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்,
கரும்பின் தீம் சாறு விரும்பினிர் மிசைமின்.

வலைஞர் குடியிருப்பு

வேழம் நிரைத்து, வெண் கோடு விரைஇ,
தாழை முடித்து, தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை, பறியுடை முன்றில்,
கொடுங் காற் புன்னைக் கோடு துமித்து இயற்றிய
பைங் காய் தூங்கும் பாய் மணற் பந்தர்,
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி,
புலவு நுனைப் பகழியும் சிலையும் மான,
செவ் வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்
மை இருங் குட்டத்து மகவொடு வழங்கி,
கோடை நீடினும் குறைபடல் அறியாத்
தோள் தாழ் குளத்த கோடு காத்திருக்கும்
கொடு முடி வலைஞர் குடிவயிற் சேப்பின்—

வலைஞர் குடியில் பெறும் உணவு

அவையா அரிசி அம் களித் துழவை
மலர் வாய்ப் பிழாவில் புலர ஆற்றி,
பாம்பு உறை புற்றின் குரும்பி ஏய்க்கும்

பூம் புற நல் அடை அளைஇ, தேம் பட
எல்லையும் இரவும் இரு முறை கழிப்பி,
வல் வாய்ச் சாடியின் வழைச்சு அற விளைந்த,
வெந் நீர், அரியல் விரல் அலை, நறும் பிழி,
தண் மீன் சூட்டொடு, தளர்தலும் பெறுகுவிர்.

காலையில் நீர்ப்பூக்களைச் சூடிப் போதல்

பச்சூன் பெய்த சுவல் பிணி பைந் தோல்,
கோள் வல், பாண்மகன் தலை வலித்து யாத்த
நெடுங் கழைத் தூண்டில் நடுங்க நாண் கொளீஇ,
கொடு வாய் இரும்பின் மடி தலை புலம்ப,
பொதி இரை கதுவிய போழ் வாய் வாளை
நீர் நணிப் பிரம்பின் நடுங்கு நிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங் கயம் தீப் பட மலர்ந்த
கடவுள் ஒண் பூ அடைதல் ஓம்பி,
உறை கால் மாறிய ஓங்கு உயர் நனந் தலை
அகல் இரு வானத்துக் குறை வில் ஏய்ப்ப,
அரக்கு இதழ்க் குவளையொடு நீலம் நீடி,
முரட் பூ மலிந்த முது நீர்ப் பொய்கை,
குறுநர் இட்ட கூம்பு விடு பல் மலர்
பெரு நாள் அமையத்துப் பிணையினிர் கழிமின்.

அந்தணரது உறைவிடங்களில் பெறுவன

செழுங் கன்று யாத்த சிறு தாட் பந்தர்,
பைஞ் சேறு மெழுகிய படிவ நல் நகர்,
மனை உறை கோழியொடு ஞமலி துன்னாது,
வளை வாய்க் கிள்ளை மறை விளி பயிற்றும்
மறை காப்பாளர் உறை பதிச் சேப்பின்—
பெரு நல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின், நறு நுதல்,
வளைக் கை மகடூஉ வயின் அறிந்து அட்ட,
சுடர்க் கடை, பறவைப் பெயர்ப் படு வத்தம்,
சேதா நறு மோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங் காய்ப் போழொடு கறி கலந்து,
கஞ்சக நறு முறி அளைஇ, பைந் துணர்
நெடு மரக் கொக்கின் நறு வடி விதிர்த்த
தகை மாண் காடியின், வகைபடப் பெறுகுவிர்.

நீர்ப்பெயற்று என்னும் ஊரின் சிறப்பு

வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇ,
புனல் ஆடு மகளிர் இட்ட பொலங் குழை
இரை தேர் மணிச் சிரல் இரை செத்து எறிந்தென,
புள் ஆர் பெண்ணைப் புலம்பு மடற் செல்லாது,
கேள்வி அந்தணர் அருங் கடன் இறுத்த

வேள்வித் தூணத்து அசைஇ, யவனர்
ஓதிம விளக்கின், உயர்மிசைக் கொண்ட,
வைகுறு மீனின், பைபயத் தோன்றும்
நீர்ப்பெயற்று எல்லைப் போகி—

திமிலர் முதலியோர் உறையும் பட்டினம்

பாற்கேழ்
வால் உளைப் புரவியொடு வட வளம் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளி நீர்ப் படப்பை,
மாடம் ஓங்கிய மணல் மலி மறுகின்,
பரதர் மலிந்த பல் வேறு தெருவின்,
சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின்,
நெல் உழு பகட்டொடு கறவை துன்னு,
ஏழகத் தகரோடு எகினம் கொட்கும்
கூழ் உடை நல் இல்—கொடும் பூண் மகளிர்,
கொன்றை மென் சினைப் பனி தவழ்பவை போல்,
பைங் காழ் அல்குல் நுண் துகில் நுடங்க,
மால் வரைச் சிலம்பில் மகிழ் சிறந்து ஆலும்
பீலி மஞ்ஞையின் இயலி, கால
தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப, உயர் நிலை
வான் தோய் மாடத்து, வரிப் பந்து அசைஇ,
கை புனை குறுந் தொடி தத்த, பைபய,
முத்த வார் மணல் பொற்கழங்கு ஆடும்
பட்டின மருங்கின் அசையின்—

பட்டினத்து மக்களின் உபசரிப்பு

முட்டு இல்,
பைங் கொடி நுடங்கும் பலர் புகு வாயில்
செம் பூத் தூஉய செதுக்குடை முன்றில்,
கள் அடு மகளிர் வள்ளம் நுடக்கிய
வார்ந்து உகு சில் நீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ் சேறு ஆடிய இரும் பல் குட்டிப்
பல் மயிர்ப் பிணவொடு பாயம் போகாது,
நெல் மா வல்சி தீற்றி, பல் நாள்
குழி நிறுத்து, ஓம்பிய குறுந் தாள் ஏற்றைக்
கொழு நிணத் தடியொடு கூர் நறாப் பெறுகுவிர்.

ஓடும் கலங்களை அழைக்கும் கடற்கரைத் துறை

வானம் ஊன்றிய மதலை போல,
ஏணி சாத்திய ஏற்று-அருஞ் சென்னி,
விண் பொர நிவந்த, வேயா மாடத்து—
இரவில் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி
உரவு நீர் அழுவத்து ஓடு கலம் கரையும்
துறை பிறக்கு ஒழியப் போகி—

தோப்புக் குடிகளில் நிகழும் உபசாரம்

கறை அடிக்
குன்று உறழ் யானை மருங்குல் ஏய்க்கும்,
வண் தோட்டுத் தெங்கின் வாடு மடல் வேய்ந்த,
மஞ்சள் முன்றில், மணம் நாறு படப்பை,
தண்டலை உழவர் தனி மனைச் சேப்பின்—
தாழ் கோட் பலவின் சூழ் சுளைப் பெரும் பழம்,
வீழ் இல் தாழைக் குழவித் தீம் நீர்,
கவை முலை இரும் பிடிக் கவுள் மருப்பு ஏய்க்கும்
குலை முதிர் வாழைக் கூனி வெண் பழம்,
திரள் அரைப் பெண்ணை நுங்கொடு, பிறவும்,
தீம் பல் தாரம் முனையின், சேம்பின்
முளைப் புற முதிர் கிழங்கு ஆர்குவிர்.

ஒதுக்குப் புற நாடுகளின் வளம்

பகற் பெயல்
மழை வீழ்ந்தன்ன மாத் தாட் கமுகின்
புடை சூழ் தெங்கின் முப் புடைத் திரள் காய்,
ஆறு செல் வம்பலர் காய் பசி தீரச்
சோறு அடு குழிசி இளக, விழூஉம்
வீயா யாணர் வளம் கெழு பாக்கத்து,
பல் மரம் நீள் இடைப் போகி, நல் நகர்,
விண் தோய் மாடத்து விளங்கு சுவர் உடுத்த,
வாடா வள்ளியின் வளம் பல தரூஉம்
நாடு பல கழிந்த பின்றை—

திருவெஃகாவின் சிறப்பும் திருமால் வழிபாடும்

நீடு குலைக்
காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு,
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்,
வெயில் நுழைபு அறியா, குயில் நுழை பொதும்பர்,
குறுங் காற் காஞ்சி சுற்றிய நெடுங் கொடிப்
பாசிலைக் குருகின் புன் புற வரிப் பூ,
கார் அகல் கூவியர் பாகொடு பிடித்த
இழை சூழ் வட்டம் பால் கலந்தவை போல,
நிழல் தாழ் வார் மணல் நீர் முகத்து உறைப்ப,
புனல் கால் கழீஇய பொழில்தொறும், திரள்கால்
சோலைக் கமுகின் சூல் வயிற்றன்ன
நீலப் பைங் குடம் தொலைச்சி, நாளும்—
பெரு மகிழ் இருக்கை மரீஇ; சிறு கோட்டுக்
குழவித் திங்கள் கோள் நேர்ந்தாங்கு,
சுறவு வாய் அமைத்த சுரும்பு சூழ் சுடர் நுதல்,

நறவு பெயர்த்து அமர்த்த நல் எழில் மழைக் கண்,
மடவரல் மகளிரொடு பகல் விளையாடி;
பெறற்கு அருந் தொல் சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூ மலி பெருந் துறை,
செவ்வி கொள்பவரோடு அசைஇ; அவ் வயின்
அருந் திறற் கடவுள் வாழ்த்தி, சிறிது நும்
கருங் கோட்டு இன் இயம் இயக்கினிர் கழிமின்.

கச்சி மூதூரின் சிறப்பு

காழோர் இகழ் பதம் நோக்கி, கீழ,
நெடுங் கை யானை நெய்ம் மிதி கவளம்
கடுஞ்சூல் மந்தி கவரும் காவில்,
களிறு கதன் அடக்கிய வெளிறு இல் கந்தின்,
திண் தேர் குழித்த குண்டு நெடுந் தெருவில்,
படை தொலைபு அறியா மைந்து மலி பெரும் புகழ்,
கடை கால்யாத்த பல் குடி கெழீஇக்
கொடையும் கோளும், வழங்குநர்த் தடுத்த
அடையா வாயில், மிளை சூழ் படப்பை,
நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி,
சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்,
இழுமென் புள்ளின் ஈண்டு கிளைத் தொழுதிக்
கொழு மென் சினைய கோளியுள்ளும்
பழம் மீக் கூறும் பலாஅப் போல,
புலவுக் கடல் உடுத்த வானம் சூடிய
மலர் தலை உலகத்துள்ளும் பலர் தொழ,
விழவு மேம்பட்ட பழ விறல் மூதூர்—

இளந்திரையனின் போர் வெற்றி

அவ் வாய் வளர் பிறை சூடிச் செவ் வாய்
அந்தி வானத்து ஆடு மழை கடுப்ப,
வெண் கோட்டு இரும் பிணம் குருதி ஈர்ப்ப,
ஈர் ஐம்பதின்மரும், பொருது, களத்து அவிய,
பேர் அமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந் தேர்
ஆராச் செருவின் ஐவர் போல,
அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து,
கச்சியோனே, கை வண் தோன்றல்,
நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய—

அரசனது முற்றச் சிறப்பு

அளியும் தெறலும் எளியஆகலின்,
மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ் பட,
நயந்தோர் தேஎம் நன் பொன் பூப்ப,
நட்புக் கொளல் வேண்டி, நயந்திசினோரும்,
துப்புக் கொளல் வேண்டிய துணையிலோரும்,
கல் வீழ்அருவி கடற் படர்ந்தாங்கு,
பல் வேறு வகையின் பணிந்த மன்னர்—
இமையவர் உறையும் சிமையச் செவ் வரை,
வெண் திரை கிழித்த, விளங்கு சுடர் நெடுங் கோட்டுப்
பொன் கொழித்து இழிதரும், போக்கு அருங் கங்கைப்
பெரு நீர் போகும் இரியல் மாக்கள்
ஒரு மரப் பாணியில் தூங்கியாங்கு—
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ,
செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து,

திரையன் மந்திரச் சுற்றத்தோடு அரசு வீற்றிருக்கும் காட்சி

பெருங் கை யானைக் கொடுந் தொடி படுக்கும்
கருங் கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த
கூடத் திண் இசை வெரீஇ, மாடத்து
இறை உறை புறவின் செங் காற் சேவல்,
இன் துயில் இரியும் பொன் துஞ்சு வியல் நகர்—
குண கடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு,
முறை வேண்டுநர்க்கும், குறை வேண்டுநர்க்கும்,
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி,
இடைத்தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி,
கொடைக் கடன் இறுத்த கூம்பா உள்ளத்து,
உரும்பு இல் சுற்றமோடு —இருந்தோற் குறுகி,

பாணன் அரசனைப் போற்றிய வகை

'பொறி வரிப் புகர்முகம் தாக்கிய வய மான்
கொடு வரிக் குருளை கொள வேட்டாங்கு,
புலவர் பூண் கடன் ஆற்றி, பகைவர்
கடி மதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி அல்லது, வினை உடம்படினும்,
ஒன்றல் செல்லா உரவு வாட் தடக் கை,
கொண்டி உண்டி, தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செரு மேம்படுந!
வெண் திரைப் பரப்பின் கடுஞ் சூர் கொன்ற
பைம் பூண் சேஎய் பயந்த மா மோட்டு,
துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு,
தண்டா ஈகை நின் பெரும் பெயர் ஏத்தி,

வந்தேன், பெரும! வாழிய நெடிது!' என,
இடனுடைப் பேர் யாழ் முறையுளிக் கழிப்பி,
கடன் அறி மரபின் கை தொழூஉப் பழிச்சி,
நின் நிலை தெரியா அளவை—அந் நிலை

பாணர்க்கு விருப்புடன் உணவளித்தல்

நாவல் அம் தண் பொழில் வீவு இன்று விளங்க,
நில்லா உலகத்து நிலைமை தூக்கி,
அந் நிலை அணுகல் வேண்டி, நின் அரைப்
பாசி அன்ன சிதர்வை நீக்கி,
ஆவி அன்ன அவிர் நூற் கலிங்கம்
இரும் பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் உடீஇ,
கொடு வாள் கதுவிய வடு ஆழ் நோன் கை
வல்லோன் அட்ட பல் ஊன் கொழுங் குறை,
அரி செத்து உணங்கிய பெருஞ் செந்நெல்லின்
தெரி கொள் அரிசித் திரள் நெடும் புழுக்கல்,
அருங் கடித் தீம் சுவை அமுதொடு, பிறவும்,
விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்,
மீன் பூத்தன்ன வான் கலம் பரப்பி,
மகமுறை, மகமுறை நோக்கி, முகன் அமர்ந்து,
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி,
மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்—

பரிசு வழங்குதல்

ஆடு வண்டு இமிரா அழல் அவிர் தாமரை
நீடு இரும் பித்தை பொலியச் சூட்டி;
உரவுக் கடல் முகந்த பருவ வானத்துப்
பகற் பெயல் துளியின் மின்னு நிமிர்ந்தாங்கு,
புனை இருங் கதுப்பகம் பொலிய, பொன்னின்
தொடை அமை மாலை விறலியர் மலைய;
நூலோர் புகழ்ந்த மாட்சிய, மால் கடல்
வளை கண்டன்ன வால் உளைப் புரவி,
துணை புணர் தொழில, நால்கு உடன் பூட்டி,
அரித் தேர் நல்கியும் அமையான், செருத் தொலைத்து
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஒழித்த
விசும்பு செல் இவுளியொடு பசும் படை தரீஇ,
அன்றே விடுக்கும் அவன் பரிசில்.

இளந்திரையனது மலையின் பெருமை

இன் சீர்க்
கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்,
மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின்,

கலை பாய்ந்து உதிர்த்த மலர் வீழ் புறவின்,
மந்தி சீக்கும் மா துஞ்சு முன்றில்,
செந் தீப் பேணிய முனிவர், வெண் கோட்டுக்
களிறு தரு விறகின் வேட்கும்,
ஒளிறு இலங்கு அருவிய மலைகிழவோனே.

தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது.

பெரும்பாண் ஆற்றுப்படை முற்றும்

தனிப் பாடல்

கங்குலும் நண் பகலும் துஞ்சா இயல்பிற்றாய்,
மங்குல் சூழ் மாக் கடல் ஆர்ப்பதூஉம்—'வெஞ் சின வேல்
கான் பயந்த கண்ணிக் கடு மான் திரையனை
யான் பயந்தேன்' என்னும் செருக்கு.

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகல் 377
அடிசில் 476
அடி புதை அரணம் 69
அடை 278
அணங்கு 459, 494
அணில் 85
அதளோன் 151
அந்தணர் 315
அந்தி வானம் 413
அமளி 252
அமுது 475
அரக்கு 293
அரவு 42, 134
அரிசி 474
அருவி 427, 500
அரை நாள் 111
அலவன் 208
அவரை 195
அவல் 226
அவையா அரிசி 275
அளகின் வாட்டு 256
அளியும் தெறலும் 422
அளை 163

ஆ

ஆ (பசு) 141, 243
ஆம்பி 157
ஆய்மகள் 162
ஆயம் 311
ஆரம் 46
ஆரை 50
ஆலை 261
ஆவி 469
ஆன் 165

இ

இடையன் 175
இமையவர் 429
இரவலன் 45
இரவில் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி 349
இரவு 279
இரியல் மாக்கள் 432
இரும்பு 437
இல் அடு கள் 142
இலவம் 83
இவுளி 492
இழு மென் புள் 406
இளையர் 268
இறை 439
இன் இயம் 56

ஈ

ஈகை 460
ஈத்து இலை 88
ஈந்து 130
ஈர் 219
ஈர்-ஐம்பதின்மர் (துரியோதனன் முதலிய நூற்றுவர்) 415

உ

உடம்பிடி 76
உடுப்பு (உடும்பு) 200
உடும்பு 132
உதள் 151
உமணர் 65
உரல் 54
உரும் 42
உருளி 47
உருளை 188
உல்கு 81
உலக்கை 97
உலகம் 32, 410
உலை 207
உவரி 98
உழவர் 197
உளி 92
உறிக்கா 171

ஊ

ஊகம் 122
ஊரா நல் தேர் 249
ஊன் கொழுங்குறை 472

எ

எஃகம் 119
எகினம் 326
எந்திரம் (ஆலை) 260
எய் 88
எயிற்றியர் 94
எயினக் குறும்பு 129
எரு 154
எருத்து 65
எருமை 165
எல்லை 279
எழூஉ 48

ஏ

ஏணி 347
ஏழகம் 326
ஏற்றை (ஆண் பன்றி) 344
ஏனம் 110

ஐ

ஐவர் (பஞ்ச பாண்டவர்) 417

ஒ

ஒக்கல் 25, 470
ஒரு மரப் பாணி 433
ஒழுகை 63
ஒன்று அமர் உடுக்கை 175

ஓ

ஓதிம விளக்கு 317
ஓரி 172

க

கங்குல் வெ. 1
கங்கை 431
கச்சி 420
கச்சு 71
கஞ்சக நறு முறி (கருவேப்பிலை) 308
கட்டளை (பொன் உரைகல்) 220
கடம்பு 75, 203
கடல் 18, 67, 409, 427, 483, வெ. 1
கடவுள் 391
கடவுள் ஒண்பூ 290
கடுப்புடைப் பறவை 229
கடும்பு 105
கடை 399
கணை 70, 121
கந்து 396
கமுகு 7, 363, 381
கயம் 289
கயல் 270
கருங்கை வினைஞர் 223
கருங்கோட்டு இன் இயம் 392
கருப்பை 85
கரும்பின் தீம் சாறு 262
கல் 427
கலப்பை 188
கலம் 350
கலம் கரையும் துறை 350
கலை 496
கழங்கு 335
கழல் 102
கழனி 228
கழு 128
கழுதை 80
கழை 285
கள் அடு மகளிர் 339
களவு ஏர் வாழ்க்கை 40
களிறு 27, 187, 372, 396, 499
களைஞர் 213
கறவை 325
கறி 307
கன்று 297
கன்று அமர் நிரை 176

கா

காஞ்சி 375
காட்டுமா 43
காடி (ஊறுகாய்) 310
காடி வைத்த கலன் 57
காந்தள் 372
கார் ஏறு 210
காழ் 329
காழோர் 393
கானம் 23
கானவர் 116

கி

கிணறு 97
கிள்ளை 227, 300
கிளை 163
கின்னரம் 494

கு

குட்டம் 271
குடகாற்று 240
குடுமி கொள்ளும் வென்றி 451-452
குண கடல் 441
குதிர் 186
குமிழ் 180
குயில் 374
குரம்பை 88, 148
குருகு 376
குருதி 414
குரும்பி 277
குழல் 179
குழவித் திங்கள் 384
குழிசி 99, 159, 366
குழை 161
குளகு 148
குளம் 273
குறிஞ்சி (பண்) 182
குறுநர் 295
குறும்பூழ் 205
குறை வேண்டுநர் 443

கூ

கூடம் 438
கூடு (கோழிக் கூடு) 52
கூடு (நெற்கூடு) 247
கூந்தல் 162
கூவியர் 377
கூழ் (சோறு) 327
கூழ் (பாற் சோறு) 175

கொ

கொக்கு (மாமரம்) 309
கொட்டில் 189
கொடி 337
கொடிறு [illegible]07
கொடுஞ்சி 416
கொடு நுகம் 127
கொடுவாய் இரும்பு 286
கொடை 400
கொடைக் கடன் 446
கொண்டி உண்டி 454
கொப்பூழ் 402
கொல்லன் 207, 437
கொன்றை 328

கோ

கோடை 272
கோவலர்குடி 166
கோழி 52, 299
கோள் 400
கோள் (செம்பாம்பு) 384
கோளி 407

ச

சகடம் 50

சா

சாடி 280
சாத்து 80
சாபம் 121

சி

சிமையம் 429
சிரல் 313
சில்பத உணவு 64
சிலதர் 324
சிலம்பி 236
சிலை 145, 269

சு

சுடுமண் 405
சுண்ணம் 221
சுமடு 159
சுரும்பு 385
சுற்றம் 21, 139, 447
சுற்று வீங்கு செறிவு உடை 73
சுறவு 385
சுனை 10

சூ

சூட்டு 46
சூர் (சூரபன்மன்) 457
சூல் மகள் 136

செ

செங்கோல் 36
செந்தீ 498
செந்நெல் 230, 473
செம் பொன் மலை 241
செரு 490
செரு மேம்படுநன் 456
செல்வர் 456
செல்வி 459
செவிலி அம் பெண்டிர் 251
செறு 212
சென்னியம் 103

சே

சேஎய் 458
சேதா 306
சேம்பு 361

ஞ

ஞமலி 112, 132, 299

ஞெ

ஞெகிழி 178, 349
ஞெண்டு 167
ஞெலிகோல் 178

த

தச்சச் சிறுஅர் 248
தண்டலை உழவர் 355
தண்டு 170
தண்ணுமை 144
தயிர் 158
தருப்பை 264

தா

தாமரை 114, 481
தாமரைப் பொகுட்டு 404
தாழை 264
தாழைக் குழவித் தீம் நீர்(இளநீர்) 357
தானை 418

தி

திங்கள் 480
திரி (திரிகை) 187
திரு 29
திரையன் 37, வெ. 1
திவவு 13
தினை 168

தீ

தீம் பல் தாரம் 361

து

துடவை 201
துடி 124
துணங்கை 235
துணங்கை அம் செல்வி 459
துணையிலோர் 426
துப்புக் கொளல் 426
தும்பை 101
துருவை 153
துழவை 275
துறக்கம் 388
துறை 351

தூ

தூண்டில் 285

தெ

தெங்கின் முப் புடைத் திரள் காய் (தேங்காய்) 364
தெங்கு 353
தெய்வ மடை 104
தெரு 397
தெவ்வர் 118, 419, 491

தே

தேளம் 423, 424
தேக்கு இலை 104
தேர் 397, 416, 490

தொ

தொடி 13, 334, 436
தொடு தோல் 169
தொடை 68
தொடை அமை கேள்வி 16
தொண்டையோர் 454
தொழு 185

தோ

தோப்பி 142

ந

நகர் 405, 435, 440
நச்சிச் சென்றோர் 421
நட்புக் கொளல் 425
நண்பகல் (வெண்பா)
நயந்திசினோர் 425
நயந்தோர் 424
நரம்பு 15
நறவு 141, 386
நறு 345

நா

நாகு 165
நாஞ்சில் 199
நாடக மகளிர் 55
நாண் 285
நாய் 125, 139
நாவல் அம் தண் பொழில் 465
நாவாய் 321
நாறு 212
நான்முக ஒருவன் 403

நி

நில்லா உலகம் 466
நில உரல் 96

நீ

நீர்ப் பெயற்று 319
நீலப் பைங் குடம் 382
நீலம் 293

நு

நுகம் 62
நுங்கு 360

நூ

நூலோர் 487
நூற் கலிங்கம் 469

நெ

நெடியோன் 402
நெய் 164
நெய்தல் 213
நெய்ம்மிதி கவளம் 394
நெல் 131, 325

நொ

நொடித்தல் 459

ப

பகடு 58, 198, 238, 325
பகல் செய் மண்டிலம் 442
பகழி 269
பகைவர் 450
பச்சிறு 270
பச்சூன் 283
பச்சை 6
பசும் படை 492
பஞ்சாய்க் கோரை 217
பட்டினம் 336
படப்பை 126, 321, 354
படம் (சட்டை) 69
படலைக் கண்ணி 60, 174
படை 398
பணை 161
பதம் 105
பந்தல் 124, 297
பந்து 333
பயம்பு 108
பரதர் 323
பரிசில் 493
பருதி 2
பருந்து 117
பல்காற் பறவை 183
பலகை 120
பலவு 77
பலாஅ 408
பலி பெறு வியன் களம் 233
பழுமரம் 20
பள்ளி 89
பறவைப் பெயர்ப்படு வத்தம் (இரா
சான்னம் என்னும் நெல்) 305
பறி 265

பா

பாகொடு பிடித்த இழை சூழ் வட்டம்
(அப்பம்) 377-378
பாசி 468
பாண்மகன் 284
பாணன் 22
பாதிரி 4
பாம்பு 232, 277
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் 373
பார் 48
பார்வை 95
பால் 168, 172, 251, 378
பாலை (பண்) 180

பி

பிடி 53, 186, 199, 358
பித்தை 482
பிரம்பு 288
பிழா 276
பிழி 281
பிறை 11

பு

புகர் முகம் தாக்கிய வயமான் 448
புதை (அம்புக்கட்டு) 123
புரவி 27, 320, 488
புல் 94, 184
புலவர் 450
புலவு 269
புலி 156
புலிப் போத்து 138
புழுக்கல் 100, 474
புழுக்கு 195
புறவு 439
புன்னை 266

பூ

பூண் கடன் 450
பூளைப்பூ 192

பெ

பெண்ணை 314, 360
பெருமகன் 101

பே

பேர்யாழ் 462

பை

பைஞ்சாய் 209
பைஞ் சேறு (ஆப்பி) 298

பொ

பொதும்பர் 374
பொழில் 380
பொற் சிலம்பு 332
பொன் 164, 424, 431, 440, 485
பொன் துஞ்சு வியல் நகர் 440
பொன்னின் தொடை அமை மாலை 485-486

போ

போர்வை 9

ம

மகமுறை 478
மஞ்சள் 354
மஞ்ஞை 331, 495
மணி 313
மத்தம் 156
மதலை (தூண்) 346
மதி 17
மதில் 451
மந்தி 395, 497
மரப் பந்தர் 187
மரல் 181
மருது 232
மருப்பு (யாழ்த் தண்டு) 14
மலை 67
மலைந்தோர் 423
மழு 170
மழை 19
மள்ளர் 455
மள்ளன் 455
மறம் பூண் வாழ்க்கை 136
மறவர் 455
மறவன் 455
மறை 300
மறை காப்பாளர் 301
மன்றம் 143, 423
மனவு 132

மா

மா 497
மாடம் 322
மாதுளம் பசுங் காய் 306-307
மான் 106
மான் (குதிரை) வெ. 1
மான் தோல் 89

மி

மிதி உலை 207
மிரியல் 78
மிளை 126, 401
மின்னு 484

மீ

மீளி 75
மீன் 318, 477
மீன் சூட்டு 282

மு

முத்தம் 335
முதியர் 268
முந்நீர் 441
முந்நீர் வண்ணன் 30
முயல் 115
முரசு 33
முழவு 47
முழுவலி மாக்கள் 61
முள்ளி 215
முற்றம் 435
முறை வேண்டுநர் 443
முன்றில் 96, 152, 225
முனிவர் 498

மூ

மூதூர் 411

மோ

மோர் 306, 160

யா

யாழ் 182
யாளி 258
யானை 134, 352, 394, 436

வ

வட வளம் 320
வடி (மா வடு) 309
வண்டல் 311
வண்டு 481
வம்பலர் 76, 365
வயமான் குருளை 448-449
வயவர் 101
வரகு 193
வரைத் தேன் 123
வரைப்பு 405
வல்லோன் 472
வலம்புரி 35
வலிக் கூட்டு உணவு 137
வலை 113
வலைஞர் 274
வள்ளம் 339
வளர் பிறை 412
வளை 34, 304
வளை (சங்கு) 488

வா

வாகைப் பூ 109
வாட்குடி 137
வாடா வள்ளி (வள்ளிக் கூத்து) 370
வாடு ஊன் 100
வாழை 359
வாள் 71, 453, 471
வாளை 287
வான் கலம் 477
வானத்து வடவயின் விளங்கும் சிறு மீன் (அருந்ததி) 302-303
வானம் 24, 346, 409, 480, 483

வி

விசயம் 261
விசும்பு 1, 135
விடியல் 155
விடை 143
விண் 369
வில் 74, 82, 292
விழவு 411
விளவு 95
விறலியர் 486
வினை உடம்படல் 452

வீ

வீழ் இல் தாழை (தெங்கு) 357

வெ

வெண்ணெய் 306
வெண்ணெல் 255
வெள்ளை (வெள்ளாடு) 153
வெறுக்கை 434

வே

வேங்கை வீ 194
வேட்டம் 111
வேம்பு 59
வேயா மாடம் 348
வேல் 87, வெ. 1
வேலி 126, 154
வேள் 75
வேள்வித் தூணம் 316
வேழம் 259, 263
வேழம் காவலர் 51
வேனில் 3

வை

வை (வைக்கோல்) 191, 225, 239

முல்லைப் பாட்டு

நல்லோர் விரிச்சி கேட்டல்

‘நனந் தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மா தாங்கு தடக் கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடு இமிழ் பனிக் கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறு புன் மாலை,
அருங் கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெரு முது பெண்டிர், விரிச்சி நிற்ப—

தலைவியைத் தேற்றுதல்

சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறு துயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், ‘‘கைய
கொடுங் கோற் கோவலர் பின் நின்று உய்த்தர,
இன்னே வருகுவர், தாயர்’’ என்போள்
நன்னர் நன் மொழி கேட்டனம்: அதனால்,
நல்ல, நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து
வருதல், தலைவர், வாய்வது; நீ நின்
பருவரல் எவ்வம் களை, மாயோய்!’ என,
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ் சிறந்து,
பூப் போல் உண் கண் புலம்பு முத்து உறைப்ப—

பாசறையின் இயல்பு

கான் யாறு தழீஇய அகல் நெடும் புறவில்,
சேண் நாறு பிடவமொடு பைம் புதல் எருக்கி,
வேட்டுப் புழை அருப்பம் மாட்டி, காட்ட
இடு முட் புரிசை ஏமுற வளைஇ,
படு நீர்ப் புணரியின் பரந்த பாடி—

யானைப் பாகரது செயல்

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்,
கவலை முற்றம் காவல் நின்ற

தேம் படு கவுள சிறு கண் யானை
ஓங்கு நிலைக் கரும்பொடு, கதிர் மிடைந்து யாத்த,
வயல் விளை, இன் குளகு உண்ணாது, நுதல் துடைத்து,
அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டென,
கவை முட் கருவியின், வடமொழி பயிற்றி,
கல்லா இளைஞர், கவளம் கைப்ப—

வீரர்கள் தங்கும் படைவீடுகள்

கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக் கோல் அசைநிலை கடுப்ப, நல் போர்
ஓடா வல் வில் தூணி நாற்றி—
கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை—
பூந் தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து,
வாங்கு வில் அரணம் அரணம் ஆக,

அரசனுக்கு அமைத்த பாசறை

வேறு பல் பெரும் படை நாப்பண், வேறு ஓர்,
நெடுங் காழ்க் கண்டம் கோலி, அகம் நேர்பு,

மங்கையர் விளக்குக்களை ஏந்துதல்

குறுந் தொடி முன்கை, கூந்தல் அம் சிறு புறத்து,
இரவு பகல் செய்யும் திண் பிடி ஒள் வாள்
விரவு வரிக் கச்சின் பூண்ட, மங்கையர்
நெய் உமிழ் சுரையர் நெடுந் திரிக் கொளீஇ,
கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட,

மெய்காப்பாளர் காவல்புரிதல்

நெடு நா ஒள் மணி நிழத்திய நடு நாள்,
அதிரல் பூத்த ஆடு கொடிப் படாஅர்
சிதர் வரல் அசைவளிக்கு அசைவந்தாங்கு,
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப்
பெரு மூதாளர் ஏமம் சூழ—

நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்

பொழுது அளந்து அறியும், பொய்யா மாக்கள்,
தொழுது, காண்கையர், தோன்ற வாழ்த்தி,
'எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறு நீர்க் கன்னல் இனைத்து' என்று இசைப்ப—

அரசன் படுக்கையில் கண்பொருந்தாது சிந்தனையில் ஆழ்தல்

மத்திகை வளைஇய, மறிந்து வீங்கு செறிவு உடை,
மெய்ப்பை புக்க வெரு வரும் தோற்றத்து,

வலி புணர் யாக்கை, வன்கண் யவனர்
புலித் தொடர் விட்ட புனை மாண் நல் இல்,
திரு மணி விளக்கம் காட்டி, திண் ஞாண்
எழினி வாங்கிய ஈர் அறைப் பள்ளியுள்—
உடம்பின் உரைக்கும், உரையா நாவின்,
படம் புகு மிலேச்சர் உழையர் ஆக,
மண்டு அமர் நசையொடு கண்படை பெறாஅது,

அரசனது சிந்தனை

எடுத்து எறி எஃகம் பாய்தலின், புண் கூர்ந்து,
பிடிக் கணம் மறந்த வேழம்—வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக் கை துமிய,
தேம் பாய் கண்ணி நல் வலம் திருத்தி,
சோறு வாய்த்து ஒழிந்தோர்—உள்ளியும்; தோல் துமிபு
வைந் நுனைப் பகழி மூழ்கலின், செவி சாய்த்து,
உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்;
ஒரு கை பள்ளி ஒற்றி, ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து—

பாசறையில் வெற்றி முழக்கம்

பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்,
நகை தாழ் கண்ணி நல் வலம் திருத்தி,
அரசு இருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை—

தலைவனது பிரிவினால் தலைவி பெற்ற துயரம்

இன் துயில் வதியுநற் காணாள், துயர் உழந்து,
நெஞ்சு ஆற்றுப்படுத்த நிறை தபு புலம்பொடு,
நீடு நினைந்து, தேற்றியும், ஓடு வளை திருத்தியும்,
மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்,
ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து,
பாவை விளக்கில் பரூஉச் சுடர் அழல,
இடம் சிறந்து உயரிய எழு நிலை மாடத்து,
முடங்கு இறைச் சொரிதரும் மாத் திரள் அருவி
இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின—

அரசன் வெற்றியுடன் மீண்டு வருதல்

வென்று, பிறர்
வேண்டு புலம் கவர்ந்த, ஈண்டு பெருந் தானையொடு,
விசயம், வெல் கொடி உயரி, வலன் ஏர்பு,
வயிரும் வளையும் ஆர்ப்ப,

மழையினால் செழித்த முல்லை நிலம் காணுதல்

அயிர

செறி இலைக் காயா அஞ்சனம் மலர,
முறி இணர்க் கொன்றை நன் பொன் கால,
கோடல் குவி முகை அங்கை அவிழ,
தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப,
கானம் நந்திய செந் நிலப் பெரு வழி,
வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகின்,
திரி மருப்பு இரலையொடு மட மான் உகள,
எதிர் செல் வெண் மழை பொழியும் திங்களில்,

அரசனது தேரின் வருகை

முதிர் காய் வள்ளிஅம் காடு பிறக்கு ஒழிய,
துனை பரி துரக்கும் செலவினர்
வினை விளங்கு நெடுந் தேர் பூண்ட மாவே.

காவிரிப் பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது.

முல்லைப் பாட்டு முற்றும்

தனிப் பாடல்கள்

வண்டு அடைந்த கண்ணி வளர் ஆய்ச்சி வாள் நெடுங் கண்
சென்று அடைந்த நோக்கம் இனிப் பெறுவது என்றுகொல்—
கன்று எடுத்து ஓச்சி, கனி விளவின் காய் உகுத்து,
குன்று எடுத்து நின்ற நிலை? 1

புனையும் பொலம் படைப் பொங்கு உளை மான் திண் தேர்
துனையும் துனைபடைத் துன்னார் முனையுள்,
அடல் முகந்த தானை அவர் வாராமுன்னம்,
கடல் முகந்து வந்தன்று, கார்! 2

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அஞ்சனம் 93
அதிரல் 51
அயில் 34
அரசு 79
அருவி 87

ஆ

ஆய்ச்சி வெ. 1
ஆய்மகள் 13

இ

இரலை 99
இல் 62
இழை 84
இன் குளகு 33

ஈ

ஈர் அறைப் பள்ளி 64

உ

உலகம் 1
உவலைக் கூரை 29

எ

எஃகம் 68
எழிலி 5
எழினி 64
எழு நிலை மாடம் 86

க

கச்சு 47
கடகம் 76
கடல் 4, வெ. 2
கண்ணி 71, 78
கதிர் 32
கயிறு வாங்கு இருக்கை 40
கரும்பு 32
கல் 37
கல்லா இளைஞர் 36
கவலை முற்றம் 30
கவளம் 36
கவை முட் கருவி 35
கன்று 12, வெ.1

கா

காய் 93
கார் வெ. 2
காழ்க் கண்டம் 44

கி

கிடுகு 41

கு

குத்தி 40
குந்தம் 41
குருதி 96
குறு நீர்க் கன்னல் 58

கூ

கூடம் 40

கை

கைஅமை விளக்கம் 49

கொ

கொன்றை 94

கோ

கோடல் 95
கோவலர் 15

செ

செந் நிலப் பெருவழி 97

சோ

சோறு வாய்த்து ஒழிந்தோர் 72

த

தலைவர் 20

தா

தாம்பு 12
தானை 90, வெ. 2

தி

திங்கள் 100
திரி 48
திருமணி விளக்கம் 63
திறையர் 19

து

துகில் 53
துன்னர் வெ. 2

தூ

தூணி 39

தெ

தெவ்வர் 18

தே

தேர் 103, வெ. 2

தொ

தொடி 45

தோ

தோன்றி 96

ந

நல்லோர் வாய்ப்புள் 18
நன் மொழி 17

நா

நாழி 9

நெ

நெய் உமிழ் சுரையர் 48
நெல் 8

நே

நேமி 1

ப

பகழி 73
பகைவர் 77
படம் 66
படிவப் பார்ப்பான் 37
பரி 102

பா

பாசறை 79
பாம்பு 70
பாவை விளக்கு 85

பி

பிடவம் 25
பிடி 69

பு

புதல் 25
புரிசை 27
புலித் தொடர் 62

பெ

பெரு முது பெண்டிர் 11
பெரு மூதாளர் 54

பொ

பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள் 55
பொன் 94

ம

மஞ்ஞை 84
மத்திகை 59

மா

மா 2, 74, 103
மாஅல் 3
மாலை 6
மான் 99
மான் (குதிரை) வெ. 2

மி

மிலேச்சர் 66

மு

முக் கோல் 38
முரசு 79
முல்லை 9
முனை 19, வெ. 2

மூ

மூதூர் 7

மெ

மெய்ப்பை 60

ய

யவனர் 61

யா

யாழ் இசை 8
யாறு 24
யானை 31

வ

வடமொழி 35
வண்டு 8
வயிர் 92
வரகு 98
வலம்புரி 2
வள்ளிஅம் காடு 101
வளி 52
வளை 92
வளை (வளையல்) 82

வி

விசயம் 91
விரிச்சி 11
வில் 39, 42
விளவு வெ. 1

வே

வேட்டுப் புழை அருப்பம் 26
வேழம் 69

வை

வையகம் 57

மதுரைக் காஞ்சி

இயற்கை வளம்

ஓங்குதிரை வியன் பரப்பின்
ஒலி முந்நீர் வரம்பு ஆக,
தேன் தூங்கும் உயர் சிமைய
மலை நாறிய வியல் ஞாலத்து,
வல மாதிரத்தான் வளி கொட்ப,
வியல் நாள்மீன் நெறி ஒழுக,
பகற் செய்யும் செஞ் ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண் திங்களும்
மை தீர்ந்து கிளர்ந்து விளங்க,
மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்க,
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய,
நிலனும் மரனும் பயன் எதிர்பு நந்த,

செயற்கைச் செழிப்பு நிலை

நோய் இகந்து நோக்கு விளங்க;
மே தக, மிகப் பொலிந்த
ஓங்கு நிலை வயக் களிறு;
கண்டு தண்டாக் கட்கு இன்பத்து,
உண்டு தண்டா மிகு வளத்தான்,
உயர் பூரிம விழுத் தெருவில்,
பொய் அறியா, வாய்மொழியால்
புகழ் நிறைந்த, நல் மாந்தரொடு
நல் ஊழி அடிப் படர,
பல் வெள்ளம் மீக்கூற,
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!

அகத்தியரின் வழிவந்த சான்றோன்

பிணக் கோட்ட களிற்றுக் குழும்பின்
நிணம் வாய்ப் பெய்த பேய் மகளிர்
இணை ஒலி இமிழ் துணங்கைச் சீர்ப்
பிணை யூபம் எழுந்து ஆட,
அஞ்சு வந்த போர்க்களத்தான்,
ஆண் தலை அணங்கு அடுப்பின்,
வய வேந்தர் ஒண் குருதி

சினத் தீயின் பெயர்பு பொங்க,
தெறல் அருங் கடுந் துப்பின்,
விறல் விளங்கிய விழுச் சூர்ப்பின்,
தொடித் தோட் கை துடுப்பு ஆக
ஆடுற்ற ஊன் சோறு,
நெறி அறிந்த கடி வாலுவன்
அடி ஒதுங்கிப் பின் பெயராப்
படையோர்க்கு முருகு அயர,
அமர் கடக்கும் வியன் தானை—
தென்னவற் பெயரிய துன் அருந் துப்பின்
தொல் முது கடவுட் பின்னர் மேய,
வரைத் தாழ் அருவிப் பொருப்பின் பொருந!

வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழித்தோன்றல்

நால் வகைப் படைகளின் வலிமை

விழுச் சூழிய, விளங்கு ஓடைய,
கடுஞ் சினத்த, கமழ் கடாஅத்து
அளறு பட்ட நறுஞ் சென்னிய,
வரை மருளும் உயர் தோன்றல,
வினை நவின்ற பேர் யானை
சினம் சிறந்து களன் உழக்கவும்;
மா எடுத்த மலி குரூஉத் துகள்
அகல் வானத்து வெயில் கரப்பவும்;
வாம் பரிய கடுந் திண் தேர்
காற்று என்னக் கடிது கொட்பவும்;
வாள் மிகு மற மைந்தர்
தோள் முறையான் வீறு முற்றவும் ;

நெடியோனின் போர்த் திறமை

இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருது, அவரைச் செரு வென்றும்,
இலங்கு அருவிய வரை நீந்தி,
சுரம் போழ்ந்த இகல் ஆற்றல்,
உயர்ந்து ஓங்கிய விழுச் சிறப்பின்,
நிலம் தந்த பேர் உதவி,
பொலந் தார் மார்பின், நெடியோன் உம்பல்!

மன்னர் மன்னனாக விளங்கிய பெருமை

மரம் தின்னூஉ வரை உதிர்க்கும்
நரை உருமின் ஏறு அனையை;
அருங் குழு மிளை, குண்டு கிடங்கின்,
உயர்ந்து ஓங்கிய நிரைப் புதவின்,

நெடு மதில், நிரை ஞாயில்,
அம்பு உமிழ், அயில், அருப்பம்
தண்டாது தலைச் சென்று,
கொண்டு நீங்கிய விழுச் சிறப்பின்—
தென் குமரி வட பெருங்கல்
குண குட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப,
வெற்றமொடு வெறுத்து ஒழுகிய—
கொற்றவர்தம் கோன் ஆகுவை;

கடல்வளம் மிகுந்த சாலியூரைக் கொண்ட வெற்றி

வான் இயைந்த இரு முந்நீர்ப்
பேஎம் நிலைஇய இரும் பௌவத்து,
கொடும் புணரி விலங்கு போழ,
கடுங் காலொடு, கரை சேர,
நெடுங் கொடி மிசை, இதை எடுத்து,
இன் இசைய முரசம் முழங்க,
பொன் மலிந்த விழுப் பண்டம்
நாடு ஆர நன்கு இழிதரும்,
ஆடு இயற் பெரு நாவாய்,
மழை முற்றிய மலை புரையத்
துறை முற்றிய துளங்கு இருக்கை,
தெண் கடல் குண்டு அகழி,
சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ!

குரவை ஒலியும் பிற ஓசைகளும் மலிந்த ஊர்

நீர்த் தெவ்வும் நிரைத் தொழுவர்
பாடு சிலம்பும் இசை, ஏற்றத்
தோடு வழங்கும் அகல் ஆம்பியின்,
கயன், அகைய வயல் நிறைக்கும்,
மென் தொடை வன் கிழாஅர்,
அதரி கொள்பவர் பகடு பூண் தெள் மணி,
இரும் புள் ஒப்பும் இசையே—என்றும்,
மணிப் பூ முண்டகத்து மணல் மலி கானல்
பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப,

பொருநர்க்கு யானை முதலிய பரிசுகளைப் பாண்டியன் கொடுத்தல்

ஒரு சார், விழவு நின்ற வியல் ஆங்கண்—
முழவுத் தோள் முரண் பொருநர்க்கு,
உரு கெழு பெருஞ் சிறப்பின்

இரு பெயர்ப் பேர் ஆயமொடு
இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்,
பொலந் தாமரைப் பூச் சூட்டியும்,
நலம் சான்ற கலம் சிதறும்
பல் குட்டுவர் வெல் கோவே!

முதுவெள்ளிலை என்னும் ஊரின் சிறப்பு

கல் காயும் கடு வேனிலொடு
இரு வானம் பெயல் ஒளிப்பினும்,
வரும் வைகல் மீன் பிறழினும்,
வெள்ளம் மாறுது விளையுள் பெருக,
நெல்லின் ஓதை, அரிநர் கம்பலை,
புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசையே, என்றும்,
சலம் புகன்று சுறவுக் கலித்த
புலவு நீர் வியன் பௌவத்து,
நிலவுக் கானல் முழவுத் தாழைக்
குளிர்ப் பொதும்பர் நளித் தூவல்,
நிரை திமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை,
இருங் கழிச் செறுவின் வெள் உப்புப் பகர்நரொடு,
ஒலி ஓவாக் கலி யாணர்
முதுவெள்ளிலை—

முதுவெள்ளிலையார் ஏவல் கேட்ப, தலையாலங்கானத்தில் பகைவர்களை வென்றமை மீக்கூறும்,

வியல் மேவல் விழுச் செல்வத்து,
இரு வகையான், இசை சான்ற,
சிறுகுடிப் பெருந் தொழுவர்,
குடி கெழீஇய நால் நிலவரொடு,
தொன்று மொழிந்து, தொழில் கேட்ப—
கால் என்னக் கடிது உராஅய்,
நாடு கெட எரி பரப்பி,
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து,
அரசு பட அமர் உழக்கி,
முரசு கொண்டு களம் வேட்ட
அடு திறல் உயர் புகழ் வேந்தே!

கொற்கைக்குத் தலைவன்

நட்டவர் குடி உயர்க்குவை;
செற்றவர் அரசு பெயர்க்குவை;
பேர் உலகத்து மேஎந் தோன்றிச்
சீருடைய விழுச் சிறப்பின்,
விளைந்து முதிர்ந்த விழு முத்தின்,

இலங்கு வளை, இருஞ் சேரி,
கட் கொண்டிக் குடிப் பாக்கத்து,
நல் கொற்கையோர் நசைப் பொருந!

செழியன் பரதவரை வென்றமை

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று,
அஞ்சு வரத் தட்கும் அணங்குடைத் துப்பின்,
கோழ் ஊஉன் குறைக் கொழு வல்சி,
புலவு வில், பொலி கூவை,
ஒன்று மொழி, ஒலி இருப்பின்,
தென் பரதவர் போர் ஏறே!

பகைவரது நாட்டைக் கைக்கொண்ட வெற்றி

அரிய எல்லாம் எளிதினின் கொண்டு,
உரிய எல்லாம் ஓம்பாது வீசி,
நனி புகன்று உறைதும் என்னாது, ஏற்று எழுந்து,
பனி வார் சிமையக் கானம் போகி,
அக நாடு புக்கு, அவர் அருப்பம் வெளவி,
யாண்டு பல கழிய வேண்டு புலத்து இறுத்து,
மேம்பட மரீஇய வெல் போர்க் குருசில்!

பகைவர் தேசம் பாழ்பட்ட நிலை

உறு செறுநர் புலம் புக்கு, அவர்
கடி காவின் நிலை தொலைச்சி,
இழிபு அறியாப் பெருந் தண் பணை
குரூஉக் கொடிய எரி மேய,
நாடு எனும் பேர் காடு ஆக,
ஆ சேந்த வழி மா சேப்ப,
ஊர் இருந்த வழி பாழ் ஆக,
இலங்கு வளை மட மங்கையர்
துணங்கைஅம் சீர்த் தழூஉ மறப்ப,
அவை இருந்த பெரும் பொதியில்,
கவை அடிக் கடு நோக்கத்துப்
பேய் மகளிர் பெயர்பு ஆட,
அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்
நிலத்து ஆற்றும் குழூஉப் புதவின்,
அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ,
கொழும் பதிய குடி தேம்பிச்
செழுங் கேளிர் நிழல் சேர,
நெடு நகர் வீழ்ந்த கரி குதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரல,

கழுநீர் பொலிந்த கண் அகன் பொய்கை,
களிறு மாய் செருந்தியொடு கண்பு அமன்று, ஊர்தர,
நல் ஏர் நடந்த நசை சால் விளை வயல்
பல் மயிர்ப் பிணவொடு கேழல் உகள,
வாழாமையின் வழி தவக் கெட்டு,
பாழ் ஆயின, நின் பகைவர் தேஎம்.

பகைவரை அடக்கி, அவரை அறநெறியில் நிறுத்துதல்

எழாஅத் தோள்—இமிழ் முழக்கின்,
மாஅத் தாள், உயர் மருப்பின்,
கடுஞ் சினத்த களிறு பரப்பி—
விரி கடல் வியன் தானையொடு
முருகு உறழப் பகைத்தலைச் சென்று,
அகல்விசும்பின் ஆர்ப்பு இமிழ,
பெயல் உறழக் கணை சிதறி,
பல புரவி நீறு உகைப்ப,
வளை நரல, வயிர் ஆர்ப்ப,
பீடு அழியக் கடந்து அட்டு, அவர்
நாடு அழிய எயில் வெளவி,
சுற்றமொடு தூ அறுத்தலின்,
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப,
வியன் கண் முது பொழில் மண்டிலம் முற்றி,
அரசியல் பிழையாது அற நெறி காட்டி,
பெரியோர் சென்ற அடி வழிப் பிழையாது,
குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையின்
வழி வழிச் சிறக்க, நின் வலம் படு கொற்றம்!
குணமுதல் தோன்றிய ஆர் இருள் மதியின்
தேய்வன கெடுக, நின் தெவ்வர் ஆக்கம்!

செழியனை வாழ்த்தி, அவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தத் தொடங்குதல்

உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்,
பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே;
முழங்கு கடல் ஏணி மலர் தலை உலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்,
பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே;
தென் புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழு நிதி பெறினும்,
பழி நமக்கு எழுக என்னாய், விழு நிதி
ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே;

அன்னாய்! நின்னொடு, முன்னிலை, எவனோ?
கொன் ஒன்று கிளக்குவல், அடு போர் அண்ணல்!
கேட்டிசின் வாழி! கெடுக நின் அவலம்!
கெடாது நிலைஇயர், நின் சேண் விளங்கு நல் இசை!

உலகைச் சிறப்புற ஆண்டு மறைந்தோர் பலர் எனல்

தவாப் பெருக்கத்து அறா யாணர்,
அழித்து ஆனாக் கொழுந் திற்றி—
இழித்து, ஆனாப் பல சொன்றி,
உண்டு, ஆனாக் கூர் நறவின்—
தின்று, ஆனா இன—வைகல்
நிலன் எடுக்கல்லா ஒண் பல் வெறுக்கைப்
பயன் அறவு அறியா வளம் கெழு திரு நகர்
நரம்பின் முரலும் நயம் வரு முரற்சி
விறலியர் வறுங் கைக் குறுந் தொடி செறிப்ப—
பாணர் உவப்பக் களிறு பல தரீஇ,
கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ,
மறம் கலங்கத் தலைச் சென்று,
வாள் உழந்து, அதன் தாள் வாழ்த்தி,
நாள் ஈண்டிய நல் அகவர்க்குத்
தேரோடு மா சிதறி,
சூடுற்ற சுடர்ப் பூவின்,
பாடு புலர்ந்த நறுஞ் சாந்தின்,
விழுமிய பெரியோர் சுற்றம் ஆக,
கள்ளின் இரும்பைக்கலம் செல உண்டு,
பணிந்தோர் தேஎம் தம் வழி நடப்ப,
பணியார் தேஎம் பணித்துத் திறை கொண்மார்,
பருந்து பறக்கல்லாப் பார்வற் பாசறைப்
படு கண் முரசம் காலை இயம்ப,
வெடி படக் கடந்து, வேண்டு புலத்து இறுத்த,
பணை கெழு பெருந் திறல், பல் வேல் மன்னர்,
கரை பொருது இரங்கும், கனை இரு முந்நீர்த்
திரை இடு மணலினும் பலரே, உரை செல
மலர் தலை உலகம் ஆண்டு, கழிந்தோரே!

மருத நில வளப்பம்

வலைஞர் இயல்பு

அதனால், குண கடல் கொண்டு குட கடல் முற்றி,
இரவும் எல்லையும் விளிவு இடன் அறியாது,
அவலும் மிசையும் நீர்த் திரள்பு ஈண்டி,

கவலை அம் குழும்பின் அருவி ஒலிப்ப,
கழை வளர் சாரல், களிற்றினம் நடுங்க,
வரை முதல் இரங்கும் ஏறொடு வான் ஞெமிர்ந்து,
சிதரற் பெரும் பெயல் சிறத்தலின், தாங்காது,
குண கடற்கு இவர்தரும் குரூஉப் புனல், உந்தி
நிவந்து செல் நீத்தம் குளம் கொளச் சாற்றி,
களிறு மாய்க்கும் கதிர்க் கழனி;
ஒளிறு இலஞ்சி; அடை நிவந்த
முட் தாள சுடர்த் தாமரை,
கள் கமழும் நறு நெய்தல்,
வள் இதழ் அவிழ் நீலம்,
மெல் இலை அரி ஆம்பலொடு,
வண்டு இறைகொண்ட கமழ் பூம் பொய்கை;
கம்புட் சேவல் இன் துயில் இரிய,
வள்ளை நீக்கி, வய மீன் முகந்து,
கொள்ளை சாற்றிய கொடு முடி வலைஞர்
வேழப் பழனத்து நூழிலாட்டு,
கரும்பின் எந்திரம், கட்பின், ஓதை—

மருத நிலத்தில் எழும் பற்பல ஓசைகள்

அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம்
கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே,
ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன் கை வினைஞர் அரிபறை, இன் குரல்
தளி மழை பொழியும் தண் பரங்குன்றில்
கலி கொள் சும்மை, ஒலி கொள் ஆயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்து உடன் ஆடும் இசையே; அனைத்தும்,
அகல் இரு வானத்து இமிழ்ந்து, இனிது இசைப்ப,
குருகு நரல, மனை மரத்தான்
மீன் சீவும் பாண் சேரியொடு,
மருதம் சான்ற தண் பணை சுற்றி, ஒரு சார்—

முல்லை நிலக் காட்சிகள்

சிறு தினை கொய்ய, கவ்வை கறுப்ப,
கருங் கால் வரகின் இருங் குரல் புலர,
ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர,
எழுந்த கடற்றில் நன் பொன் கொழிப்ப,
பெருங் கவின் பெற்ற சிறு தலை நௌவி

மடக் கண் பிணையொடு மறுகுவன உகள,
சுடர்ப் பூங் கொன்றை தாஅய நீழல்,
பாஅயன்ன பாறை அணிந்து,
நீலத்து அன்ன பைம் பயிர் மிசைதொறும்
வெள்ளி அன்ன ஒள் வீ உதிர்ந்து,
சுரி முகிழ் முசுண்டையொடு முல்லை, தாஅய்,
மணி மருள் நெய்தல், உறழ, காமர்
துணி நீர் மெல் அவல், தொய்யிலொடு மலர,
வல்லோன் தைஇய வெறிக்களம் கடுப்ப,
முல்லை சான்ற புறவு அணிந்து, ஒரு சார்—

குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளம்

நறுங் காழ் கொன்று, கோட்டின் வித்திய
குறுங் கதிர்த் தோரை, நெடுங் கால் ஐயவி,
ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி;
இஞ்சி, மஞ்சள், பைங் கறி, பிறவும்,
பல் வேறு தாரமொடு, கல்லகத்து ஈண்டி—
தினை விளை சாரற் கிளி கடி பூசல்,
மணிப் பூ அவரைக் குரூஉத் தளிர் மேயும்
ஆமா கடியும் கானவர் பூசல்,
சேணோன் அகழ்ந்த மடி வாய்ப் பயம்பின்
வீழ் முகக் கேழல் அட்ட பூசல்,
கருங் கால் வேங்கை இருஞ் சினைப் பொங்கர்
நறும் பூக் கொய்யும் பூசல், இருங் கேழ்
ஏறு அடு வயப் புலிப் பூசலொடு, அனைத்தும்,
இலங்கு வெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட,
கருங் காற் குறிஞ்சி சான்ற வெற்பு அணிந்து,
அருங் கடி மா மலை தழீஇ, ஒரு சார்—

பாலை நில இயல்பு

இரு வெதிர்ப் பைந் தூறு கூர் எரி நைப்ப,
நிழத்த யானை மேய் புலம் படர,
கலித்த இயவர் இயம் தொட்டன்ன,
கண் விடுபு உடையூஉத் தட்டை கவின் அழிந்து,
அருவி ஆன்ற அணி இல் மா மலை,
வை கண்டன்ன புல் முளி அம் காட்டு,
கமஞ் சூழ் கோடை விடரகம் முகந்து,
கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை;
இலை வேய் குரம்பை உழை அதட் பள்ளி,

உவலைக் கண்ணி, வன் சொல் இளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப;
நிழல் உரு இழந்த வேனில் குன்றத்து,
பாலை சான்ற, சுரம் சேர்ந்து, ஒரு சார்—

நெய்தல் நில இயல்பு

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்,
அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை,
பரதர் தந்த பல் வேறு கூலம்,
இருங் கழிச் செறுவின், தீம் புளி, வெள் உப்பு,
பரந்து ஓங்கு வரைப்பின் வன் கைத் திமிலர்
கொழு மீன் குறைஇய துடிக் கண் துணியல்,
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந் தலைத் தேஎத்து நன் கலன் உய்ம்மார்,
புணர்ந்து, உடன் கொணர்ந்த புரவியொடு, அனைத்தும்,
வைகல்தோறும் வழிவழிச் சிறப்ப,
நெய்தல் சான்ற வளம் பல பயின்று, ஆங்கு,
ஐம் பால் திணையும் கவினி அமை வர—

மதுரை மாநகரின் அமைப்பும் காட்சிகளும்

பாண்டி நாட்டிற்கு நடுவண் அமைந்து விளங்குதல்

முழவு இமிழும், அகல் ஆங்கண்,
விழவு நின்ற வியல் மறுகின்,
துணங்கை, அம் தழூஉவின், மணம் கமழ் சேரி,
இன் கலி யாணர், குழூஉப் பல பயின்று, ஆங்கு,
பாடல் சான்ற நல் நாட்டு நடுவண்—

பெரும்பாணர் வாழும் இருக்கை

கலை தாய, உயர் சிமையத்து,
மயில் அகவும், மலி பொங்கர்,
மந்தி ஆட, மா விசும்பு உகந்து
முழங்கு கால் பொருத மரம் பயில் காவின்,
இயங்கு புனல் கொழித்த வெண் தலைக் குவவு மணற்
கான் பொழில் தழீஇய அடைகரைதோறும்,
தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய்,
கோதையின் ஒழுகும் விரி நீர் நல் வரல்,
அவிர் அறல், வையைத் துறை துறை தோறும்
பல் வேறு பூத் திரள் தண்டலை சுற்றி,
அழுந்துபட்டிருந்த பெரும்பாண் இருக்கையும்—

அகழியும் மதிலும் பெற்று, மாடங்கள் ஓங்கி நிற்றல்

நிலனும் வளனும் கண்டு அமைகல்லா
விளங்கு பெருந் திருவின் மான விறல் வேள்
அழும்பில் அன்ன, நாடு இழந்தனரும்,
கொழும் பல் பதிய குடி இழந்தனரும்,
தொன்று கறுத்து உறையும் துப்புத் தர வந்த,
அண்ணல் யானை, அடு போர் வேந்தர்
இன் இசை முரசம் இடைப் புலத்து ஒழிய,
பல் மாறு ஓட்டி, பெயர் புறம் பெற்று,
மண் உற ஆழ்ந்த மணி நீர்க் கிடங்கின்,
விண் உற ஓங்கிய பல் படைப் புரிசை,
தொல் வலி நிலைஇய, அணங்குடை நெடு நிலை,
நெய் படக் கரிந்த திண் போர்க் கதவின்,
மழை ஆடும் மலையின் நிவந்த மாடமொடு,
வையை அன்ன வழக்குடை வாயில்,
வகை பெற எழுந்து வானம் மூழ்கி,
சில்காற்று இசைக்கும் பல் புழை நல் இல்,
யாறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்—

பல் வகைக் கொடிகள்

பல் வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப,
மா கால் எடுத்த முந்நீர் போல
முழங்கு இசை நன் பணை அறைவனர் நுவல,
கயம் குடைந்தன்ன இயம் தொட்டு, இமிழ் இசை
மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை,
ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து,
சாறு அயர்ந்து எடுத்த உருவப் பல் கொடி,
வேறு பல் பெயர ஆர் எயில் கொளக் கொள,
நாள்தோறு எடுத்த நலம் பெறு புனை கொடி,
நீர் ஒலித்தன்ன நிலவு வேற் தானையொடு
புலவுப் படக் கொன்று, மிடை தோல் ஓட்டி,
புகழ் செய்து எடுத்த விறல் சால் நன் கொடி,
கள்ளின் களி நவில் கொடியொடு, நன் பல
பல் வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇ,
பெரு வரை மருங்கின் அருவியின் நுடங்க—

நால் வகைப் படைகளின் இயக்கம்

பனைமீன் வழங்கும் வளை மேய் பரப்பின்,
வீங்கு பிணி நோன் கயிறு அரீஇ, இதை புடையூ,
கூம்பு முதல் முருங்க எற்றி, காய்ந்து உடன்
கடுங் காற்று எடுப்ப, கல் பொருது உரைஇ,

நெடுஞ் சுழிப் பட்ட நாவாய் போல,
இரு தலைப் பணிலம் ஆர்ப்ப, சினம் சிறந்து,
கோலோர்க் கொன்று, மேலோர் வீசி,
மென் பிணி வன் தொடர் பேணாது, காழ் சாய்த்து,
கந்து நீத்து உழிதரும் கடாஅ யானையும்;
அம் கண் மால் விசும்பு புதைய, வளி போழ்ந்து,
ஒண் கதிர் ஞாயிற்று ஊறு அளவாத் திரிதரும்
செங் கால் அன்னத்துச் சேவல் அன்ன,
குரூஉ மயிர்ப் புரவி உராலின், பரி நிமிர்ந்து,
கால் எனக் கடுக்கும் கவின் பெறு தேரும்;
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்,
அடிபடு மண்டிலத்து ஆதி போகிய,
கொடி படு சுவல விடு மயிர்ப் புரவியும்;
வேழத்து அன்ன வெரு வரு செலவின்,
கள் ஆர் களமர் இருஞ் செரு மயக்கமும்;
அரியவும் பெரியவும், வருவன பெயர்தலின்—

நாளங்காடியில் பூ முதலிய பொருள்களை விற்றல்

தீம் புழல் வல்சிக் கழற் கால் மழவர்
பூந் தலை முழவின் நோன் தலை கடுப்ப,
பிடகைப் பெய்த கமழ் நறும் பூவினர்,
பல வகை விரித்த எதிர் பூங் கோதையர்,
பலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தர்,
தகை செய் தீம் சேற்று இன் நீர்ப் பசுங் காய்,
நீடு கொடி இலையினர், கோடு சுடு நூற்றினர்,
இரு தலை வந்த பகை முனை கடுப்ப,
இன் உயிர் அஞ்சி, இன்னா வெய்து உயிர்த்து,
ஏங்குவனர் இருந்து, அவை நீங்கிய பின்றை,
பல் வேறு பண்ணியம் தழீஇத் திரி விலைஞர்,
மலை புரை மாடத்துக் கொழு நிழல் இருத்தர—

முது மகளிர் நுகர்பொருள்களை ஏந்தித் திரிதல்

இருங் கடல் வான் கோடு புரைய, வாருற்றுப்
பெரும் பின்னிட்ட வால் நரைக் கூந்தலர்,
நன்னர் நலத்தர், தொல் முது பெண்டிர்—
செந் நீர்ப் பசும் பொன் புனைந்த பாவை
செல் சுடர்ப் பசு வெயில் தோன்றியன்ன
செய்யர், செயிர்த்த நோக்கினர், மடக் கண்,
ஐஇய கலுழும் மாமையர், வை எயிற்று
வார்ந்த, வாயர், வணங்கு இறைப் பணைத் தோள்,
சோர்ந்து உகுவன்ன வயக்குறு வந்திகை,

தொய்யில் பொறித்த சுணங்கு எதிர் இள முலை,
மை உக்கன்ன மொய் இருங் கூந்தல்,
மயில் இயலோரும், மட மொழியோரும்,
கைஇ, மெல்லிதின் ஒதுங்கி, கை எறிந்து,
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்ப,
புடை அமை பொலிந்த வகை அமை செப்பில்
காமர் உருவின் தாம் வேண்டு பண்ணியம்
கமழ் நறும் பூவொடு மனைமனை மறுக—

திருவிழாக் காட்சிகள்

ஏழாம் நாளில் தீர்த்த நீரில் ஆடுதல்

மழை கொளக் குறையாது, புனல் புக மிகாது,
கரை பொருது இரங்கும் முந்நீர் போல,
கொளக் கொளக் குறையாது, தரத் தர மிகாது,
கழுநீர் கொண்ட எழு நாள் அந்தி,
ஆடு துவன்று விழவின், நாடு ஆர்த்தன்றே—
மாடம் பிறங்கிய மலி புகழ்க் கூடல்,
நாள்அங்காடி நனந் தலைக் கம்பலை.

செல்வர்கள் செல்லும் நிலை

வெயிற் கதிர் மழுங்கிய படர் கூர் ஞாயிற்றுச்
செக்கர் அன்ன, சிவந்து நுணங்கு உருவின்,
கண் பொருபு உகூஉம் ஒண் பூங் கலிங்கம்,
பொன் புனை வாளொடு பொலியக் கட்டி,
திண் தேர்ப் பிரம்பின் புரளும் தானை,
கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி,
மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெருந் தெரியல்,
மணி தொடர்ந்தன்ன ஒண் பூங் கோதை,
அணி கிளர் மார்பின் ஆரமொடு அளைஇ,
கால் இயக்கு அன்ன கதழ் பரி கடைஇ,
காலோர் காப்ப, கால் எனக் கழியும்
வான வண் கை வளம் கெழு செல்வர்—

நிலாமுற்றங்களிலிருந்து சேவிக்கும் மகளிர்

நாள் மகிழ் இருக்கை காண்மார், பூணொடு
தெள் அரிப் பொற் சிலம்பு ஒலிப்ப, ஒள் அழல்
தா அற விளங்கிய ஆய் பொன் அவிர் இழை,
அணங்கு வீழ்வு அன்ன, பூந் தொடி மகளிர்,
மணம் கமழ் நாற்றம் தெருவுடன் கமழ,
ஒண் குழை திகழும் ஒளி கெழு திரு முகம்
திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம்,
தெண் கடற் திரையின், அசைவளி புடைப்ப,

நிரை நிலை மாடத்து அரமியந்தோறும்,
மழை மாய் மதியின், தோன்றுபு மறைய—

கோயில்களில் அந்தி விழா

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்து உடன் இயற்றிய
மழு வாள் நெடியோன் தலைவன் ஆக,
மாசு அற விளங்கிய யாக்கையர், சூழ் சுடர்
வாடாப் பூவின், இமையா நாட்டத்து,
நாற்ற உணவின், உரு கெழு பெரியோர்க்கு,
மாற்று அரு மரபின் உயர் பலி கொடுமார்,
அந்தி விழவில் தூரியம் கறங்க—

பௌத்தப் பள்ளி

திண் கதிர் மதாணி, ஒண் குறுமாக்களை,
ஓம்பினர்த் தழீஇ, தாம் புணர்ந்து முயங்கி,
தாது அணி தாமரைப் போது பிடித்தாங்கு,
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேர் இளம் பெண்டிர்,
பூவினர், புகையினர், தொழுவனர், பழிச்சிச்
சிறந்து புறங்காக்கும் கடவுட் பள்ளியும்—

அந்தணர் பள்ளி

சிறந்த வேதம் விளங்கப் பாடி,
விழுச் சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து,
நிலம் அமர் வையத்து ஒரு தாம் ஆகி,
உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும்
அற நெறி பிழையா அன்புடை நெஞ்சின்,
பெரியோர் மேஎய், இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்—

அமணப் பள்ளி

வண்டு படப் பழுநிய தேன் ஆர் தோற்றத்துப்
பூவும் புகையும் சாவகர் பழிச்ச,
சென்ற காலமும், வரூஉம் அமயமும்,
இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து,
வானமும் நிலனும் தாம் முழுது உணரும்,
சான்ற கொள்கை, சாயா யாக்கை,
ஆன்று அடங்கு அறிஞர் செறிந்தனர், நோன்மார்,
கல் பொளிந்தன்ன இட்டு வாய்க் கரண்டைப்
பல் புரிச் சிமிலி நாற்றி, நல்கு வர,

கயம் கண்டன்ன வயங்குடை நகரத்து,
செம்பு இயன்றன்ன செஞ் சுவர் புனைந்து,
நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்து, ஓங்கி,
இறும்பூது சான்ற நறும் பூஞ் சேக்கையும்—
குன்று பல குழீஇப் பொலிவன தோன்ற:

அறம் கூறு அவையம்

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி,
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்—

காவிதி மாக்கள்

நறுஞ் சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்து,
ஆவுதி மண்ணி, அவிர் துகில் முடித்து,
மா விசும்பு வழங்கும் பெரியோர் போல,
நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி,
அன்பும் அறனும் ஒழியாது காத்து,
பழி ஒரீஇ உயர்ந்து, பாய் புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்—

பண்டங்கள் விற்கும் வணிகர்

அற நெறி பிழையாது, ஆற்றின் ஒழுகி,
குறும் பல் குழுவின் குன்று கண்டன்ன,
பருந்து இருந்து உகக்கும் பல் மாண் நல் இல்,
பல் வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவினி,
மலையவும், நிலத்தவும், நீரவும், பிறவும்,
பல் வேறு திரு மணி, முத்தமொடு, பொன் கொண்டு,
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்—

நாற் பெருங் குழு

மழை ஒழுக்கு அறாஅப் பிழையா விளையுள்,
பழையன், மோகூர் அவையகம் விளங்க,
நான் மொழிக் கோசர் தோன்றியன்ன,
தாம் மேஎந்தோன்றிய நாற் பெருங் குழுவும்—

பல்வேறு தொழிலாளர்களின் கூட்டம்

கோடு போழ் கடைநரும், திரு மணி குயினரும்,
சூடுறு நன் பொன் சுடர் இழை புனைநரும்,
பொன்னுரை காண்மரும், கலிங்கம் பகர்நரும்,
செம்பு நிறை கொண்மரும், வம்பு நிறை முடிநரும்,
பூவும் புகையும் ஆயும் மாக்களும்,

எவ் வகைச் செய்தியும் உவமம் காட்டி,
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞரும், பிறரும், கூடி,
தெண் திரை அவிர் அறல் கடுப்ப, ஒண் பல்
குறியவும் நெடியவும் மடி தரூஉ விரித்து,
சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ,
நால் வேறு தெருவினும், கால் உற நிற்றர—

பலரும் கூடி நிற்றலால் உண்டாகும் ஆரவாரம்

கொடும் பறைக் கோடியர் கடும்பு உடன் வாழ்த்தும்,
தண் கடல் நாடன், ஒண் பூங் கோதை
பெரு நாள் இருக்கை, விழுமியோர் குழீஇ,
விழைவு கொள் கம்பலை கடுப்ப—

உணவு வகைகள்

பலவுடன்,
சேறும் நாற்றமும் பலவின் சுளையும்,
வேறு படக் கவினிய தேம் மாங்கனியும்,
பல் வேறு உருவின் காயும், பழனும்,
கொண்டல் வளர்ப்பக் கொடி விடுபு கவினி,
மென் பிணி அவிழ்ந்த குறு முறி அடகும்,
அமிர்து இயன்றன்ன தீம் சேற்றுக் கடிகையும்,
புகழ் படப் பண்ணிய பேர் ஊன் சோறும்,
கீழ் செல வீழ்ந்த கிழங்கொடு, பிறவும்,
இன் சோறு தருநர் பல் வயின் நுகர—

அந்திக் கடையில் எழும் ஓசை மிகுதி

வால் இதை எடுத்த வளி தரு வங்கம்,
பல் வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து
ஒல்லென் இமிழ் இசை மான, கல்லென
நனந் தலை வினைஞர் கலம் கொண்டு மறுக,
பெருங் கடற் குட்டத்துப் புலவுத் திரை ஓதம்
இருங் கழி மருவிப் பாய, பெரிது எழுந்து,
உரு கெழு பானாள் வருவன பெயர்தலின்,
பல் வேறு புள்ளின் இசை எழுந்தற்றே,
அல் அங்காடி அழி தரு கம்பலை.

இரவுக் கால நிலை

ஒண் சுடர் உருப்பு ஒளி மழுங்க, சினம் தணிந்து,
சென்ற ஞாயிறு, நன் பகற் கொண்டு,
குடமுதல் குன்றம் சேர, குணமுதல்,

நாள் முதிர் மதியம் தோன்றி, நிலா விரிபு,
பகல் உரு உற்ற இரவு வர, நயந்தோர்
காதல் இன் துணை புணர்மார், ஆய் இதழ்த்
தண் நறுங் கழுநீர் துணைப்ப, இழை புனையூஉ,
நல் நெடுங் கூந்தல் நறு விரை குடைய,
நரந்தம் அரைப்ப, நறுஞ் சாந்து மறுக,
மென் நூற் கலிங்கம் கமழ் புகை மடுப்ப,
பெண் மகிழ்வுற்ற பிணை நோக்கு மகளிர்
நெடுஞ் சுடர் விளக்கம் கொளீஇ, நெடு நகர்
எல்லை எல்லாம், நோயொடு புகுந்து,
கல்லென் மாலை, நீங்க——

பரத்தையரது வாழ்க்கை

நாணுக் கொள,
ஏழ் புணர் சிறப்பின் இன் தொடைச் சீறியாழ்,
தாழ் பெயற் கனை குரல் கடுப்ப, பண்ணுப் பெயர்த்து,
வீழ் துணை தழீஇ, வியல் விசும்பு கமழ,
நீர் திரண்டன்ன கோதை பிறக்கு இட்டு,
ஆய் கோல் அவிர் தொடி விளங்க வீசி,
போது அவிழ் புது மலர் தெரு உடன் கமழ,
மே தகு தகைய மிகு நலம் எய்தி,
பெரும் பல் குவளைச் சுரும்பு படு பல் மலர்,
திறந்து மோந்தன்ன சிறந்து கமழ் நாற்றத்து,
கொண்டல் மலர்ப் புதல் மானப் பூ வேய்ந்து,
நுண் பூண் ஆகம் வடுக் கொள முயங்கி,
மாயப் பொய் பல கூட்டி, கவவுக் கரந்து,
சேயரும் நணியரும் நலன் நயந்து வந்த
இளம் பல் செல்வர் வளம் தப வாங்கி,
நுண் தாது உண்டு, வறும் பூத் துறக்கும்,
மென் சிறை வண்டினம் மான, புணர்ந்தோர்
நெஞ்சு ஏமாப்ப, இன் துயில் துறந்து,
பழம் தேர் வாழ்க்கைப் பறவை போல,
கொழுங் குடிச் செல்வரும் பிறரும் மேஎய,
மணம் புணர்ந்து ஓங்கிய, அணங்குடை நல் இல்,
ஆய் பொன் அவிர் தொடிப் பாசிழை மகளிர்
ஒண் சுடர் விளக்கத்து, பலர் உடன் துவன்றி,
நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்
வானவ மகளிர் மான, கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்,
யாம நல் யாழ் நாப்பண் நின்ற
முழவின் மகிழ்ந்தனர் ஆடி, குண்டு நீர்ப்

பனித்துறைக் குவவு மணல் முனைஇ, மென் தளிர்க்
கொழுங் கொம்பு கொழுதி, நீர் நனை மேவர,
நெடுந் தொடர்க் குவளை வடிம்பு உற அடைச்சி,
மணம் கமழ் மனைதொறும் பொய்தல் அயர—

ஓணநாள் விழாவில் மறவர் மகிழ்ந்து திரிதல்

கணம் கொள் அவுணர்க் கடந்த பொலந் தார்
மாயோன் மேய ஓண நல் நாள்,
கோணம் தின்ற வடு ஆழ் முகத்த,
சாணம் தின்ற சமம் தாங்கு தடக் கை,
மறம் கொள் சேரி மாறு பொரு செருவில்,
மாறுது உற்ற வடுப் படு நெற்றி,
சுரும்பு ஆர் கண்ணிப் பெரும் புகல் மறவர்
கடுங் களிறு ஓட்டலின், காணுநர் இட்ட
நெடுங் கரைக் காழகம் நிலம் பரல் உறுப்ப,
கடுங் கட் தேறல் மகிழ் சிறந்து திரிதர—

புதல்வர்களை ஈன்ற மகளிர் நீராடுதல்

கணவர் உவப்ப, புதல்வர்ப் பயந்து,
பணைத்து ஏந்து இள முலை அமுதம் ஊற,
புலவுப் புனிறு தீர்ந்து, பொலிந்த சுற்றமொடு,
வள மனை மகளிர் குளநீர் அயர—

சூல்மகளிர் தேவராட்டியுடன் நின்று தெய்வத்திற்கு மடை கொடுத்தல்

திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி,
குரல் புணர் நல் யாழ் முழவோடு ஒன்றி,
நுண் நீர் ஆகுளி இரட்ட, பலவுடன்,
ஒண் சுடர் விளக்கம் முந்துற, மடையொடு,
நல் மா மயிலின் மென்மெல இயலி,
கடுஞ்சூல் மகளிர் பேணி, கைதொழுது,
பெருந் தோட் சாலினி மடுப்ப—

வேலன் வழிபாடும், குரவைக் கூத்தும்

ஒரு சார்,
அருங் கடி வேலன் முருகொடு வளைஇ,
அரிக் கூடு இன் இயம் கறங்க, நேர் நிறுத்து,
கார் மலர்க் குறிஞ்சி சூடி, கடம்பின்
சீர் மிகு நெடு வேட் பேணி, தழூஉப் பிணையூஉ,
மன்றுதொறும் நின்ற குரவை—

இரவின் முதற் சாம நிகழ்ச்சிகள் முடிவு பெறுதல்

சேரிதொறும்,
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ,

வேறு வேறு கம்பலை வெறி கொள்பு மயங்கி,
பேர் இசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்,
சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு,
முந்தை யாமம் சென்ற பின்றை—

இரண்டாம் சாமத்தில் நகரின் நிலை

பணிலம் கலி அவிந்து அடங்க, காழ் சாய்த்து,
நொடை நவில் நெடுங் கடை அடைத்து, மட மதர்,
ஒள் இழை, மகளிர் பள்ளி அயர,
நல் வரி இருஅல் புரையும் மெல் அடை,
அயிர் உருப்பு உற்ற ஆடு அமை விசயம்
கவவொடு பிடித்த வகை அமை மோதகம்,
தீம் சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க,
விழவின் ஆடும் வயிரியர் மடிய,
பாடு ஆன்று அவிந்த பனிக் கடல் புரைய,
பாயல் வளர்வோர் கண் இனிது மடுப்ப—

மூன்றாம் சாம நிகழ்ச்சிகள்

பானாள் கொண்ட கங்குல் இடையது
பேயும் அணங்கும் உருவு கொண்டு, ஆய் கோல்
கூற்றக் கொல் தேர், கழுதொடு கொட்ப,
இரும் பிடி மேஎந் தோல் அன்ன இருள் சேர்பு,
கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்
தொடலை வாளர், தொடுதோல் அடியர்,
குறங்கிடைப் பதித்த கூர் நுனைக் குறும்பிடி,
சிறந்த கருமை நுண் வினை நுணங்கு அறல்,
நிறம் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்,
மென் நூல் ஏணிப் பல் மாண் சுற்றினர்,
நிலன் அகழ் உளியர், கலன் நசைஇக் கொட்கும்,
கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி,
வயக் களிறு பார்க்கும் வயப் புலி போல,
துஞ்சாக் கண்ணர், அஞ்சாக் கொள்கையர்,
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த
நூல் வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி
ஊர் காப்பாளர், ஊக்கருங் கணையினர்,
தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக
மழை அமைந்து உற்ற அரை நாள் அமயமும்,
அசைவிலர் எழுந்து, நயம் வந்து வழங்கலின்,
கடவுள் வழங்கும் கையறு கங்குலும்,
அச்சம் அறியாது ஏமம் ஆகிய
மற்றை யாமம் பகல் உறக் கழிப்பி—

விடியற்காலத்தில் மதுரை மாநகர்

போது பிணி விட்ட கமழ் நறும் பொய்கைத்
தாது உண் தும்பி போது முரன்றாங்கு,
ஓதல் அந்தணர் வேதம் பாட,
சீர் இனிது கொண்டு, நரம்பு இனிது இயக்கி,
யாழோர் மருதம் பண்ண, காழோர்
கடுங் களிறு கவளம் கைப்ப, நெடுந் தேர்ப்
பணை நிலைப் புரவி புல் உணாத் தெவிட்ட,
பல் வேறு பண்ணியக் கடை மெழுக்கு உறுப்ப,
கள்ளோர் களி நொடை நுவல, இல்லோர்
நயந்த காதலர் கவவுப் பிணித் துஞ்சி,
புலர்ந்து விரி விடியல் எய்த, விரும்பி,
கண் பொரா எறிக்கும் மின்னுக் கொடி புரைய,
ஒண் பொன் அவிர் இழை தெழிப்ப இயலி,
திண் சுவர் நல் இல் கதவம் கரைய,
உண்டு மகிழ் தட்ட மழலை நாவின்
பழஞ் செருக்காளர் தழங்கு குரல் தோன்ற,
சூதர் வாழ்த்த, மாகதர் நுவல,
வேதாளிகரொடு, நாழிகை இசைப்ப,
இமிழ் முரசு இரங்க, ஏறு மாறு சிலைப்ப,
பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப,
யானையங்குருகின் சேவலொடு காமர்
அன்னம் கரைய, அணி மயில் அகவ,
பிடி புணர் பெருங் களிறு முழங்க, முழு வலிக்
கூட்டு உறை வய மாப் புலியொடு குழும,
வானம் நீங்கிய நீல் நிற விசும்பின்
மின்னு நிமிர்ந்தனையர் ஆகி, நறவு மகிழ்ந்து,
மாண் இழை மகளிர், புலந்தனர், பரிந்த
பரூஉக் காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு,
பொன் சுடு நெருப்பின் நிலம் உக்கென்ன,
அம் மென் குரும்பைக் காய் படுபு, பிறவும்,
தரு மணல் முற்றத்து அரி ஞிமிறு ஆர்ப்ப,
மென் பூஞ் செம்மலொடு நன் கலம் சீப்ப,
இரவுத் தலைப்பெயரும் ஏம வைகறை—

மதுரையின் சிறப்பு

மை படு பெருந் தோள் மழவர் ஓட்டி,
இடைப் புலத்து ஒழிந்த ஏந்து கோட்டு யானை,
பகைப் புலம் கவர்ந்த பாய் பரிப் புரவி,
வேல் கோல் ஆக, ஆள் செல நூறி,

காய் சின முன்பின் கடுங் கட் கூளியர்
ஊர் சுடு விளக்கின், தந்த ஆயமும்,
நாடுடை நல் எயில் அணங்குடைத் தோட்டி,
நாள்தொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாள் தர வந்த விழுக் கலம், அனைத்தும்,
கங்கை அம் பேர் யாறு கடற் படர்ந்தாஅங்கு
அளந்து கடை அறியா வளம் கெழு தாரமொடு,
புத்தேள் உலகம் கவினிக் காண்வர,
மிக்குப் புகழ் எய்திய பெரும் பெயர் மதுரை—

இரவில் மன்னன் துயில் கொள்ளும் நிலை

சினை தலை மணந்த சுரும்பு படு செந் தீ
ஒண் பூம் பிண்டி அவிழ்ந்த காவில்,
சுடர் பொழிந்து ஏறிய விளங்கு கதிர் ஞாயிற்று
இலங்கு கதிர் இளவெயில் தோன்றியன்ன,
தமனியம் வளைஇய தாவு இல் விளங்கு இழை
நிலம் விளக்குறுப்ப, மே தகப் பொலிந்து,
மயில் ஓரன்ன சாயல், மாவின்
தளிர் ஏர் அன்ன மேனி, தளிர்ப் புறத்து
ஈர்க்கின் அரும்பிய திதலையர், கூர் எயிற்று
ஒண் குழை புணரிய வண் தாழ் காதின்,
கடவுட் கயத்து அமன்ற சுடர் இதழ்த் தாமரைத்
தாது படு பெரும் போது புரையும் வாள் முகத்து,
ஆய் தொடி மகளிர் நறுந் தோள் புணர்ந்து,
கோதையின் பொலிந்த சேக்கைத் துஞ்சி—

காலையில் எழுந்து, அரசர்க்கு உரிய கடன் கழித்தல்

திருந்து துயில் எடுப்ப இனிதின் எழுந்து,
திண் காழ் ஆரம் நீவி, கதிர் விடும்
ஒண் காழ் ஆரம் கவைஇய மார்பின்,
வரிக் கடைப் பிரசம் மூசுவன மொய்ப்ப,
எருத்தம் தாழ்ந்த விரவுப் பூந் தெரியல்,
பொலம் செயப் பொலிந்த நலம் பெறு விளக்கம்
வலி கெழு தடக் கைத் தொடியொடு சுடர் வர,
சோறு அமைவு உற்ற நீருடைக் கலிங்கம்,
உடை அணி பொலியக் குறைவு இன்று கவைஇ,
வல்லோன் தைஇய வரிப் புனை பாவை
முருகு இயன்றன்ன உருவினை ஆகி—

வீரர்கள் மன்னனை வாழ்த்துதல்

வரு புனல் கற் சிறை கடுப்ப, இடை அறுத்து,

ஒன்னர் ஒட்டிய செருப் புகல் மறவர்
வாள் வலம் புணர்ந்த நின் தாள் வலம் வாழ்த்த—

சிறந்த வீரர் முதலியோரைக் கொணர மன்னன் பணித்தல்

'வில்லைக் கவைஇக் கணை தாங்கு மார்பின்
மா தாங்கு எறுழ்த் தோள் மறவர்த் தம்மின்;
கல் இடித்து இயற்றிய இட்டு வாய்க் கிடங்கின்
நல் எயில் உழந்த செல்வர்த் தம்மின்;
கொல் ஏற்றுப் பைந் தோல் சீவாது போர்த்த
மாக் கண் முரசம் ஓவு இல கறங்க,
எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண்,
பெரு நல் யானை போர்க்களத்து ஒழிய,
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்;
புரையோர்க்குத் தொடுத்த பொலம் பூந் தும்பை,
''நீர் யார்?'' என்னது, முறை கருதுபு சூட்டி,
காழ் மண்டு எஃகமொடு கணை அலைக் கலங்கி,
பிரிபு இணை அரிந்த நிறம் சிதை கவயத்து,
வானத்து அன்ன வள நகர் பொற்ப,
நோன் குறட்டு அன்ன ஊன் சாய் மார்பின்,
உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின்;
நிவந்த யானைக் கண நிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப் பூந் தெரியல்
பெருஞ் செய் ஆடவர்த் தம்மின்; பிறரும்
யாவரும் வருக; ஏனோரும் தம்!' என—

மன்னனது பெருங் கொடை

'வரையா வாயில் செறுஅது' இருந்து,
'பாணர் வருக! பாட்டியர் வருக!
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக!' என—
இருங் கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நெடுந் தேர் களிற்றொடும் வீசி—

மன்னனை வாழ்த்துதல்

களம்தோறும் கள் அரிப்ப,
மரம்தோறும் மை வீழ்ப்ப,
நிண ஊன் சுட்டு உருக்கு அமைய,
நெய் கனிந்து வறை ஆர்ப்ப,
குரூஉக் குய்ப் புகை மழை மங்குலின்
பரந்து தோன்ற, வியல் நகரால்,
பல் சாலை முது குடுமியின்,
நல் வேள்வித் துறை போகிய

தொல் ஆணை நல் ஆசிரியர்
புணர் கூட்டு உண்ட புகழ் சால் சிறப்பின்,
நிலம் தரு திருவின் நெடியோன் போல,
வியப்பும், சால்பும், செம்மை சான்றோர்
பலர் வாய்ப் புகர் அறு சிறப்பின் தோன்றி,
அரிய தந்து குடி அகற்றி,
பெரிய கற்று இசை விளக்கி,
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்,
பல் மீன் நடுவண் திங்கள் போலவும்,
பூத்த சுற்றமொடு பொலிந்து, இனிது விளங்கி,
பொய்யா நல் இசை நிறுத்த புனை தார்ப்
பெரும் பெயர் மாறன் தலைவனாக,
கடந்து அடு வாய்வாள் இளம் பல் கோசர்,
இயல் நெறி மரபின் நின் வாய்மொழி கேட்ப,
பொலம் பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த
மறம் மிகு சிறப்பின் குறு நில மன்னர்
அவரும், பிறரும், துவன்றி,
பொற்பு விளங்கு புகழ் அவை நிற் புகழ்ந்து ஏத்த,
இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய
மணம் கமழ் தேறல் மடுப்ப, நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி, பெரும!
வரைந்து நீ பெற்ற நல் ஊழியையே!

தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடியது.

மதுரைக் காஞ்சி முற்றும்

தனிப் பாடல்கள்

பைங் கண் இளம் பகட்டின் மேலானை, பால் மதி போல்
திங்கள் நெடுங் குடையின் கீழானை, அங்கு இரந்து
நாம் வேண்ட, நல் நெஞ்சே! நாடுதி போய், நானிலத்தோர்
தாம் வேண்டும் கூடற் தமிழ். 1

சொல் என்னும் பூம் போது தோற்றி, பொருள் என்னும்
நல் இருந் தீம் தாது நாறுதலால், மல்லிகையின்
வண்டு ஆர் கமழ் தாமம் அன்றே—மலையாத
தண் தாரான் கூடற் தமிழ்? 2

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகம் 508
அகவர் 223
அடகு (இலைக் கறி) 531
அடுப்பு 29
அணங்கு 164, 353, 446, 632
அதரி கொள்பவர் 94
அந்தணர் 656
அந்தணர் பள்ளி 474
அந்தி 427
அந்தி விழவு 460
அமர் 128
அமிர்து 532
அமிழ்து 197
அரசியல் 191
அரசு 132
அரமியம் 451
அரிக் கூடு இன் இயம் 612
அரிநர் கம்பலை 110
அருப்பம் 67, 149
அருவி 42, 57, 299, 306, 374
அல் அங்காடி 544
அவரை 292
அவலும் மிசையும் 240
அவிர் இழை 445
அவுணர் 590
அவை 161
அவை அகம் 508
அழும்பில் 345
அற நெறி 191, 472, 500
அறம் கூறு அவையம் 492
அன்னம் 386, 675

ஆ

ஆ 157
ஆகுளி 606
ஆட்டு 616
ஆண் 29
ஆதி 390
ஆம்பல் 252
ஆம்பி (பன்றிப் பத்தர்) 91
ஆமா 293
ஆயம் (பசுத் திரள்) 692
ஆரம் (சந்தனம்) 715
ஆரம் (முத்து வடம்) 439, 681, 716
ஆலங்கானம் 127
ஆவுதி 494
ஆன்று அடங்கு அறிஞர் 481

இ

இஞ்சி 289
இதை 79, 376, 536
இயம் 304, 363
இயவர் 304
இரவு 8, 239, 686
இரு பெயர்ப் பேர் ஆயம் 101
இரு பெரு வேந்தர் (சேரன் சோழன்) 55
இரு வகையான் இசை (உழவு வாணிகம்) 121
இல் 358, 502, 578, 667
இலஞ்சி 248
இலை (வெற்றிலை) 401
இளம் பல் செல்வர் 572
இறுஅல் 624

ஈ

ஈர்க்கு 708

உ

உடை அணி 722
உண்டு தண்டா மிகு வளம் 17
உந்தி 245
உப்பு 318
உப்புப் பகர்நர் 117
உம்பல் 61
உயர்ந்த தேஎத்து விழுமியோர் 200
உயர்நிலை உலகம் 197, 471
உரும் 63
உரை 616
உலகம் 133, 199, 237
உலகம் ஆண்ட உயர்ந்தோர் 23
உவலைக் கண்ணி 311
உளியர் 641

ஊ

ஊஉன் குறை 141
ஊண் 503
ஊர் 158
ஊர் காப்பாளர் 647
ஊர் சுடு விளக்கு 692
ஊழி 21
ஊன் சோறு 35, 533

எ

எயில் 187, 220, 693
எரி 126
எல்லை 139

ஏ

ஏற்றம் 90
ஏறு 298, 672

ஐ

ஐம்பால் திணை 326
ஐயவி 287
ஐவன வெண்ணெல் 288

ஒ

ஒழுக்கம் 469, 478
ஒன்னார் 726

ஓ

ஓடை 43
ஓண நல் நாள் 591
ஓவு 365

க

கங்குல் 631, 651
கங்கை அம் பேர் யாறு 696
கச்சம் 436
கட் கொண்டி 137
கடம்பு 613
கடல் 86, 180, 199, 407, 450, 540, 629
கடவுட் கயம் 710
கடவுட் பள்ளி (பௌத்தப் பள்ளி) 467
கடவுள் 651
கடறு 274
கடி 153
கடி வாலுவன் 36
கடுங் கால் 78
கடுங் காற்று 378
கடும்பு 523
கடு வேனில் 106
கடை 622
கண்டு தண்டாக் கட்கு இன்பம் 16
கண்ணி 596
கண்ணுள் வினைஞர் 518
கண்பு 172
கண் மாறு ஆடவர் (கள்வர்) 642
கணை 183, 739
கணையினர் 647
கதவு 354
கந்து 383
கம்புட் சேவல் 254
கம்மியர் 521
கயம் 363
கயிறு 376
கரண்டை 482
கரும்பின் எந்திரம் 258
கல் (நங்குரக் கல்) 378
கல்லா மாந்தர் 420
கலந்தோர் 220
கலம் 104
கலன் 322
கலிங்கம் 433, 554, 721
கலிங்கம் பகர்நர் 513
கலை 332
கவ்வை 271
கவயம் 740
கவலை 241, 312
கழல் 436
கழனி 247, 261
கழி 318, 541
கழிச் செறு 117
கழுது 633
கழுநீர் (செங்கழுநீர்ப் பூ) 171, 551
கழுநீர் (நீர்த்த நீர்) 427
கழை 242
கள் 228, 372, 753
கள்ளோர் 662
களம் வேட்டல் 129
களமர் 260, 393
களன் 48
களிற்றினம் 242
களிறு 15, 24, 102, 172, 179, 219, 247, 597, 643, 659, 676, 752
கற் சிறை 725
கறி 289

கா

கா 153, 335, 701
கால் 125
காவிதி மாக்கள் 499
காழ் 286, 382
காழ் மண்டு எஃகம் 739
காழகம் 598
காழோர் 658
காற்று 52
கானல் 96
கானவர் 293

கி

கிடங்கு 64, 351
கிழங்கு 534
கிழாஅர் (பூட்டைப் பொறி) 93
கிளி 291

கு

குட்டுவர் 105
குட கடல் 238
குடமுதல் குன்றம் 547
குடி 131
குடி அகற்றல் 766
குடை வெ. 1
குண்டு அகழி 86
குண கடல் 238, 245
குண குட கடல் எல்லை 71
குணமுதல் 195, 547
குதிர் 169
குய்ப் புகை 757
குரம்பை 310
குரவை 97, 615
குரால் 170
குரிசிலர் 736
குருகு 268
குருசில் 151
குவளை 566, 588
குழை 448, 709
குளநீர் 603
குளம் 246
குறடு 742
குறிஞ்சி 300, 613
குறுநில மன்னர் 776
குறுமாக்கள் 461
குன்று 488, 501

கூ

கூகை 170
கூட்டு உறை வய மாப் புலி 677
கூடல் 429
கூடல் தமிழ் வெ.1, 2
கூம்பு 377
கூலம் 317
கூவியர் 627
கூவை 142
கூளியர் 691

கே

கேழல் 174, 295

கொ

கொடி 79, 368, 371, 372
கொடுஞ்சி 752
கொண்டி மகளிர் 583
கொழுங் குடிச் செல்வர் 577
கொழுந் திற்றி 211
கொழு வல்சி 141
கொற்கையோர் 138
கொன்றை 277

கோ

கோங்கு 338
கோசர் 509, 773
கோடியர் 523
கோடு (சங்கு) 407
கோடு சுடு நூற்றினர் 401
கோடு போழ் கடைநர் 511
கோணம் 592
கோதை 265
கோதை (சேரன்) 524
கோதை (தூக்கு மாலை) 713
கோதையர் 398
கோலன் 389
கோலோர் 381

சா

சாந்து 226, 493, 553, 745
சாலினி 610
சாவகர் 476
சாறு 366
சான்ற கொள்கை 480

சி

சிமிலி 483
சில் காற்று 358
சிலம்பு 444
சிலை 312
சினத் தீ 31

சீ

சீர் (தாள அறுதி) 657
சீறியாழ் 559

சு

சுடர் விளக்கம் 580, 607
சுண்ணத்தர் 399
சுணங்கு 416
சுரும்பு 566, 596, 700
சுற்றம் 188, 227, 770
சுறவு 112

சூ

சூடுறு நன் பொன் சுடர் இழை புனைநர் 512
சூதர் 670
சூல் மகளிர் 609
சூழி 43

செ

செஞ் ஞாயிறு 7
செப்பு 421
செம்பு 485
செம்பு நிறை கொண்மர் 514
செல்வர் 442
செவ்வழி 604
செற்றவர் 132
செறுநர் 152

சே

சேக்கை 713
சேக்கை (அமணப் பள்ளி) 487
சேஞ்ஞென் 294
சேரி விழவு 619

சொ

சொன்றி 212

ஞா

ஞாயிறு 385, 431, 546, 702, 768
ஞாலம் 4

ஞி

ஞிமிறு ஆர்ப்ப 684

ஞெ

ஞெமன் கோல் 491

த

தண்டலை 341
தண் பணை 270
தமனியம் 701
தலை 29

தா

தாமரை 249, 463, 710
தார் 265
தாரம் 697
தாழை 114
தானை 39, 180, 369, 734
தானை (மேலாடை) 435

தி

திங்கள் 769, வெ. 1
திமில் வேட்டுவர் 116
திமிலர் 319
திருமணி குயினர் 511
திவவு 604
திறை 230
தினை 271, 291

தீ

தீ 453
தீம் சேற்றுக் கடிகை (கண்ட சருக்கரை) 532

து

துகில் 494
துடி 320
துடுப்பு 34
துணங்கை 26, 160, 329
தும்பி 655
துறை 85

தூ

தூரியம் 460

தெ

தெரு 359
தெவ்வர் 189
தெவ்வர் ஆக்கம் 196
தென் குமரி 70
தென்னவன் 40

தே

தேஎம் 229, 230
தேர் 51, 224, 388, 648, 659, 752
தேறல் 599, 780
தேன் 475

தொ

தொடி 34, 218, 563, 579, 720
தொடுதோல் 636
தொடுப்பு 11
தொய்யில் 283, 416
தொல் ஆணை நல் ஆசிரியர் 761
தொல் முது கடவுள் (அகத்தியன்) 41
தொழுவனர் 466

தோ

தோரை 287
தோல் (யானை) 370

ந

நகர் 169, 216, 556, 758
நகரம் 484
நட்டவர் 131
நட்பு 198
நரந்தம் (கத்தூரி) 553
நரம்பு 217, 657
நரைக் கூந்தலர் 408
நல் ஊழி 782
நல் எயில் உழந்த செல்வர் 731
நல் மாந்தர் 20
நறவு 213, 679
நன்கலம் 685
நன்னன் 618

நா

நாடு 187
நாண் மீன் 6
நால் நிலவர் 123
நால் வேறு தெரு 522
நாவாய் 83, 321, 379
நாழிகை இசைப்ப 671
நாள் அங்காடி 430
நாள் மகிழ் இருக்கை 443
நாள் முதிர் மதியம் 548
நாற் பெருங் குழு 510
நாற்ற உணவின் உரு கெழு பெரியோர் 458
நானிலத்தோர் வெ. 1

நி

நிண ஊன் 755
நிணம் 25
நியமம் 365
நிலம் 705
நிலம் தரு திருவின் நெடியோன் 763
நிலவு 114
நிலன் 12, 453, 479
நிலா 548

நீ

நீர் 453
நீர்த் தெவ்வு நிரைத் தொழுவர் 89
நீலக் கச்சினர் 639
நீலம் 251, 279

நூ

நூல் ஏணி 640
நூழிலாட்டு 257

நெ

நெடியோன் 61
நெடு வேள் 614
நெய்தல் 250, 282, 325
நெல் 110
நெல்லின் ஊர் 87, 88

நோ

நோய் 13

நௌ

நௌவி 275

ப

பகடு 94, 259, வெ. 1
பகல் 7, 546
பகன்றை 261
பகைப் புலம் 689
பகைவர் 201
பகைவர் தேஎம் 176
பசுங்காய் (பாக்கு) 400
பட்டினம் 537
பண் 560
பண்ணியக் கடை 661
பண்ணியம் 405, 422, 506
பணிந்தோர் 229
பணியார் 230
பணிலம் 380, 621
பணை 154, 234, 414
பணை (முரசு) 362
பதாகை 373
பரங்குன்று 263
பரதர் 317
பரதவர் 144
பரதவர் மகளிர் 97
பரி 51, 440
பருந்து 231, 502
பல்சாலை முதுகுடுமி 759
பல் வேறு உருவின் காய் 529
பல் வேறு உருவின் பழன் 529
பலவின் சுளை 527
பலி 459
பழஞ் செருக்காளர் 669
பழனம் 257
பறை 262, 523

பா

பாசறை 231
பாட்டியர் 749
பாட்டு 616
பாண் சேரி 269
பாணர் 219, 749
பாலை 314
பாவை 410, 723
பாழ் 158
பாளுள் 542

பி

பிடகை 397
பிடி 634, 676
பிண்டி 701
பிணவு 174
பிணை 276
பிரசம் 717
பிரம்பு 435
பிறை 193

பு

புகழ் அவை 778
புகையினர் 466
புத்தேள் உலகம் 698
புதல்வர் 600
புதவு 65, 165
புது மலர் 564
புரவி 184, 323, 387, 391, 660, 689
புரிசை 352
புரையோர் 737
புலவர் 750
புலி 298, 643
புழல் 395
புள் ஓப்பும் இசை 95
புளி 318

பூ

பூந்தொடி 446
பூரிமம் 18
பூவினர் 397, 466
பூவும் புகையும் 476
பூவும் புகையும் ஆயும் மாக்கள் 515

பெ

பெயல் 107, 244
பெரிய கற்றல் 767
பெரியோர் 192, 227, 473
பெருஞ்செய் ஆடவர் 746
பெருநாள் இருக்கை 525
பெருநீர் ஓச்சுநர் 321
பெரும்பாண் இருக்கை 342

பே

பேய் 632
பேய் மகளிர் 25, 163
பேர் இளம் பெண்டிர் 465

பை

பைக்கலம் 228

பொ

பொதியில் 161
பொதும்பர் 115
பொய்கை 171, 253, 654
பொய்தல் 589
பொருநர் 99
பொருப்பு (பொதியில் மலை) 42
பொலங்கலம் 779
பொலந் தாமரைப் பூ 103
பொலம் பூண் ஐவர் 775
பொலம் பூந் தும்பை 737
பொறி மயிர் வாரணம் 673
பொன் 274, 445, 505
பொன் அவிர் இழை 666
பொன் உரை காண்மர் 513
பொன் சுடு நெருப்பு 682

போ

போர்க்களம் 28, 735

பௌ

பௌவம் 76, 113

ம

மகிழ்ந்தோர் 364
மஞ்சள் 289
மடை 607
மண்டிலம் 190, 390
மணி 94, 273, 282, 292
மதாணி 461
மதி 195, 452, வெ. 1
மதில் 66
மதுரை 699
மந்தி 334
மயில் 333, 418, 608, 675, 706
மரன் 12
மருதம் 270
மருதம் (பண்) 658
மல்லிகை வெ. 2
மழலை 668
மழவர் 395, 687
மழுவாள் நெடியோன் (சிவன்) 455
மழை 10
மறம் கொள் சேரி 594
மற மைந்தர் 53
மறவர் 596, 726, 729
மன்று 615
மனை 268, 423

மா

மா 49, 157, 224, 706, 729
மாகதர் 670
மாங்கனி
மாடம் 355, 406, 429, 451
மாண் இழை மகளிர் 680
மாதிரம் 5, 10
மாயப் பொய் 570
மாயோன் 591
மாலை 558
மாறன் 772
மான விறல் வேள் 344

மி

மிளை 64
மின்னு 665, 679

மீ

மீன் 255, 269, 320, 375
மீன் (நட்சத்திரம்) 769
மீன் (வெள்ளி) 108

மு

முண்டை 281
முண்டகம் 96
முத்தம் 315, 505, 681
முத்து 135
முது பெண்டிர் 409
முது வெள்ளிலை 119
முந்நீர் 2, 75, 235, 361, 425, 768
முரசம் 80, 232, 349, 733
முரசு 129, 672
முருகு 38, 181, 611, 724
முல்லை 281, 285
முழவு 99, 114, 327, 396, 585, 605
முளி 307

மே

மேய் புலம் 303
மேலோர் 381

மை

மை 417, 754

மோ

மோகூர் 508
மோதகம் 626

யா

யாமம் 584
யாழ் 584, 605, 658
யாறு 359
யானை 47, 303, 348, 383, 688, 735, 744
யானையங்குருகு 674

யூ

யூபம் 27

வ

வங்கம் 536
வடபெருங்கல் (மேரு) 70
வண்டினம் 574
வண்டு 253, 475
வந்திகை 415
வம்பு நிறை முடிநர் 514
வய வேந்தர் 30
வயிர் 185
வயிரியர் 628, 750
வரகு 272
வரையா வாயில் 748
வல்சி 395
வல்லோன் (சித்திரகாரி) 723
வலைஞர் 256
வள்ளை 255
வள நகர் 741
வளி 5, 453
வளை 159, 316
வளை (சங்கு) 136, 185, 375
வறை 756
வன் கை வினைஞர் 262

வா

வாடாப் பூ 457
வாணன் 203
வாய்மொழி 19, 774
வாள் 53, 222, 434, 727
வாளர் 636
வானம் 50, 107, 267, 479, 678, 741
வானவ மகளிர் 582

வி

விசயம் 625
விசும்பு 334, 454
விசும்பு வழங்கும் பெரியோர் 495
விடியல் 664
விரை 552
வில் 142, 728
விலைஞர் 405
விலோதம் 449
விழவு 98, 328, 428, 628
விளக்கம் 556
விளையுள் 109
விறலியர் 218
வினைஞர் 539

வெ

வெண் திங்கள் 8
வெதிர் 302
வெள்ளம் (பேரெண்) 22
வெள்ளி 280
வெறிக்களம் 284
வெறுக்கை 215

வே

வேங்கை 296
வேதம் 468, 656
வேதாளிகர் 671
வேல் 690
வேலன் 611
வேழம் 257, 392
வேள்வி 760
வேளிர் 55

வை

வை (வைக்கோல்) 307
வைகல் 324
வைகறை 673, 686
வையம் 470
வையை 340, 356

நெடுநல்வாடை

கோவலர் வாடையால் துன்புறுதல்

வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங் கோற் கோவலர்
ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பி,
புலம் பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,
மெய்க் கொள் பெரும் பனி நலிய, பலருடன்
கைக் கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க—

கூதிர்க் கால நிலை

மா மேயல் மறப்ப, மந்தி கூர,
பறவை படிவன வீழ, கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசி,
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்—

ஊரினது செழிப்பு

புன் கொடி முசுண்டைப் பொதிப் புற வான் பூ,
பொன் போல் பீரமொடு, புதல்புதல் மலர;
பைங் காற் கொக்கின் மென் பறைத் தொழுதி,
இருங் களி பரந்த ஈர வெண் மணல்,
செவ் வரி நாரையோடு, எவ் வாயும் கவர—
கயல் அறல் எதிர, கடும் புனல் சாஅய்:
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண் மழை
அகல் இரு விசும்பில் துவலை கற்ப;
அம் கண் அகல் வயல் ஆர் பெயற் கலித்த
வண் தோட்டு நெல்லின் வரு கதிர் வணங்க;
முழு முதற் கமுகின் மணி உறழ் எருத்தின்
கொழு மடல் அவிழ்ந்த குழூஉக் கொள் பெருங் குலை,
நுண் நீர் தெவிள வீங்கி, புடை திரண்டு,
தெண் நீர்ப் பசுங் காய், சேறு கொள முற்ற;
நளி கொள் சிமைய, விரவு மலர், வியன் காக்
குளிர் கொள் சினைய குரூஉத் துளி தூங்க—

முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்

மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்,
ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்,

படலைக் கண்ணி, பரு ஏர் எறுழ்த் திணி தோள்,
முடலை யாக்கை, முழு வலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
துவலைத் தண் துளி பேணார், பகல் இறந்து,
இரு கோட்டு அறுவையர், வேண்டு வயின் திரிதர—

மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்

வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்,
மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல்,
பூங் குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக் கண்,
மடவரல் மகளிர்—பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின், பைங் காற் பித்திகத்து,
அவ் இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந் திரிக் கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர—

கூதிர்க்காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகள்

மனை உறை புறவின் செங் காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்று தேர்ந்து உண்ணாது,
இரவும் பகலும் மயங்கி, கையற்று,
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப;
கடியுடை வியல் நகர்ச் சிறு குறுந் தொழுவர்,
கொள் உறழ் நறுங் கல், பல கூட்டு மறுக;
வடவர் தந்த வான் கேழ் வட்டம்
தென் புல மருங்கில் சாந்தொடு துறப்ப;
கூந்தல், மகளிர் கோதை புனையார்,
பல் இருங் கூந்தல் சில் மலர் பெய்ம்மார்,
தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து,
இருங் காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப;
கை வல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செங் கேழ் வட்டம் சுருக்கி; கொடுந் தறி,
சிலம்பி வால் நூல் வலந்தன தூங்க;
வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்,
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை, திரியாது, திண் நிலைப்
போர் வாய் கதவம் தாழொடு துறப்ப;
கல்லென் துவலை தூவலின், யாவரும்
தொகு வாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,

பகுவாய்த் தடவில் செந் நெருப்பு ஆர;
ஆடல் மகளிர் பாடல் கொளப் புணர்மார்,
தண்மையின் திரிந்த இன் குரல் தீம் தொடை,
கொம்மை வரு முலை வெம்மையில் தடைஇ,
கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப;
காதலர்ப் பிரிந்தோர் புலம்ப; பெயல் கனைந்து,
கூதிர் நின்றன்றால்.

அரசியின் அரண்மனை

மனை வகுத்த முறை

போதே, மாதிரம்
விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்,
இரு கோல் குறிநிலை வழுக்காது, குடக்கு ஏர்பு,
ஒரு திறம் சாரா அரை நாள் அமயத்து,
நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கி,
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப, மனை வகுத்து—

கோபுர வாயில்

ஒருங்கு உடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின்,
பரு இரும்பு பிணித்து, செவ்வரக்கு உரீஇ,
துணை மாண் கதவம் பொருத்தி, இணை மாண்டு,
நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து,
போது அவிழ் குவளைப் புதுப் பிடி கால் அமைத்து,
தாழொடு குயின்ற, போர் அமை புணர்ப்பின்,
கை வல் கம்மியன் முடுக்கலின், புரை தீர்ந்து,
ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை,
வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக,
குன்று குயின்றன்ன, ஓங்கு நிலை வாயில்,

முற்றமும் முன்வாயிலும்

திரு நிலை பெற்ற தீது தீர் சிறப்பின்,
தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து,
நெடு மயிர் எகினத் தூ நிற ஏற்றை
குறுங்கால் அன்னமோடு உகளும் முன் கடை,

அரண்மனையில் எழும் ஓசைகள்

பணை நிலை முனைஇய பல் உளைப் புரவி
புல் உணாத் தெவிட்டும் புலம்பு விடு குரலொடு,
நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்து,

கிம்புரிப் பகு வாய் அம்பணம் நிறைய,
கலிழ்ந்து வீழ் அருவிப் பாடு விறந்து, அயல
ஒலி நெடும் பீலி ஒல்க, மெல் இயல்
கலி மயில் அகவும் வயிர் மருள் இன் இசை,
நளி மலைச் சிலம்பின் சிலம்பும் கோயில்—

அந்தப்புரத்தின் அமைப்பு

யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து,
பரூஉத் திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி,
அறு அறு காலைதோறு, அமைவரப் பண்ணி,
பல் வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க;
பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது,
ஆடவர் குறுகா அருங் கடி வரைப்பின்,
வரை கண்டன்ன தோன்றல, வரை சேர்பு
வில் கிடந்தன்ன கொடிய, பல் வயின்,
வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ,
மணி கண்டன்ன மாத் திரள் திண் காழ்,
செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ் சுவர்,
உருவப் பல் பூ ஒரு கொடி வளைஇ,
கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்—

அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்

தச நான்கு எய்திய பணை மருள் நோன் தாள்,
இகல் மீக்கூறும், ஏந்து எழில் வரி நுதல்,
பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து,
சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்
கூர் உளிக் குயின்ற, ஈர் இலை இடை இடுபு,
தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப்
புடை திரண்டிருந்த குடத்த, இடை திரண்டு,
உள்ளி நோன் முதல் பொருத்தி, அடி அமைத்து,
பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்—

கட்டிலின்மேல் அமைந்த படுக்கை

மடை மாண் நுண் இழை பொலிய, தொடை மாண்டு,
முத்துடைச் சாலேகம் நாற்றி, குத்துறுத்து,
புலிப் பொறிக் கொண்ட பூங் கேழ்த் தட்டத்துத்
தகடு கண் புதையக் கொளீஇ, துகள் தீர்ந்து,
ஊட்டுறு பல் மயிர் விரைஇ, வய மான்
வேட்டம் பொறித்து, வியன் கட் கானத்து
முல்லைப் பல் போது உறழ, பூ நிரைத்து,
மெல்லிதின் விரிந்த சேக்கை—

படுக்கையின்மேல் அரசி மலரணையில் வீற்றிருத்தல்

மேம்பட,
துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி
இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு,
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூ மடி விரித்த சேக்கை,
ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்
பின் அமை நெடு வீழ் தாழ, துணை துறந்து,
நல் நுதல் உலறிய சில் மெல் ஓதி,
நெடு நீர் வார் குழை களைந்தென, குறுங் கண்
வாயுறை அழுத்திய, வறிது வீழ் காதின்,
பொலந் தொடி தின்ற மயிர் வார் முன்கை,
வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து,
வாளைப் பகு வாய் கடுப்ப வணக்குறுத்து,
செவ் விரல் கொளீஇய செங் கேழ் விளக்கத்து,
பூந் துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்,
அம் மாசு ஊர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு,
புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்—

சேடியரும் செவிலியரும் தலைவியைத் தேற்றுதல்

தளிர் ஏர் மேனி, தாய சுணங்கின்,
அம் பணைத் தடைஇய மென் தோள், முகிழ் முலை,
வம்பு விசித்து யாத்த, வாங்கு சாய் நுசுப்பின்,
மெல் இயல் மகளிர்—நல் அடி வருட;
நரை விராவுற்ற நறு மென் கூந்தல்
செம் முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ,
குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி,
'இன்னே வருகுவர் இன் துணையோர்' என,
உகத்தவை மொழியவும் ஒல்லாள், மிகக் கலுழ்ந்து—

தலைவியின் வருத்த மிகுதி

நுண் சேறு வழித்த நோன் நிலைத் திரள் கால்,
ஊரு வறு முலை கொளீஇய, கால் திருத்தி,
புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை,
திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக,
விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து,
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா,
மா இதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப் பனி,
செவ் விரல் கடைக் கண் சேர்த்தி, சில தெறியா,

புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு
இன்னா அரும் படர் தீர, விறல் தந்து,
இன்னே முடிகதில் அம்ம—

பாசறையில் அரசன் நிலை

மின் அவிர்
ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை
நீள் திரள் தடக் கை நிலமிசைப் புரள,
களிறு களம் படுத்த பெருஞ் செய் ஆடவர்,
ஒளிறு வாள் விழுப் புண் காணிய, புறம் போந்து,
வடந்தைத் தண் வளி எறிதொறும் நுடங்கி,
தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய, நன் பல்
பாண்டில் விளக்கில், பரூஉச் சுடர் அழல,
வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்ட, பின்னர்,
மணி புறத்து இட்ட மாத் தாள் பிடியொடு
பருமம் களையாப் பாய் பரிக் கலி மா
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப,
புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ,
வாள் தோள் கோத்த வன்கண் காளை
சுவல் மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து,
நூல் கால்யாத்த மாலை வெண் குடை
தவ்வென்று அசைஇ, தா துளி மறைப்ப,
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்,
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

பாண்டியன் நெடுஞ் செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

நெடுநல்வாடை முற்றும்

தனிப் பாடல்

வாடை நலிய, வடிக் கண்ணாள் தோள் நசைஇ,
ஓடை மழ களிற்றான் உள்ளான்கொல்—கோடல்
முகையோடு அலமர, முற்று எரி போல் பொங்கி,
பகையோடு பாசறை உளான்?

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகல் 102
அகில் 56
அணே 133
அம்பணம் 96
அயிர் 56
அருவி 97
அரை நாள் 75
அறுவையர் 35
அன்னம் 92, 132

ஆ

ஆடல் மகளிர் 67
ஆடவர் 107
ஆடு (மேட ராசி) 160
ஆர்கலி (வெள்ளம்) 3
ஆரம் 136
ஆவணம் 44
ஆறு 30

இ

இரு கோல் குறிநிலே வழுக்காமை 74
இரும்பு 80
இரும்பு செய் விளக்கு 42
இல் 114

உ

உரோகிணி 163
உள்ளி 122
உளி 119

ஊ

ஊரு வறு முலே 158

எ

எஃகம் 176
எகினம் 91
எரி (விளக்கு) 103

ஏ

ஏறு 4

ஐ

ஐயவி 86

ஓ

ஓடை 169, வெ. 1

க

கட்டளே (சாளரம்) 62
கடிகை நூல் 142
கண்ணி 6
கம்மியன் 57
கமுகு 23
கயல் 18
கழுவுறு கலிங்கம் 134
களிறு 171, வெ. 1
கறவை 10
கன்று 11
கன்னல் 65

கா

கா 27
காடி 134

கி

கிம்புரி 96

கு

குடக்கு 74
குவளே 83
குழை 38
குறுந் தொழுவர் 49

கூ

கூட்டு 50
கூதிர் 72
கூதிர்ப் பாணுள் 12

கை

கைக் கொள் கொள்ளியர் 8
கை வல் கம்மியன் 85

கொ

கொக்கு 15
கொடி 87, 109, 113
கொள் 50

கோ

கோடல் 5, வெ. 1
கோவலர் 3

சா

சாந்து 52
சாலேகம் (சாளரம்) 125

சி

சிலம்பி 59
சின்மலர் 54

சீ

சீறியாழ் 70

சு

சுதை 110

செ

செம்பு 112
செவ்வரக்கு 80
செவிலியர் 153

சே

சேக்கை 135
சேவல் 45
சேறு (சாதிலிங்கம்) 157

த

தகரம் 55
தடவு (இந்தளம்) 66

தா

தாழ் 84

தி

திரி 42

து

துணை 137
துணை மாண் கதவம் 81
துணையோர் 155

தெ

தெரு 30
தென்வளி 61

தே

தேறல் 33

தொ

தொடை 68

ந

நகர் 49, 90
நரை 152

நா

நாகம் (யானை) 117
நாண்சிர 17
நாளொடு பெயரிய கோள் அமை
விழுமரம் (உத்தரம்) 82

நி

நிலவு 95

நூ

நூல் அறி புலவர் 76
நூற் கலிங்கம் 146

நெ

நெடு வெண் முற்றம் 95
நெய் அணி 86
நெருப்பு 55, 66
நெல் 22, 43

ப

படலைக் கண்ணி 31
பணை 115
பரப்பு 73
பள்ளி 186

பா

பாசறை 188, வெ. 1
பாசறைத் தொழில் 188
பாடல் 67
பாண்டில் (வட்டக் கட்டில்) 123
பாண்டில் விளக்கு 175
பாவை 101

பி

பிடகை 39
பிடி 178
பித்திகம் 40

பீ

பீரம் 14
பீலி 98

பு

புதுப் பெயல் 2
புரவி 93
புலி 126
புனையா ஓவியம் 147

பூ

பூந் துகில் 145

பெ

பெருந்தகை 106
பெரும் பனி 7

பொ

பொங்கல் வெண் மழை 19
பொலந் தொடி 141

போ

போர் வாய் கதவம் 63

ம

மண்டிலம் 161
மணி 111
மதலைப் பள்ளி 48
மந்தி 9

மயில் 99
மலர் 43
மன்று 46
மனை வகுத்தல் 78

மா

மா 9, 179
மாடம் 29
மாலை 44

மு

முசுண்டை 13
முத்து 37, 125
முரண் மிகு சிறப்பின் செல்வன் 162
முல்லை 130
முழு வலி மாக்கள் (மிலேச்சர்) 32
முற்றம் 90
முன்னோன் 177

மூ

மூதூர் 29

மெ

மெழுகு செய் படம் 159

ய

யவனர் 101

யா

யாமம் 186
யானை 169

வ

வட்டம் (ஆல வட்டம்) 58
வடந்தை 173
வடவர் 51
வண்டு 33
வணக்கு 143
வம்பு 150
வயமான் 128
வயல் 21
வயிர் 99
வரை 108
வல்லோன் 118
வலம்புரி 142
வள்ளி (சங்குவளை) 36

வா

வாடை வெ. 1
வாயுறை 140
வாள் தோட் கோத்த வன்கண் காளை 182
வாளைப்பகுவாய் 143
வான் 60
வானம் 2

வி

விசும்பு 20
வியல் வாய் மண்டிலம் 73
வில் 109

வெ

வெண்குடை 184
வெள்ளி 110

வே

வேந்தர் 187
வேம்பு 176
வேழம் 87
வேனிற் பள்ளி 61

வை

வையகம் 1

குறிஞ்சிப் பாட்டு

தோழி அறத்தொடு நிற்றல்

'அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! ஒள் நுதல்,
ஒலி மென் கூந்தல், என் தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவு அருங் கடு நோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்,
பரவியும், தொழுதும், விரவு மலர் தூயும்,
வேறு பல் உருவின் கடவுட் பேணி,
நறையும் விரையும் ஓச்சியும், அலவுற்று,
எய்யா மையலை நீயும் வருந்துதி—
நல் கவின் தொலையவும், நறுந் தோள் நெகிழவும்,
புள் பிறர் அறியவும், புலம்பு வந்து அலைப்பவும்,
உள் கரந்து உறையும் உய்யா அரும் படர்
செப்பல் வன்மையின் செறித்து, யான் கடவலின்.

தலைவியின் அன்பு மிகுதி

''முத்தினும் மணியினும் பொன்னினும், அத் துணை,
நேர்வரும் குரைய கலம் கெடின், புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்,
மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்,
ஆசு அறு காட்சி ஐயர்க்கும், அந் நிலை,
எளிய என்னார், தொல் மருங்கு அறிஞர்:
மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப,
நெடுந் தேர் எந்தை அருங் கடி நீவி,
இருவேம் ஆய்ந்த மன்றல் இது என,
நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?
ஆற்றின் வாரார்ஆயினும், ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதால், நமக்கு'' என
மான் அமர் நோக்கம் கலங்கி, கையற்று,
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்.

மணம் நிகழ்ந்தமையைத் தோழி அறிவித்தல்

இகல் மீக் கடவும் இரு பெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல,
இரு பேர் அச்சமோடு யானும் ஆற்றலென்;
கொடுப்பின் நன்கு உடைமையும், குடி நிரல் உடைமையும்,

வண்ணமும், துணையும், பொரீஇ எண்ணாது,
எமியேம் துணிந்த ஏமம் சால் அரு வினை
நிகழ்ந்த வண்ணம் நீ நனி உணரச்
செப்பல் ஆன்றிசின்; சினவாதீமோ!

தினைப்புனம் காத்த வகை

''நெற் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை,
முத்து ஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப,
துய்த் தலை வாங்கிய புனிறு தீர் பெருங் குரல்
நல் கோட் சிறு தினைப் படு புள் ஓப்பி,
எல் பட வருதியர்'' என, நீ விடுத்தலின்,
கலி கெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலி அஞ்சு இதணம் ஏறி, அவண,
சாரல் சூரல் தகை பெற வலந்த,
தழலும் தட்டையும் குளிரும், பிறவும்,
கிளி கடி மரபின, ஊழ் ஊழ் வாங்கி,
உரவுக் கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து—

சுனையில் நீராடல்

விசும்பு ஆடு பறவை வீழ் பதிப் படர,
நிறை இரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு,
அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின்,
முரசு அதிர்ந்தன்ன இன் குரல் ஏற்றொடு,
நிரை செலல் நிவப்பின் கொண்மூ மயங்கி,
இன் இசை முரசின், சுடர்ப் பூண், சேஎய்
ஒன்னார்க்கு ஏந்திய இலங்கு இலை எஃகின்,
மின் மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென,
அண்ணல் நெடுங் கோட்டு இழிதரு தெள் நீர்,
அவிர் துகில் புரையும், அவ் வெள் அருவி,
தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி,
பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி,
நளி படு சிலம்பில், பாயம் பாடி,
பொன் எறி மணியின் சிறு புறம் தாழ்ந்த எம்
பின் இருங் கூந்தல் பிழிவனம் துவரி,
உள்ளகம் சிவந்த கண்ணேம்,

பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்தல்

வள் இதழ்
ஒண் செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங் கொடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம்,

எரி புரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான் பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப் பூங் கருவிளை,
பயினி, வானி, பல் இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல் இணர்க் காயா,
விரி மலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப்பூளை, குறுநறுங்கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந் தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடி கமழ் கலி மா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமாரோடம்,
வாழை, வள்ளி, நீள் நறு நெய்தல்,
தாழை, தளவம், முள் தாட் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந் தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங்குரலி,
கோடல், கைதை, கொங்கு முதிர் நறு வழை,
காஞ்சி, மணிக் குலைக் கள் கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல் பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அடும்பு, அமர் ஆத்தி, நெடுங் கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல் பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப் பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங் குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள்நாறி,
மா இருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,
அரக்கு விரித்தன்ன பரு ஏர்அம் புழகுடன்,
மால், அங்கு, உடைய மலிவனம் மறுகி,
வான் கண் கழீஇய அகல் அறைக் குவைஇ,

தழை உடுத்து, மாலை சூடி, அசோகின் நிழலில் இருத்தல்

புள் ஆர் இயத்த விலங்கு மலைச் சிலம்பின்,
வள் உயிர்த் தெள் விளி இடைஇடைப் பயிற்றி,
கிள்ளை ஓப்பியும், கிளை இதழ் பறியா,
பை விரி அல்குல் கொய்தழை தைஇ,
பல் வேறு உருவின் வனப்பு அமை கோதை, எம்
மெல் இரு முச்சி, கவின் பெறக் கட்டி,
எரி அவிர் உருவின் அம் குழைச் செயலைத்
தாது படு தண் நிழல் இருந்தனம் ஆக—

தலைவனது வருகை

எண்ணெய் நீவிய, சுரி வளர்—நறுங் காழ்,
தண் நறுந் தகரம் கமழ மண்ணி,
ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா,
காழ் அகில் அம் புகை கொளீஇ, யாழ் இசை
அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப, தேம் கலந்து—
மணி நிறம் கொண்ட மா இருங் குஞ்சியின்,
மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்
வண்ண வண்ணத்த மலர் ஆய்பு விரைஇய
தண் நறுந் தொடையல், வெண் போழ்க் கண்ணி,
நலம் பெறு சென்னி, நாம் உற மிலைச்சி,
பைங் காற் பித்திகத்து ஆய் இதழ் அலரி
அம் தொடை ஒரு காழ் வளைஇ, செந் தீ
ஒண் பூம் பிண்டி ஒரு காது செரீஇ,
அம் தளிர்க் குவவு மொய்ம்பு அலைப்ப, சாந்து அருந்தி,
மைந்து இறை கொண்ட, மலர்ந்து ஏந்து அகலத்து,
தொன்று படு நறுந் தார் பூணொடு பொலிய,
செம் பொறிக்கு ஏற்ற, வீங்கு இறைத் தடக் கையின்
வண்ண வரி வில் ஏந்தி, அம்பு தெரிந்து,
நுண் வினைக் கச்சைத் தயக்கு அறக் கட்டி,
இயல் அணிப் பொலிந்த ஈகை வான் கழல்
துயல்வருந்தோறும் திருந்து அடிக் கலாவ—

தலைவனுடன் வந்த நாய்க்குத் தோழி முதலியோர் அஞ்சி வேறிடம் செல்லுதல்

முனை பாழ் படுக்கும் துன் அருந் துப்பின்
பகை புறம் கண்ட பல் வேல் இளைஞரின்
உரவுச் சினம் செருக்கி, துன்னுதொறும் வெகுளும்,
முளை வாள் எயிற்ற, வள் உகிர், ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர,
நடுங்குவனம் எழுந்து, நல் அடி தளர்ந்து, யாம்
இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர—

தலைவன் மகளிரிடம் கெடுதி வினவுதல்

மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து
ஆ காண் விடையின், அணி பெற வந்து—எம்
அலமரல், ஆயிடை, வெரூஉதல் அஞ்சி,
மெல்லிய இனிய மேவரக் கிளந்து, எம்
ஐம்பால் ஆய் கவின் ஏத்தி, ''ஒண் தொடி,
அசை மென் சாயல், அவ் வாங்கு உந்தி,
மட மதர் மழைக் கண், இளையீர்! இறந்த
கெடுதியும் உடையேன்'' என்றனன். அதன் எதிர்
சொல்லேம்ஆதலின், அல்லாந்து—

தலைவன் தலைவியின் சொல்லை எதிர் பார்த்து நிற்றல்

''கலங்கிக்
கெடுதியும் விடீஇர்ஆயின், எம்மொடு
சொல்லலும் பழியோ, மெல் இயலீர்?'' என,
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கை கவர் நரம்பின், இம்மென இமிரும்
மாதர் வண்டொடு, சுரும்பு நயந்து இறுத்த,
தாது அவிழ் அலரித் தா சினை பிளந்து,
தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி,
கல்லென் சுற்றக் கடுங் குரல் அவித்து, எம்
சொல்லற் பாணி நின்றனன்ஆக—

யானை சினத்துடன் புனத்திற்கு வர, மகளிர் நடுங்கியமை

இருவி வேய்ந்த குறுங் காற் குரம்பை,
பிணை ஏர் நோக்கின் மனையோள் மடுப்ப,
தேம் பிழி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
சேமம் மடிந்த பொழுதின், வாய்மடுத்து,
இரும் புனம் நிழத்தலின், சிறுமை நோனாது,
அரவு உறழ், அம் சிலை கொளீஇ, நோய் மிக்கு,
உரவுச் சின முன்பால் உடல் சினம் செருக்கி,
கணை விடு (பு), புடையூ, கானம் கல்லென,
மடி விடு வீளையர் வெடி படுத்து எதிர,
கார்ப் பெயல் உருமின் பிளிறி, சீர்த் தக
இரும் பிணர்த் தடக் கை இரு நிலம் சேர்த்தி,
சினம் திகழ் கடாஅம் செருக்கி, மரம் கொல்பு,
மையல் வேழம், மடங்கலின், எதிர்தர,
உய்வு இடம் அறியேம் ஆகி, ஒய்யென,
திருந்து கோல் எல் வளை தெழிப்ப, நாணு மறந்து,
விதுப்புறு மனத்தேம், விரைந்து அவற் பொருந்தி,
சூர் உறு மஞ்ஞையின் நடுங்க—

யானையைத் தலைவன் அம்பு எய்து துரத்துதல்

வார் கோல்
உடு உறும் பகழி வாங்கி, கடு விசை,
அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின்,
புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதர,
புள்ளி வரி நுதல் சிதைய, நில்லாது,
அயர்ந்து புறங்கொடுத்த பின்னர்—

நீரிலிருந்து எடுத்துத் தலைவன் காப்பாற்றியமை

நெடு வேள்
அணங்கு உறு மகளிர் ஆடுகளம் கடுப்ப,

திணி நிலைக் கடம்பின் திரள் அரை வளைஇய
துணை அறை மாலையின், கை பிணி விடேஎம்,
நுரையுடைக் கலுழி பாய்தலின், உரவுத் திரை
அடும் கரை வாழையின் நடுங்க, பெருந்தகை
''அம் சில் ஓதி! அசையல்; யாவதும்
அஞ்சல், ஓம்பு; நின் அணி நலம் நுகர்கு'' என,
மாசு அறு சுடர் நுதல் நீவி, நீடு நினைந்து,
என் முகம் நோக்கி நக்கனன்.

தலைவி தலைவனுடன் கூடிய நிலை

அந் நிலை,
நாணும் உட்கும் நண்ணுவழி அடைதர,
ஒய்யெனப் பிரியவும் விடாஅன், கவைஇ
ஆகம் அடைய முயங்கலின், அவ் வழி,
பழு மிளகு உக்க பாறை நெடுஞ் சுனை,
முழு முதற் கொக்கின் தீம் கனி உதிர்ந்தென,
புள் எறி பிரசமொடு ஈண்டி, பலவின்
நெகிழ்ந்து உகு நறும் பழம் விளைந்த தேறல்,
நீர் செத்து அயின்ற தோகை, வியல் ஊர்ச்
சாறு கொள் ஆங்கண் விழவுக் களம் நந்தி,
அரிக் கூட்டு இன் இயம் கறங்க, ஆடு மகள்
கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்,
வரைஅரமகளிரின் சாஅய், விழைதக,
விண் பொரும் சென்னிக் கிளைஇய காந்தள்
தண் கமழ் அலரி தாஅய், நன் பல
வம்பு விரி களத்தின் கவின் பெறப் பொலிந்த
குன்று கெழு நாடன், எம் விழைதரு பெரு விறல்,

இருவரும் பகற்பொழுதைப் போக்கிய வகை

உள்ளத் தன்மை உள்ளினன் கொண்டு,
''சாறு அயர்ந்தன்ன, மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா, வள நகர் பொற்ப,
மலரத் திறந்த வாயில் பலர் உண,
பைந் நிணம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில்
வசை இல் வான் திணைப் புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில், பெருந்தகை,
நின்னோடு உண்டலும் புரைவது'' என்று, ஆங்கு,
அறம் புணை ஆகத் தேற்றி, பிறங்கு மலை
மீமிசைக் கடவுள் வாழ்த்தி, கைதொழுது,
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி,

அம் தீம் தெள் நீர் குடித்தலின், நெஞ்சு அமர்ந்து,
அரு விடர் அமைந்த களிறு தரு புணர்ச்சி,
வான் உரி உறையுள் வயங்கியோர் அவாவும்
பூ மலி சோலை, அப் பகல் கழிப்பி,
எல்லை செல்ல, ஏழ் ஊர்பு, இறைஞ்சி,
பல் கதிர் மண்டிலம், கல் சேர்பு மறைய—

மாலைக்காலத்தின் வருகை

மான் கணம் மரமுதல் தெவிட்ட, ஆன் கணம்
கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர,
ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில்
ஓங்கு இரும் பெண்ணை அக மடல் அகவ,
பாம்பு மணி உமிழ, பல் வயின் கோவலர்
ஆம்பல் அம் தீம் குழல் தெள் விளி பயிற்ற,
ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட, வள மனைப்
பூந் தொடி மகளிர் சுடர் தலைக் கொளுவி,
அந்தி அந்தணர் அயர, கானவர்
விண் தோய் பணவைமிசை ஞெகிழி பொத்த,
வானம் மா மலைவாய் சூழ்பு கறுப்ப, கானம்
கல்லென்று இரட்ட, புள்ளினம் ஒலிப்ப,
சினைஇய வேந்தன் செல் சமம் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணாஉ—

தலைவன் பெயர்ந்த நிலை

''நேர் இறை முன்கை பற்றி, நுமர் தர,
நாடு அறி நல் மணம் அயர்கம்; சில் நாள்
கலங்கல் ஓம்புமின், இலங்குஇழையீர்!'' என,
ஈர நல் மொழி தீரக் கூறி,
துணை புணர் ஏற்றின், எம்மொடு வந்து,
துஞ்சா முழவின் மூதூர் வாயில்,
உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்.

தலைவன் வரும் வழியின் அருமை நினைந்து, தலைவி கலங்குதல்

அதற்கொண்டு,
அன்றை அன்ன விருப்போடு, என்றும்,
இர வரல் மாலையனே; வருதோறும்,
காவலர் கடுகினும், கத நாய் குரைப்பினும்,
நீ துயில் எழினும், நிலவு வெளிப்படினும்,
வேய் புரை மென் தோள் இன் துயில் என்றும்
பெறாஅன்; பெயரினும், முனியல் உறாஅன்;
இளமையின் இகந்தன்றும் இலனே; வளமையின்
தன் நிலை தீர்ந்தன்றும் இலனே; கொன் ஊர்

மாய வரவின் இயல்பு நினைஇ, தேற்றி,
நீர் எறி மலரின் சாஅய், இதழ் சோரா
ஈரிய கலுழும், இவள் பெரு மதர் மழைக்கண்;
ஆகத்து அரிப் பனி உறைப்ப, நாளும்,
வலைப் படு மஞ்ஞையின், நலம் செலச் சாஅய்,
நினைத்தொறும் கலுழுமால், இவளே—

இரவில் தலைவன் வரும் வழியின் அருமை

கங்குல்,
அளைச் செறி உழுவையும், ஆளியும், உளியமும்,
புழற் கோட்டு ஆமான் புகல்வியும், களிறும்,
வலியின் தப்பும் வன்கண் வெஞ் சினத்து
உருமும், சூரும், இரை தேர் அரவமும்,
ஒடுங்கு இருங் குட்டத்து அருஞ் சுழி வழங்கும்
கொடுந் தாள் முதலையும், இடங்கரும், கராமும்,
நூழிலும், இழுக்கும், ஊழ் அடி முட்டமும்,
பழுவும், பாந்தளும், உளப்படப் பிறவும்,
வழுவின் வழாஅ விழுமம், அவர்
குழு மலை விடரகம், உடையவால் எனவே.'

ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது.

குறிஞ்சிப்பாட்டு முற்றும்

தனிப் பாடல்கள்

நின் குற்றம் இல்லை; நிரை தொடியும் பண்பு உடையள்;
என் குற்றம் யானும் உணர்கலேன்; பொன் குற்று
அருவி கொழிக்கும் அணி மலை நாடன்
தெரியுங்கால், தீயது இலன். 1

ஆற்றல் சால் கேள்வி அறம் பொருள் இன்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே—தேற்ற
மறையோர் மணம் எட்டின் ஐந்தாம் மணத்தின்
குறையாக் குறிஞ்சிக் குணம். 2

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகில் 110
அடும்பு 87
அணங்கு உறு மகளிர் 175
அதிரல் 75
அந்தணர் 225
அந்தி 225
அம்பு 124
அரக்கு 96
அரவம் 255
அரவு 158
அரிக்கூட்டு இன் இயம் 193
அருவி 55
அவரை 87
அளை 252
அறம் 208
அறம் பொருள் இன்பம் வெ. 2
அறியுநர் 4
அன்றில் 219
அன்னை 1
அனிச்சம் 62

ஆ

ஆ 136
ஆடுகளம் 175
ஆடுமகள் 193
ஆத்தி 87
ஆம்பல் 62, 223
ஆம்பல்அம் தீம் குழல் 222
ஆமான் புகல்வி 253
ஆரம் 93
ஆவிரை 71
ஆளி 252
ஆன் கணம் 217

இ

இடங்கர் 257
இதணம் 41
இயல்பு 15
இர (இரவு) 239
இருவி 153
இருவேம் ஆய்ந்த மன்றல் 21
இலவம் 86
இளமை 244

ஈ

ஈதை 126
ஈங்கை 86
ஈர நல் மொழி 234

உ

உட்கு 184
உடு உறும் பகழி 170
உண்துறை 237
உந்தி 140
உந்தூழ் 65
உரும் 255
உழுவை 252
உளியம் 252

ஊ

ஊர் 245
ஊழ் அடி முட்டம் 258

எ

எஃகு 52
எண்ணெய் 107
எந்தை 20
எருவை 68
எல் 39
எல்லை 215
எறுழம் 66

ஏ

ஏமம் சால் அருவினை 32
ஏறு 49, 235
ஏனை உலகம் 24

ஐ

ஐயர் 17

ஒ

ஒன்னார் 52

ஓ

ஓப்பி 38

க

கங்குல் 25
கச்சை 25
கடம்பு 176
கடவுட் பேணுதல் 6
கடும்பு 205
கணை 160
கயிறு ஊர் பாணி 194
கரந்தை 76
கராம் 257
கருவிளை 68
கழல் 126
களிறு 150, 253
களிறு தரு புணர்ச்சி 212
கன்று 218

கா

காஞ்சி 84
காந்தள் 196

காயா 70
காவலர் 240
காழ்வை 93
கானவர் 225

கி

கிள்ளை 101
கிளி 44
கிளை இதழ் 101

கு

குட்டம் 256
குடசம் 67
குடி 30
குரவம் 69
குரீஇப்பூளை 72
குருக்கத்தி 92
குருகிலை 73
குருதி 172
குருந்து 95
குல்லை 78
குவளை 63
குளவி 76
குளிர் 43
குறிஞ்சி 63, வெ. 2
குறுங் காற் குரம்பை 153
குறுநறுங்கண்ணி 72

கூ

கூவிரம் 66
கூவிளம் 65

கெ

கெடுதி 142, 144

கே

கேள்வி வெ. 2

கை

கைதை 83

கொ

கொக்கின் தீம் கனி 188
கொகுடி 81
கொண்மூ 50
கொன்றை 86

கோ

கோங்கம் 73
கோடல் 83
கோதை 103
கோவலர் 221

ச

சண்பகம் 75
சமம் 229

சா

சால்பு 15
சாறு 192, 201
சான்றோர் 28

சி

சிந்துவாரம் 89
சிலை 158
சிறுசெங்குரலி 82
சிறுமாரோடம் 78
சினைய மலர் 113-114

சு

சுடர் (விளக்கு) 224
சுரும்பு 148
சுள்ளி 66
சுற்றம் 151
சுனை 57, 187
சுனைய மலர் 113-114

சூ

சூர் 169, 255
சூரல் 42, 71

செ

செங் காந்தள் 62
செங் கொடுவேரி 64
செம்மல் 82
செயலை 105
செருந்தி 75
செருவிளை 68

சே

சேஎய் 51
சேடல் 82
சேஞ்ஞன் 40
சேமம் 156

சொ

சொல்லல் பாணி 152

ஞ

ஞமலி 131

ஞா

ஞாழல் 81

ஞெ

ஞெகிழி பொத்தல் 226

த

தகரம் 108
தட்டை 43
தணக்கம் 85
தழல் 43
தழை 102
தளவம் 80

தா

தாமரை 80
தாழை 80
தாறு 150

தி

தில்லை 77
திலகம் 74
தினை 38

து

துகில் 55
துணை 31
தும்பை 90
துழாஅய் 90

தே

தேம் (அகிலினது நெய்) 111
தேம் பிழி தேறல் 155
தேமா 64
தேறல் 190

தொ

தொடி 139, 224
தொடையல் 115
தொல் மருங்கு அறிஞர் 18
தொழுதல் 5

தோ

தோகை 191
தோழி 2
தோன்றி 90

ந

நகர் 202
நந்தி 91
நரந்தம் 94
நரம்பு 147
நள்ளிருள்நாறி (இருவாட்சி) 94
நறவம் 91
நறை 7

நா

நாகம் 94
நாடு அறி நல் மணம் 232
நாண் 184
நாய் 240

நி

நிலத்த மலர் 113-114
நிலவு வெளிப்படல் 241

நீ

நீர் எறி மலர் 247

நு

நுரையுடைக் கலுழி 178

நூ

நூழில் 258

நெ

நெடுவேள் 174
நெய்தல் 79, 84
நெல் 35

நை

நைவளம் 146

ப

பகன்றை 88
பசும்பிடி 70
பணைவை 226
பயினி 69
பரவி 5
பரு ஏர் அம் புழகு 96
பல் கதிர் மண்டிலம் 216
பலவு 189
பலாசம் 88
பழு 250

பா

பாடி 58
பாதிரி 74
பாந்தள் 259
பாம்பு 221
பாரம் 92
பாலை 77
பாலை வல்லோன் 146
பாறை 187

பி

பித்திகம் 89, 117
பிடவம் 78
பிண்டி 88, 119
பிணை 154
பிரசம் 189

பீ

பீரம் 92

பு

புலி 41
புள் 10
புள் ஆர் இயம் 99
புன்ஞகம் 91
புன்னை 93
புனம் 157

பூ

பூ மலி சோலை 214

பெ

பெண்ணை 220
பெருந்தகை 179, 206

பை

பை 102
பைந் நிணம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில் 204

பொ

பொன் 13, 59, வெ. 1

போ

போங்கம் 74

பௌ

பௌவம் 47

ம

மஞ்ஞை 169, 250
மணி 13, 59, 112, 221
மணிச்சிகை 64
மராஅம் 85
மருதம் 73
மலை மீமிசைக் கடவுள் 208-209
மலைய மலர் 113
மன்று 218
மனை 223
மனையோள் 154

மா

மா 76
மான் 25
மான் கணம் 217

மி

மிச்சில் 206
மிஞிறு 111
மிடாஅச் சொன்றி 201
மிளகு 187

மு

முத்து 36
முதலை 257
முரசு 49, 51
முல்லை 77
முழவு 236
முனை 128

மூ

மூதூர் 236

மௌ

மௌவல் 81

யா

யாழ் 110
யானை 35, 171

வ

வகுளம் 70
வஞ்சி 89
வஞ்சினம் 210
வடவனம் 67
வண்டு 148
வண்ணம் 31
வண்ண வண்ணத்த மலர் 114
வம்பு விரி களம் 198
வயிர் 219
வரை அரமகளிர் 195
வலை 250
வழை 83
வள்ளி 79
வளமை 244
வளை (வளையல்) 167

வா

வாகை 67
வாய்மை 210
வாழை 79, 179
வான் 98
வான் உரி உறையுள் வயங்கியோர் 213
வான் திணைப் புரையோர் 205
வானம் 48, 227
வாணி 69

வி

விடர் அகம் 261
விடை 136
வியப்பு 15
விருந்து உண்ணல் 206
விரை 7
வில் 124
விழவுக் களம் 192

வீ

வீளையர் 161

வெ

வெட்சி 63
வெண் போழ்க் கண்ணி 115
வெதிர் 35

வே

வேங்கை 95
வேந்தன் 229
வேரல் 71
வேல் 129
வேழம் 165
வேறு பல் உருவின் கடவுள் 6

பட்டினப் பாலை

காவிரியின் சிறப்பு

வசை இல் புகழ், வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்,
தற் பாடிய தளி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி,
வான் பொய்ப்பினும், தான் பொய்யா,
மலைத் தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்—

சோழ நாட்டின் சிறப்பு

விளைவு அறா வியன் கழனி,
கார்க் கரும்பின் கமழ் ஆலைத்
தீத் தெறுவின், கவின் வாடி,
நீர்ச் செறுவின் நீள் நெய்தற்
பூச் சாம்பும் புலத்து ஆங்கண்,
காய்ச் செந்நெல் கதிர் அருந்து
மோட்டு எருமை முழுக் குழவி,
கூட்டு நிழல், துயில் வதியும்—
கோட் தெங்கின், குலை வாழை,
காய்க் கமுகின், கமழ் மஞ்சள்,
இன மாவின், இணர்ப் பெண்ணை,
முதற் சேம்பின், முளை இஞ்சி—
அகல் நகர் வியல் முற்றத்து,
சுடர் நுதல், மட நோக்கின்,
நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங் காற் கனங் குழை,
பொற் காற் புதல்வர் புரவி இன்று உருட்டும்,
முக் காற் சிறு தேர் முன் வழி விலக்கும்—
விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா,
கொழும் பல் குடிச் செழும் பாக்கத்து,
குறும் பல் ஊர் நெடுஞ் சோணாட்டு—

நகரச் சிறப்பு

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல் வாய்ப் பஃறி,

பணை நிலைப் புரவியின், அணை முதல் பிணிக்கும்
கழி சூழ் படப்பை, கலி யாணர்ப்
பொழில் புறவின் பூந்தண்டலை,
மழை நீங்கிய மா விசும்பில்
மதி சேர்ந்த மக வெண் மீன்
உரு கெழு திறல் உயர் கோட்டத்து,
முருகு அமர் பூ முரண் கிடக்கை
வரி அணி சுடர், வான் பொய்கை,
இரு காமத்து இணை ஏரி,
புலிப் பொறிப் போர்க் கதவின்
திருத் துஞ்சும் திண் காப்பின்,
புகழ் நிலைஇய மொழி வளர
அறம் நிலைஇய அகன் அட்டில்—
சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி,
ஏறு பொரச் சேறாகி,
தேர் ஓடத் துகள் கெழுமி,
நீறு ஆடிய களிறு போல,
வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும்:
தண் கேணித் தகை முற்றத்து,
பகட்டு எருத்தின் பல சாலை;
தவப் பள்ளி; தாழ் காவின்
அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும் புகை முனைஇ, குயில் தம்
மா இரும் பெடையோடு இரியல் போகி,
பூதம் காக்கும் புகல் அருங் கடி நகர்,
தூது உண் அம் புறவொடு துச்சிற் சேக்கும்
முது மரத்த முரண் களரி;

மக்களின் விளையாட்டுக்கள்

வரி மணல் அகன் திட்டை,
இருங் கிளை, இனன் ஒக்கல்,
கருந் தொழில், கலி மாக்கள்
கடல் இறவின் சூடு தின்றும்,
வயல் ஆமைப் புழுக்கு உண்டும்,
வறள் அடும்பின் மலர் மலைந்தும்,
புனல் ஆம்பற் பூச் சூடியும்,
நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்
நாள்மீன் விராஅய கோள்மீன் போல,
மலர் தலை மன்றத்துப் பலர் உடன் குழீஇ,
கையினும் கலத்தினும் மெய் உறத் தீண்டி,

பெருஞ் சினத்தால் புறக்கொடாஅது,
இருஞ் செருவின் இகல் மொய்ம்பினோர்,
கல் எறியும் கவண் வெரீஇப்
புள் இரியும் புகர்ப் போந்தை;
பறழ்ப் பன்றி, பல் கோழி,
உறைக் கிணற்றுப் புறச் சேரி,
மேழகத் தகரொடு சிவல் விளையாட—

கடற்கரையில் பகல் விளையாட்டு

கிடுகு நிரைத்து, எஃகு ஊன்றி,
நடு கல்லின் அரண் போல,
நெடுந் தூண்டிலில் காழ் சேர்த்திய
குறுங் கூரைக் குடி நாப்பண்;
நிலவு அடைந்த இருள் போல,
வலை உணங்கும் மணல் முன்றில்;
வீழ்த் தாழைத் தாட் தாழ்ந்த
வெண் கூதாளத்துத் தண் பூங் கோதையர்,
சினைச் சுறவின் கோடு நட்டு,
மனைச் சேர்த்திய வல் அணங்கினான்,
மடற் தாழை மலர் மலைந்தும்;
பிணர்ப் பெண்ணைப் பிழி மகிழ்ந்தும்;
புன் தலை இரும் பரதவர்
பைந் தழை மா மகளிரொடு,
பாய் இரும் பனிக் கடல் வேட்டம் செல்லாது,
உவவு மடிந்து, உண்டு ஆடியும்;
புலவு மணல், பூங் கானல்,
மா மலை அணைந்த கொண்மூப் போலவும்,
தாய் முலை தழுவிய குழவி போலவும்,
தேறு நீர்ப் புணரியோடு யாறு தலைமணக்கும்
மலி ஓதத்து ஒலி கூடல்,
தீது நீங்க, கடல் ஆடியும்;
மாசு போக, புனல் படிந்தும்;
அலவன் ஆட்டியும்; உரவுத் திரை உழக்கியும்;
பாவை சூழ்ந்தும்; பல் பொறி மருண்டும்:
அகலாக் காதலொடு பகல் விளையாடி—

இரவில் துயிலும் நிலை

பெறற்கு அருந் தொல் சீர்த் துறக்கம் ஏய்க்கும்,
பொய்யா மரபின், பூ மலி பெருந் துறை,

துணைப் புணர்ந்த மட மங்கையர்
பட்டு நீக்கித் துகில் உடுத்தும்,
மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்,
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்,
மகளிர் கோதை மைந்தர் மலையவும்,
நெடுங் கால் மாடத்து, ஒள் எரி நோக்கி,
கொடுந் திமில் பரதவர் குரூஉச் சுடர் எண்ணவும்,
பாடல் ஓர்த்தும், நாடகம் நயந்தும்,
வெண் நிலவின் பயன் துய்த்தும்,
கண் அடைஇய கடைக் கங்குலான்,
மாஅ காவிரி மணம் கூட்டும்
தூ எக்கர்த் துயில் மடிந்து—

ஏற்றுமதி இறக்குமதி நிகழும் பண்டசாலை முற்றம்

வால் இணர் மடற் தாழை
வேல் ஆழி வியன் தெருவில்,
நல் இறைவன் பொருள் காக்கும்
தொல் இசைத் தொழில் மாக்கள்,
காய் சினத்த கதிர்ச் செல்வன்
தேர் பூண்ட மாஅ போல,
வைகல்தொறும் அசைவு இன்றி,
உல்கு செயக் குறை படாது—
வான் முகந்த நீர் மலைப் பொழியவும்,
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்,
மாரி பெய்யும் பருவம் போல—
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்,
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்,
அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி,
அருங் கடிப் பெருங் காப்பின்,
வலியுடை வல் அணங்கின் நோன்
புலி பொறித்து, புறம் போக்கி,
மதி நிறைந்த மலி பண்டம்
பொதி மூடைப் போர் ஏறி,
மழை ஆடு சிமைய மால் வரைக் கவாஅன்
வரை ஆடு வருடைத் தோற்றம் போல,
கூர் உகிர் ஞமலிக் கொடுந் தாள் ஏற்றை
ஏழகத் தகரோடு உகளும் முன்றில்—

மகளிர் வெறியாடி விழாக் கொண்டாடும் ஆவணம்

குறுந் தொடை நெடும் படிக்கால்
கொடுந் திண்ணை, பல் தகைப்பின்,
புழை, வாயில், போகு இடைகழி,
மழை தோயும் உயர் மாடத்து—
சேவடி, செறி குறங்கின்,
பாசிழை, பகட்டு அல்குல்,
தூசு உடை, துகிர் மேனி,
மயில் இயல், மான் நோக்கின்,
கிளி மழலை, மென் சாயலோர்—
வளி நுழையும் வாய் பொருந்தி,
ஓங்கு வரை மருங்கின் நுண் தாது உறைக்கும்
காந்தள் அம் துடுப்பின் கவிகுலை அன்ன,
செறி தொடி முன்கை கூப்பி, செவ்வேள்
வெறி ஆடு மகளிரொடு செறியத் தாஅய்,
குழல் அகவ, யாழ் முரல,
முழவு அதிர, முரசு இயம்ப,
விழவு அரு வியல் ஆவணத்து—

பலவகைக் கொடிகளின் காட்சி

மை அறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய
மலர் அணி வாயில் பலர் தொழு கொடியும்;
வரு புனல் தந்த வெண் மணற் கான் யாற்று
உரு கெழு கரும்பின் ஒண் பூப் போல,
கூழுடைக் கொழு மஞ்சிகை,
தாழுடைத் தண் பணியத்து,
வால் அரிசிப் பலி சிதறி,
பாகு உகுத்த, பசு மெழுக்கின்,
காழ் ஊன்றிய கவி கிடுகின்
மேல் ஊன்றிய துகிற் கொடியும்;
பல் கேள்வித் துறை போகிய
தொல் ஆணை நல் ஆசிரியர்
உறழ் குறித்து எடுத்த உரு கெழு கொடியும்;
வெளில் இளக்கும் களிறு போல,
தீம் புகார்த் திரை முன்துறை,
தூங்கு நாவாய், துவன்று இருக்கை,
மிசைக் கூம்பின் நசைக் கொடியும்;
மீன் தடிந்து, விடக்கு அறுத்து,
ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்,
மணற் குவைஇ, மலர் சிதறி,

பலர் புகு மனைப் பலிப் புதவின்
நறவு நொடைக் கொடியோடு;
பிற பிறவும் நனி விரைஇ,
பல் வேறு உருவின் பதாகை நீழல்
செல் கதிர் நுழையாச் செழு நகர் வரைப்பின்—

வளம் பல நிறைந்த தெருக்கள்

செல்லா நல் இசை அமரர் காப்பின்,
நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,
காலின் வந்த கருங் கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென் கடல் முத்தும், குண கடற் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,
அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,
வளம் தலைமயங்கிய நனந் தலை மறுகின்—

வணிகர்களின் வாழ்க்கை முறை

நீர் நாப்பண்ணும் நிலத்தின் மேலும்
ஏமாப்ப இனிது துஞ்சி,
கிளை கலித்துப் பகை பேணாது,
வலைஞர் முன்றில் மீன் பிறழவும்,
விலைஞர் குரம்பை மா ஈண்டவும்,
கொலை கடிந்தும், களவு நீக்கியும்,
அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
நல் ஆனொடு பகடு ஓம்பியும்,
நான் மறையோர் புகழ் பரப்பியும்,
பண்ணியம் அட்டியும், பசும் பதம் கொடுத்தும்,
புண்ணியம் முட்டாத் தண் நிழல் வாழ்க்கை,
கொடு மேழி நசை உழவர்
நெடு நுகத்துப் பகல் போல,
நடுவு நின்ற நல் நெஞ்சினோர்,
வடு அஞ்சி, வாய் மொழிந்து,
தமவும் பிறவும் ஒப்ப நாடி,
கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது,
பல் பண்டம் பகர்ந்து வீசும்,
தொல் கொண்டி, துவன்று இருக்கை—

பற்பல மொழி பேசுவோர் உறையும் பட்டினம்

பல் ஆயமொடு பதி பழகி,
வேறு வேறு உயர்ந்த முது வாய் ஒக்கல்
சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு,

மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்து, இனிது, உறையும்,
முட்டாச் சிறப்பின், பட்டினம் பெறினும்—

தலைவனது அவல நிலை

வார் இருங் கூந்தல் வயங்குஇழை ஒழிய,
வாரேன்; வாழிய, நெஞ்சே!—

திருமாவளவன் அரச உரிமை பெற்ற வகை

கூர் உகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு,
பிறர் பிணியகத்து இருந்து, பீடு காழ் முற்றி;
அருங் கரை கவியக் குத்தி, குழி கொன்று,
பெருங் கை யானை பிடி புக்காங்கு,
நுண்ணிதின் உணர நாடி, நண்ணார்
செறிவுடைத் திண் காப்பு ஏறி, வாள் கழித்து,
உரு கெழு தாயம் ஊழின் எய்தி—

பகைவர்மேல் போருக்கு எழுதல்

பெற்றவை மகிழ்தல் செய்யான், செற்றோர்
கடி அரண் தொலைத்த கதவு கொல் மருப்பின்,
முடியுடைக் கருந் தலை புரட்டும் முன் தாள்,
உகிருடை அடிய, ஓங்கு எழில் யானை,
வடி மணிப் புரவியொடு, வயவர், வீழ,
பெரு நல் வானத்துப் பருந்து உலாய் நடப்ப,
தூறு இவர் துறுகல் போல, போர் வேட்டு,
வேறு பல் பூளையொடு உழிஞை சூடி,
பேய்க் கண் அன்ன பிளிறு கடி முரசம்
மாக் கண் அகல் அறை அதிர்வன முழங்க,
முனை கெடச் சென்று, முன் சமம் முருக்கி,
தலை தவச் சென்று—

பகைவரது நாட்டைப் பாழ்படுத்துதல்

தண் பணை எடுப்பி,
வெண் பூக் கரும்பொடு செந்நெல் நீடி,
மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி,
கராஅம் கலித்த கண் அகன் பொய்கை,
கொழுங் கால் புதவமொடு செருந்தி நீடி,
செறுவும் வாவியும், மயங்கி, நீர் அற்று,
அறு கோட்டு இரலையொடு மான் பிணை உகளவும்;

கொண்டி மகளிர், உண்துறை மூழ்கி,
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்,
மலர் அணி மெழுக்கம், ஏறிப் பலர் தொழ,
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்,
பரு நிலை நெடுந் தூண் ஒல்கத் தீண்டி,
பெரு நல் யானையொடு பிடி புணர்ந்து உறையவும்;
அரு விலை நறும் பூத் தூஉய், தெருவில்
முது வாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரி புரி நரம்பின் தீந் தொடை ஓர்க்கும்
பெரு விழாக் கழிந்த, பேஎம் முதிர், மன்றத்து,
சிறு பூ நெருஞ்சியோடு அறுகை பம்பி,
அழல் வாய் ஓரி அஞ்சு வரக் கதிர்ப்பவும்;
அழு குரற் கூகையோடு ஆண்டலை விளிப்பவும்;
கணம் கொள் கூளியொடு கதுப்பு இகுத்து அசைஇ,
பிணம் தின் யாக்கைப் பேய் மகள் துவன்றவும்;
கொடுங் கால் மாடத்து நெடுங் கடைத் துவன்றி,
விருந்து உண்டு ஆனாப் பெருஞ் சோற்று அட்டில்,
ஒண் சுவர் நல் இல் உயர் திணை இருந்து,
பைங் கிளி மிழற்றும் பால் ஆர் செழு நகர்,
தொடுதோல் அடியர் துடி படக் குழீஇ,
கொடு வில் எயினர் கொள்ளை உண்ட
உணவு இல் வறுங் கூட்டு உள்ளகத்து இருந்து,
வளை வாய்க் கூகை நன் பகல் குழறவும்;
அருங் கடி வரைப்பின் ஊர் கவின் அழிய,
பெரும் பாழ் செய்தும் அமையான்—

திருமாவளவனது ஆற்றல்

'மருங்கு அற
மலை அகழ்க்குவனே; கடல் தூர்க்குவனே;
வான் வீழ்க்குவனே; வளி மாற்றுவன்' என,
தான் முன்னிய துறைபோகலின்,
பல் ஒளியர் பணிபு ஒடுங்க,
தொல் அருவாளர் தொழில் கேட்ப,
வடவர் வாட, குடவர் கூம்ப,
தென்னவன் திறல் கெட, சீறி, மன்னர்
மன் எயில் கதுவும் மதனுடை நோன் தாள்,
மாத் தானை மற மொய்ம்பின்,
செங் கண்ணால் செயிர்த்து நோக்கி,
புன் பொதுவர் வழி பொன்ற,
இருங்கோ வேள் மருங்கு சாய—

சோழ நாட்டையும் உறையூரையும் சிறப்புறச் செய்தல்

காடு கொன்று நாடு ஆக்கி,
குளம் தொட்டு வளம் பெருக்கி,
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி,
கோயிலொடு குடி நிறீஇ,
வாயிலொடு புழை அமைத்து,
ஞாயில்தொறும் புதை நிறீஇ,
பொருவேம் எனப் பெயர் கொடுத்து,
ஒருவேம் எனப் புறக்கொடாது,
திரு நிலைஇய பெரு மன் எயில்,
மின் ஒளி எறிப்பத் தம் ஒளி மழுங்கி,
விசி பிணி முழவின் வேந்தர் சூடிய
பசு மணி பொருத பரு ஏர் எறுழ்க் கழற் கால்,
பொன் தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்,
முற்று இழை மகளிர் முகிழ் முலை திளைப்பவும்,
செஞ் சாந்து சிதைந்த மார்பின் ஒண் பூண்
அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமாவளவன்—

தலைவன் தலைவியைப் பிரிதற்கு அருமை கூறல்

தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய, கானம்; அவன்
கோலினும் தண்ணிய, தட மென் தோளே!

சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது.

பட்டினப் பாலை முற்றும்

தனிப் பாடல்

முச் சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச் சக்கரமே அளந்ததால்—செய்ச் செய்
அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய் புனல் நீர்நாடன்
கரிகாலன் கால் நெருப்பு உற்று.

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அட்டில் 43, 262
அடும்பின் மலர் 65
அணங்கு 87
அந்தி 247
அமரர் 184
அமரர்ப் பேணுதல் 200
அரிசிப் பலி 165
அரிமா 298
அருங்கடிப் பெருங் காப்பு 133
அருவாளர் 275
அலவன் 101
அறம் 43
அறுகை 256

ஆ

ஆண்டலை 258
ஆம்பல் 66
ஆமைப் புழுக்கு 64
ஆயம் 213
ஆரம் 188
ஆலை 9
ஆவணம் 158
ஆவுதி 55
ஆவுதி அருத்துதல் 200
ஆன் ஓம்புதல் 201

இ

இஞ்சி 19
இடைகழி 144
இரலை 245
இரு காமத்து இணை ஏரி 39
இருங்கோ வேள் 282
இருள் 82
இல் 263
இறைவன் 12)

ஈ

ஈழத்து உணவு 191

உ

உண்டு ஆடுதல் 93
உணங்கு 22
உப்பு 29
உல்கு 125
உவவு (உவா நாள்) 93
உழவர் 205
உழிஞை 235
உறந்தை 285
உறழ் குறித்து எடுத்த கொடி 171
உறைக் கிணறு 76

ஊ

ஊர் 28, 269
ஊன் பொரிக்கும் ஒலி 177

எ

எஃகு 78
எயில் 291
எயினர் 266
எருத்தின் பல சாலை 52
எருது 52
எருமை 14

ஏ

ஏழகத் தகர் 141

ஒ

ஒக்கல் 61, 214
ஒளியர் 274

ஓ

ஓரி 257
ஓவம் 49

க

கங்கை வாரி 190
கஞ்சி 44
கடல் 6, 63, 99, 127, 271
கடல் ஆடுதல் 99
கடல் இறவின் சூடு 63
கடி அரண் 229
கடி நகர் (காளி கோட்டம்) 57
கடை 261
கடைக் கங்குல் 115
கண்ணி 109
கதிர்ச் செல்வன் 122
கந்து 249
கமுகு 17
கராஅம் 242
கரிகாலன் வெ. 1
கருந் தொழிற் கலிமாக்கள் (பரதவர் பிள்ளைகள்) 62
கரும்பு 9, 162, 240
கலங்கு பகை 26
கவண் 73
கழல் 294
கழனி 8
களரி 59
களவு நீக்குதல் 199
களிறு 48, 172
கறி 186

கா

கா 53
காடு கொன்று நாடாக்குதல் 283
காந்தள் 153
காப்பு 41
காவிரி 6, 116
காவிரிப் பயன் 190
காழ் 167
காழகத்து ஆக்கம் 191
கான் யாறு 161
கானல் 94

கி

கிடுகு 78, 167
கிளி 150
கிளை 196

கு

குடமலை 188
குடவர் 276
குடி 286
குண கடல் 189
குயில் 55
குருளை 221
குவளை 241
குழல் 156
குழவி 96
குழை 23
குளம் தொடுதல் 284
குறுங் கூரைக் குடி 81

கூ

கூகை 258, 268
கூடல் (புகார் முகம்) 98
கூடு 221, 267
கூடு (நெற் கூடு) 15
கூம்பின் நசைக் கொடி 175
கூழ் 163
கூளி 259

கே

கேணி 51
கேள்வி 169

கொ

கொடி 160
கொண்டி 212
கொண்டி மகளிர் 246
கொண்மூ 95
கொலை கடிதல் 199

கோ

கோட்டம் 36
கோடியர் 253
கோதை 110
கோயில் 286
கோல் 301
கோழி 23, 75
கோள்மீன் 68

ச

சக்கரம் வெ. 1
சமம் 238

சா

சாறு 215
சாறு அயர் மூதூர் 215

சி

சிவல் 77
சிறு தேர் 25

சு

சுடர் (விளக்கு) 112
சுறவின் கோடு 86

செ

செஞ் சாந்து 297
செந் நெல் 13, 240
செரு 72
செருந்தி 243
செவ்வேள் 154
செற்றோர் 228
செறு 11, 244

சே

சேம்பு 19

சோ

சோணாடு 28
சோறு 44

ஞ

ஞமலி 140

ஞா

ஞாயில் 288

த

தகைப்பு 143
தண்டலை 33
தவப் பள்ளி 53
தழை 91
தளி உணவின் புள் 3-4

தா

தாய் 96
தாயம் 227
தாழ் 164
தாழை 84, 88, 118
தானை 279

தி

திட்டை 60
திணை (திண்ணை) 263
திமில் 112
திரு 41
திருமாவளவன் 299
திரை 101

தீ

தீ 10
தீது 99

து

துகிர் 148, 189
துகில் 107
துகிற் கொடி 168
துச்சில் (குடியிருப்பு) 58
துடி 265
துவன்று இருக்கை 212
துறக்கம் 104

தூ

தூசு உடை 148
தூண்டில் 80

தெ

தெங்கு 16
தெய்வம் 159
தெவ்வர் 299
தென் கடல் 189
தென்னவன் 277

தே

தேஎம் 216
தேர் 47, 123

தொ

தொடி 154
தொடு தோல் 265
தொல் ஆணை நல் ஆசிரியர் 170

ந

நகர் 20, 183
நடு கல்லின் அரண் 79
நடுவு 207
நண்ணார் 225
நந்தா விளக்கு 247
நரம்பின் தீந் தொடை 254
நறவு நொடைக் கொடி 180

நா

நாடகம் 113
நாவாய் 174
நாள்மீன் 68
நான்மறையோர் புகழ் பரப்பல் 202

நி

நிலம் 129, 130
நிலவு 114

நீ

நீர் 129, 130, 185

நு

நுகத்துப் பகல் 206

நெ

நெய்தல் 11, 241
நெருஞ்சி 256
நெல் 30

ப

பஃறி 30
பகடு 52
பகடு ஓம்புதல் 201
பகல் 103
பகை 196
பசும் பதம் கொடுத்தல் 203
பசு மெழுக்கு 166
பட்டினம் 218
பட்டு 107
படப்பை 32
படிக்கால் 142
பண்டம் 131, 136, 211
பண்ணியம் 203
பணியம் 164
பதாகை 182
பதி 213
பரதவர் 90, 112
பருந்து 233
பன்றி 75
பனிக் கடல் 92

பா

பாக்கம் 72
பாகு 166
பாடல் 113
பாவை 102

பி

பிடி 224, 251
பிணம் 260
பிணியகம் 222
பிணை 245

பு

புகழ் நிலைஇய மொழி 42
புகார் 173
புண்ணியம் 204
புணரி 97
புதல்வர் 24, 295
புதவம் 243
புதை 288
புயல் 4
புரவி 24, 31, 185, 232
புலம் 12
புலம் பெயர் மாக்கள் 217
புலிப் பொறி 40
புலி பொறித்தல் 135
புழை 287
புறச் சேரி (இழிகுலத்தோர் தெரு) 76
புறவு 58
புனல் 7, 100
புனல் நீர் நாடன் வெ. 1

பூ

பூ 12
பூதம் 57
பூமலி பெருந் துறை 105
பூளை 235

பெ

பெண்ணை 18
பெண்ணைப் பிழி 89
பெருஞ் சோறு 262

பே

பேய்க் கண் 236
பேய்மகள் 260

பை

பைங் கிளி 264

பொ

பொதி மூடைப் போர் 137
பொதியில் 249
பொதுவர் 281
பொய்கை 242
பொருள் காக்கும் தொழில் மாக்கள் 120-121
பொறி 102
பொன் 7, 187

போ

போந்தை 74
போர் 234
போர்க் கதவு 40

ம

மக வெண் மீன் 35
மகளிர் கோதை 110
மஞ்சள் 17
மஞ்சிகை 163
மட்டு 108
மணல் முன்றில் 83
மணி 187
மதி 35
மது 108
மயில் 149
மருப்பு 229
மலர் 178
மலர் அணி வாயில் 160
மலை 95, 127, 271
மறுகு 193
மன்றம் 69, 255
மனை 87

மா

மா 18, 123, 198
மாசு 100
மாடத்து ஒள் எரி 111
மாடம் 111, 145, 261, 285
மாரி பெய்யும் பருவம் 128
மான் 149

மீ

மீன் 176, 197

மு

முக் காற் சிறு தேர் 25
முத்து 189
முதுமரம் 59
முரசம் 236
முரசு 157
முருகு அமர் பூ 37
முழவு 157, 253, 293
முற்றம் 20, 51
முன்றில் 141, 177
முனிவர் 54
முனை 238

மூ

மூடைப் போர் 137
மூதூர் 215

மெ

மெழுக்கம் 248

மே

மேழகத் தகர் 77
மேழி 205

மை

மைந்தர் கண்ணி 109

மொ

மொய்ம்பினோர் 72
மொழி 216

யா

யாழ் 156
யாறு 45, 97
யானை 224, 231, 251

வ

வடமலை 187
வடவர் 276
வடு 208
வம்பலர் 249
வயல் 64
வயவர் 232
வருடை 139
வலை 83
வலைஞர் முன்றில் 197
வளம் பெருக்கல் 234
வளி 272
வளி நுழையும் வாய் (சாளரம்) 151

வா

வாய் மொழிதல் 208
வாயில் 144, 287
வாவி 244
வாழை 16

வாள் 226
வான் 5, 126, 272
வானம் 233

வி

விசும்பு 67
விடக்கு 176
விருந்து 262
விலங்கு பகை 26
விலைஞர் குரம்பை 198
விழவு 158
விழா 255
விளைவு 8

வெ

வெண் கூதாளம் 85
வெண் கோயில் 50
வெண் மீன் 1
வெளில் 172
வெறி ஆடு மகளிர் 155

வே

வேட்டம் 92
வேல் 300
வேல் ஆழி வியன் தெரு 119

வை

வைகல் 124

மலைபடுகடாம்

கூத்தர் பலவகை வாத்தியங்களைப் பையிலிட்டு எடுத்துச் செல்லுதல்

திரு மழை தலைஇய இருள் நிற விசும்பின்
விண் அதிர் இமிழ் இசை கடுப்ப, பண் அமைத்து,
திண் வார் விசித்த முழவொடு, ஆகுளி,
நுண் உருக்கு உற்ற விளங்கு அடர்ப் பாண்டில்,
மின் இரும் பீலி அணித் தழைக் கோட்டொடு,
கண் இடை விடுத்த களிற்று உயிர்த் தூம்பின்,
இளிப் பயிர் இமிரும் குறும் பரம் தூம்பொடு,
விளிப்பது கவரும் தீம் குழல் துதைஇ,
நடுவு நின்று இசைக்கும் அரிக் குரற் தட்டை,
கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய் எல்லரி,
நொடி தரு பாணிய பதலையும், பிறவும்,
கார் கோட் பலவின் காய்த் துணர் கடுப்ப,
நேர் சீர் சுருக்கிக் காய கலப் பையிர்——

அவர்கள் கடந்து வந்த மலை வழி

கடுக் கலித்து எழுந்த கண் அகன் சிலம்பில்
படுத்து வைத்தன்ன பாறை மருங்கின்,
எடுத்து நிறுத்தன்ன இட்டு அருஞ் சிறு நெறி,
தொடுத்த வாளியர், துணை புணர் கானவர்,
இடுக்கண் செய்யாது, இயங்குநர் இயக்கும்
அடுக்கல் மீமிசை, அருப்பம் பேணாது,
இடிச் சுர நிவப்பின் இயவுக் கொண்டு ஒழுகி——

பேரியாழின் இயல்பு

தொடித் திரிவு அன்ன தொண்டு படு திவவின்;
கடிப்பகை அனைத்தும், கேள்வி போகா,
குரல் ஓர்த்துத் தொடுத்த சுகிர் புரி நரம்பின்,
அரலை தீர உரீஇ; வரகின்
குரல் வார்ந்தன்ன நுண் துளை இரீஇ,
சிலம்பு அமை பத்தல் பசையொடு சேர்த்தி,
இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி,
புதுவது புனைந்த வெண்கை யாப்பு அமைத்து,
புதுவது போர்த்த பொன் போல் பச்சை;
வதுவை நாறும் வண்டு கமழ் ஐம்பால்

மடந்தை மாண்ட நுடங்கு எழில் ஆகத்து
அடங்கு மயிர் ஒழுகிய அவ் வாய் கடுப்ப,
அகடு சேர்பு பொருந்தி, அளவினில் திரியாது,
கவடு படக் கவைஇய சென்று வாங்கு உந்தி;
நுணங்கு அரம் நுவறிய நுண் நீர் மாமை,
களங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின்,
வணர்ந்து ஏந்து மருப்பின்—வள் உயிர்ப் பேரியாழ்

பாணரும் விறலியரும் சூழ இருந்த கூத்தர் தலைவனை அழைத்தல்

அமை வரப் பண்ணி, அருள் நெறி திரியாது,
இசை பெறு திருவின் வேத்தவை ஏற்ப,
துறை பல முற்றிய பை தீர் பாணரொடு—
உயர்ந்து ஓங்கு பெரு மலை ஊறு இன்று ஏறலின்,
மதம் தபு ஞமலி நாவின் அன்ன,
துளங்கு இயல் மெலிந்த, கல் பொரு சீறடி,
கணம் கொள் தோகையின் கதுப்பு இகுத்து அசைஇ,
விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து,
இலங்கு வளை, விறலியர் நிற் புறம் சுற்ற—
கயம் புக்கன்ன பயம் படு தண் நிழல்,
புனல் கால் கழீஇய மணல் வார் புறவில்,
புலம்பு விட்டு இருந்த புனிறு இல் காட்சி,
கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ!

'நன்னனை அடைந்தால் நல்ல பயன் பெறுவீர்கள்' எனல்

தூ மலர் துவன்றிய கரை பொரு நிவப்பின்
மீமிசை நல் யாறு கடல் படர்ந்தாஅங்கு,
யாம் அவண் நின்றும் வருதும்; நீயிரும்,
கனி பொழி கானம் கிளையொடு உணீஇய,
துனை பறை நிவக்கும் புள்ளினம் மான,
புனை தார்ப் பொலிந்த வண்டு படு மார்பின்,
வனை புனை எழில் முலை வாங்கு அமைத் திரள் தோள்
மலர் போல் மழைக் கண் மங்கையர், கணவன்;
முனை பாழ் படுக்கும் துன் அருந் துப்பின்,
இசை நுவல் வித்தின் நசை ஏர் உழவர்க்குப்
புது நிறை வந்த புனல் அம் சாயல்,
மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி,
வில் நவில் தடக் கை, மே வரும் பெரும் பூண்,
நன்னன் சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு,
உள்ளினிர் சேறிர்ஆயின், பொழுது எதிர்ந்த
புள்ளினிர்மன்ற, எற் தாக்குறுதலின்—

கூத்தன் தான் கூறப் போகும் செய்திகளைத் தொகுத்துக் கூறுதல்

ஆற்றின் அளவும், அசையும் நல் புலமும்,
வீற்று வளம் சுரக்கும் அவன் நாடு படு வல்சியும்,
மலையும், சோலையும், மா புகல் கானமும்,
தொலையா நல் இசை உலகமொடு நிற்ப,
பலர் புறம் கண்டு, அவர் அருங் கலம் தரீஇ,
புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகை மாரியும்,
இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும், புகழுநர்க்கு
அரசு முழுது கொடுப்பினும், அமரா நோக்கமொடு,
தூத் துளி பொழிந்த பொய்யா வானின்,
வீயாது சுரக்கும் அவன் நாள் மகிழ் இருக்கையும்,
நல்லோர் குழீஇய நா நவில் அவையத்து,
வல்லார் ஆயினும் புறம் மறைத்து, சென்றோரைச்
சொல்லிக் காட்டி, சோர்வு இன்றி விளக்கி,
நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்,
நீர் அகம் பனிக்கும் அஞ்சு வரு கடுந் திறல்,
பேர் இசை நவிரம் மேஎய் உறையும்,
காரி உண்டிக் கடவுளது இயற்கையும்,
பாய் இருள் நீங்கப் பகல் செய்யா எழுதரும்
ஞாயிறு அன்ன, அவன் வசை இல் சிறப்பும்,
இகந்தனஆயினும், தெவ்வர் தேஎம்
நுகம் படக் கடந்து, நூழிலாட்டி,
புரைத் தோல் வரைப்பின் வேல் நிழற் புலவோர்க்குக்
கொடைக் கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்,
இரை தேர்ந்து இவரும் கொடுந் தாள் முதலையொடு
திரை படக் குழிந்த கல் அகழ் கிடங்கின்,
வரை புரை நிவப்பின் வான் தோய் இஞ்சி,
உரை செல வெறுத்த அவன் மூதூர் மாலையும்,
கேள்—இனி, வேளை நீ முன்னிய திசையே:

வழியினது நன்மையின் அளவு கூறுதல்

மிகு வளம் பழுநிய யாணர் வைப்பின்,
புதுவது வந்தன்று; இது அதன் பண்பே:
வானம் மின்னு வசிவு பொழிய, ஆனாது
இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய,
பெயலொடு வைகிய வியன் கண் இரும் புனத்து,
அகல் இரு விசும்பின் ஆஅல் போல,
வாலிதின் விரிந்த புன் கொடி முசுண்டை;
நீலத்து அன்ன விதைப் புன மருங்கில்,
மகுளி பாயாது மலி துளி தழாலின்,

அகளத்து அன்ன நிறை சுனைப் புறவின்,
கௌவை போகிய கருங் காய் பிடி ஏழ்
நெய் கொள ஒழுகின, பல் கவர் ஈர் எண்;
பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப,
கொய் பதம் உற்றன, குலவுக் குரல் ஏனல்;
விளை தயிர்ப் பிதிர்வின் வீ உக்கு, இருவிதொறும்,
குளிர் புரை கொடுங் காய் கொண்டன, அவரை;
மேதி அன்ன கல் பிறங்கு இயவின்,
வாதி கை அன்ன கவைக் கதிர் இறைஞ்சி,
இரும்பு கவர்வுற்றன, பெரும் புன வரகே;
பால் வார்பு கெழீஇ, பல் கவர் வளி போழ்பு,
வாலிதின் விளைந்தன, ஐவன வெண்ணெல்;
வேல் ஈண்டு தொழுதி இரிவுற்றென்ன,
கால் உறு துவைப்பின், கவிழ்க் கனைத்து, இறைஞ்சி,
குறை அறை வாரா நிவப்பின், அறை உற்று,
ஆலைக்கு அலமரும், தீம் கழைக் கரும்பே;
புயற் புனிறு போகிய, பூ மலி புறவின்,
அவற் பதம் கொண்டன, அம் பொதித் தோரை;
தொய்யாது வித்திய துளர் படு துடவை
ஐயவி அமன்ற; வெண் காற் செறுவில்,
மை என விரிந்தன, நீள் நறு நெய்தல்;
செய்யாப் பாவை வளர்ந்து, கவின் முற்றி,
காயம் கொண்டன, இஞ்சி; மா இருந்து,
வயவுப் பிடி முழந் தாள் கடுப்ப, குழிதொறும்,
விழுமிதின் வீழ்ந்தன, கொழுங் கொடிக் கவலை;
காழ் மண்டு எஃகம் களிற்று முகம் பாய்ந்தென,
ஊழ் மலர் ஒழி முகை உயர்முகம் தோய,
துறுகல் சுற்றிய சோலை வாழை,
இறுகு குலை முறுகப் பழுத்த; பயம் புக்கு
ஊழ் உற்று அலமரும், உந்தூழ்; அகல் அறை,
காலம் அன்றியும் மரம் பயன் கொடுத்தலின்,
காலின் உதிர்ந்தன, கருங் கனி நாவல்;
மாறு கொள ஒழுகின, ஊறு நீர் உயவை;
நூறொடு குழீஇயின, கூவை; சேறு சிறந்து,
உண்ணுநர்த் தடுத்தன, தேமா; புண் அரிந்து,
அரலை உக்கன, நெடுந் தாள் ஆசினி;
விரல் ஊன்று படு கண் ஆகுளி கடுப்ப,
குடிஞை இரட்டும் நெடு மலை அடுக்கத்து,
கீழும் மேலும், கார் வாய்த்து எதிரி,
சுரம் செல் கோடியர் முழவின் தூங்கி,
முரஞ்சு கொண்டு இறைஞ்சின, அலங்கு சினைப் பலவே:

கானவர் குடியின் இயல்பு

தீயின் அன்ன ஒண் செங் காந்தள்
தூவல் கலித்த புது முகை ஊன் செத்து,
அறியாது எடுத்த புன் புறச் சேவல்,
ஊஉன் அன்மையின், உண்ணாது உகுத்தென,
நெருப்பின் அன்ன பல் இதழ் தாஅய்,
வெறிக்களம் கடுக்கும் வியல் அறைதோறும்
மண இல் கமழும் மா மலைச் சாரல்,
தேனினர், கிழங்கினர், ஊன் ஆர் வட்டியர்,
சிறு கட் பன்றிப் பழுதுளி போக்கி,
பொருது தொலை யானைக் கோடு சீர் ஆக,
தூவொடு மலிந்த காய கானவர்
செழும் பல் யாணர்ச் சிறு குடிப் படினே,
இரும் பேர் ஒக்கலொடு பதம் மிகப் பெறுகுவிர்.

வழியிலுள்ள சிற்றூர்களில் நிகழும் விருந்து

அன்று, அவண் அசைஇ, அற் சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து,
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப் படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி,
'நோனாச் செருவின் வலம் படு நோன் தாள்
மான விறல் வேள் வயிரியம்' எனினே,
நும் இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ,
சேட் புலம்பு அகல இனிய கூறி,
பருஉக் குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக் கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்.

நன்னனது மலைநாட்டில் பெறும் பொருள்கள்

ஏறித் தரூஉம் இலங்கு மலைத் தாரமொடு,
வேய்ப் பெயல் விளையுள் தேக் கட் தேறல்
குறைவு இன்று பருகி, நறவு மகிழ்ந்து, வைகறை,
பழஞ் செருக்கு உற்ற நும் அனந்தல் தீர,
அருவி தந்த பழம் சிதை வெண் காழ்,
வரு விசை தவிர்த்த கட மான் கொழுங் குறை,
முளவுமாத் தொலைச்சிய பைந் நிணப் பிளவை,
பிணவு நாய் முடுக்கிய தடியொடு விரைஇ,
வெண் புடைக் கொண்ட துய்த் தலைப் பழனின்
இன் புளிக் கலந்து மா மோர் ஆக,
கழை வளர் நெல்லின் அரி, உலை ஊழ்த்து,

வழை அமை சாரல் கமழத் துழைஇ,
நறு மலர் அணிந்த நாறு இரு முச்சிக்
குறமகள், ஆக்கிய வால் அவிழ் வல்சி,
அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ,
மக முறை தடுப்ப, மனைதொறும் பெறுகுவிர்.

மலைநாட்டில் நெடுநாள் தங்காது, நிலநாட்டில் செல்ல வேண்டுதல்

செருச் செய் முன்பின் குருசில் முன்னிய
பரிசில் மறப்ப, நீடலும் உரியிர்—
அனையது அன்று அவன் மலைமிசை நாடே—
நிரை இதழ்க் குவளைக் கடி வீ தொடினும்,
வரைஅரமகளிர் இருக்கை காணினும்,
உயிர் செல வெம்பிப் பனித்தலும் உரியிர்;
பல நாள் நில்லாது, நில நாடு படர்மின்.

வழியின் அருமை எடுத்துரைத்தல்

‘பன்றிப் பொறியுள்ள வழிகளில் பகலில் செல்லவேண்டும்’ எனல்

விளை புனம் நிழத்தலின், கேழல் அஞ்சி,
புழைதொறும் மாட்டிய இருங் கல் அடாஅர்
அரும் பொறி உடைய, ஆறே; நள் இருள்
அலரி விரிந்த விடியல், வைகினிர், கழிமின்.

பாம்புகள் உறையும் இடத்தைக் கடந்து செல்லும் வகை

நளிந்து பலர் வழங்காச் செப்பம் துணியின்,
முரம்பு கண் உடைந்த பரல் அவற் போழ்வில்,
கரந்து, பாம்பு ஒடுங்கும் பயம்புமார் உளவே;
குறிக் கொண்டு, மரங் கொட்டி, நோக்கி,
செறி தொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச,
வறிது நெறி ஒரீஇ, வலம் செயாக் கழிமின்.

கவண் கற்கள் படாமல் தப்பிச் செல்லவேண்டும் விதம்

புலந்து, புனிறு போகிய புனம் சூழ் குறவர்,
உயர் நிலை இதணம் ஏறி, கை புடையூஉ,
அகல் மலை இறும்பில் துவன்றிய யானைப்
பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங் கல்—
இரு வெதிர் ஈர்ங் கழை தத்தி, கல்லெனக்
கரு விரல் ஊகம் பார்ப்போடு இரிய—
உயிர் செகு மரபின் கூற்றத்து அன்ன:
வரும், விசை தவிராது; மரம் மறையாக் கழிமின்.

காட்டாற்று வழிகளில் வழுக்கும் இடங்களைக் கடத்தல்

உரவுக் களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி,
இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்,
குமிழி சுழலும் குண்டு கய முடுக்கர்,
அகழ் இழிந்தன்ன, கான் யாற்று நடவை
வழூஉம் மருங்கு உடைய; வழாஅல் ஓம்பி,
பரூஉக் கொடி வலந்த மதலை பற்றி,
துருவின் அன்ன புன் தலை மகாரோடு,
ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்.

பாசி படிந்த குளக் கரைகளைக் கடந்து செல்லுதல்

அழுந்து பட்டு அலமரும் புழகு அமல் சாரல்,
விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா,
வழும்பு கண் புதைத்த நுண் நீர்ப் பாசி
அடி நிலை தளர்க்கும் அருப்பமும் உடைய;
முழு நெறி பிணங்கிய நுண் கோல் வேரலொடு
எருவை மென் கோல் கொண்டனிர் கழிமின்.

காரி உண்டிக் கடவுளைத் தொழுதல்

உயர் நிலை மாக் கல், புகர் முகம் புதைய,
மாரியின் இகுதரு வில் உமிழ் கடுங் கணை,
தாரொடு பொலிந்த, வினை நவில் யானைச்
சூழியின் பொலிந்த, சுடர்ப் பூ இலஞ்சி,
ஓர் யாற்று இயவின், மூத்த புரிசைப்
பராவு அரு மரபின் கடவுட் காணின்,
தொழா நிர் கழியின் அல்லது, வறிது
நும் இயம் தொடுதல் ஓம்புமின்—மயங்கு துளி
மாரி தலையும், அவன் மல்லல் வெற்பே.

மலைக் காட்சிகளில் ஈடுபடின், வழி தப்பும் என்று அறிவுறுத்தல்

அலகை அன்ன வெள் வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியில் தளரினும்;
கடும் பறைக் கோடியர் மகாஅர் அன்ன,
நெடுங் கழைக் கொம்பர், கடுவன் உகளினும்;
நேர் கொள் நெடு வரை, நேமியின் தொடுத்த,
சூர் புகல் அடுக்கத்து, பிரசம் காணினும்;
ஞெரேரென நோக்கல், ஓம்புமின், உரித்தன்று;
நிரை செலல் மெல் அடி நெறி மாறு படுகுவிர்.

இரவில் குகைகளில் தங்குதல்

வரை சேர் வகுந்தின் கானத்துப் படினே,
கழுதில் சேணோன் ஏவொடு போகி,
இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி,
நிறப் புண் கூர்ந்த நிலம் தின் மருப்பின்,

நெறிக் கெடக் கிடந்த, இரும் பிணர் எருத்தின்,
இருள் துணிந்தன்ன ஏனம் காணின்,
முளி கழை இழைந்த காடு படு தீயின்
நளி புகை கமழாது, இறாயினிர் மிசைந்து;
துகள் அறத் துணிந்த மணி மருள் தெள் நீர்,
குவளை அம் பைஞ் சுனை, அசைவு விடப் பருகி;
மிகுத்துப் பதம் கொண்ட பரூஉக் கண் பொதியினிர்,
புள் கை போகிய புன் தலை மகாரோடு
அற்கு, இடை கழிதல் ஓம்பி, ஆற்ற, நும்
இல் புக்கன்ன, கல் அளை வதிமின்.

விடியற்காலத்தில் செம்மையான பாதையில் செல்லுமாறு கூறுதல்

அல் சேர்ந்து அல்கி, அசைதல் ஓம்பி,
வான்கண் விரிந்த விடியல், ஏற்றெழுந்து,
கானகப் பட்ட செந் நெறிக் கொண்மின்.

வழியில் மேற்கொள்ளவேண்டும் முன் எச்சரிக்கைகள்

கயம் கண்டன்ன—அகன் பை, அம்கண்
மைந்து மலி சினத்த களிறு மதன் அழிக்கும்,
துஞ்சுமரம் கடுக்கும், மாசுணம் விலங்கி,
இகந்து சேண் கமழும் பூவும், உண்டோர்
மறந்து அமைகல்லாப் பழனும், ஊழ் இறந்து
பெரும் பயம் கழியினும், மாந்தர் துன்னார்—
இருங் கால் வீயும், பெரு மரக் குழாமும்;
இடனும் வலனும் நினையினர் நோக்கி,
குறி அறிந்து, அவைஅவை குறுகாது கழிமின்:
கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து,
கூடு இயத்து அன்ன குரல் புணர் புள்ளின்
நாடு காண் நனந் தலை மென்மெல அகன்மின்.

குறவரும் மயங்கும் குன்றத்தில் செய்யவேண்டுவன

மா நிழற் பட்ட மரம் பயில் இறும்பின்,
ஞாயிறு தெறாஅ மாக நனந் தலை,
தேஎம் மருளும் அமையம் ஆயினும்,
இறாஅ வன் சிலையர் மா தேர்பு கொட்கும்
குறவரும் மருளும் குன்றத்துப் படினே,
அகன் கண் பாறைத் துவன்றிக் கல்லென,
இயங்கல் ஓம்பி, நும் இயங்கள் தொடுமின்:

வழி மயங்கினார்க்குக் குறவர்கள் வந்து உதவிபுரிதல்

பாடு இன் அருவிப் பயம் கெழு மீமிசை,
காடு காத்து உறையும் கானவர் உளரே;
நிலைத் துறை வழீஇய மதன் அழி மாக்கள்

புனல் படு பூசலின், விரைந்து வல் எய்தி,
உண்டற்கு இனிய பழனும், கண்டோர்
மலைதற்கு இனிய பூவும், காட்டி,
ஊறு நிரம்பிய ஆறு அவர் முந்துற,
நும்மின், நெஞ்சத்து அவலம் வீட,
இம்மென் கடும்போடு இனியிர்ஆகுவிர்:
அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு,
குறியவும் நெடியவும் ஊழ் இழிபு, புதுவோர்
நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து,
அலர் தாய வரி நிழல் அசையினிர் இருப்பின்,
பல திறம் பெயர்பவை கேட்குவிர்மாதோ:

மலையில் தோன்றும் பலவித ஒலிகளைக் கேட்டல்

கலை தொடு பெரும் பழம் புண் கூர்ந்து ஊறலின்,
மலை முழுதும் கமழும் மாதிரம்தோறும்,
அருவி நுகரும் வான்அரமகளிர்,
வரு விசை தவிராது வாங்குபு குடைதொறும்,
தெரி இமிழ் கொண்ட நும் இயம் போல் இன் இசை;
இலங்கு ஏந்து மருப்பின் இனம் பிரி ஒருத்தல்,
விலங்கல் மீமிசைப் பணவைக் கானவர்
புலம் புக்கு உண்ணும், புரி வளைப் பூசல்;
சேய் அளைப் பள்ளி, எஃகு உறு முள்ளின்
எய் தெற, இழுக்கிய கானவர் அழுகை;
கொடுவரி பாய்ந்தென, கொழுநர் மார்பில்,
நெடு வசி விழுப் புண் தணிமார், காப்பு என,
அறல் வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்;
தலை நாள் பூத்த பொன் இணர் வேங்கை
மலைமார், இடூஉம் ஏமப் பூசல்:
கன்று அரைப்பட்ட கயந் தலை மடப் பிடி
வலிக்கு வரம்பு ஆகிய கணவன் ஓம்பலின்,
ஒண் கேழ் வயப் புலி பாய்ந்தென, கிளையொடு,
நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல்;
கைக் கோள் மறந்த கரு விரல் மந்தி
அரு விடர் வீழ்ந்த தன் கல்லாப் பார்ப்பிற்கு,
முறி மேய் யாக்கைக் கிளையொடு துவன்றி,
சிறுமை உற்ற களையாப் பூசல்;
கலை கையற்ற காண்பு இன் நெடு வரை,
நிலைபெய்து இட்ட மால்பு நெறி ஆக,
பெரும் பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை;
அருங் குறும்பு எறிந்த கானவர் உவகை,
திருந்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்ம் என;
நறவு நாட் செய்த குறவர் தம் பெண்டிரொடு

மான் தோற் சிறு பறை கறங்கக் கல்லென,
வான் தோய் மீமிசை அயரும் குரவை;
நல் எழில் நெடுந் தேர் இயவு வந்தன்ன,
கல் யாறு ஒலிக்கும் விடர் முழங்கு இரங்கு இசை;
நெடுஞ் சுழிப்பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச் சினம் தணித்து, பெரு வெளிற் பிணிமார்,
விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை;
ஒலி கழைத் தட்டை புடையுநர், புனந்தொறும்
கிளி கடி மகளிர் விளி படு பூசல்;
இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல் ஏறு,
மலைத் தலைவந்த மரையான் கதழ் விடை,
மாறு மைந்தின் ஊறுபடத் தாக்கி,
கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப,
வள் இதழ்க் குளவியும் குறிஞ்சியும் குழைய,
நல் ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை;
காந்தட் துடுப்பின் கமழ் மடல் ஓச்சி,
வண் கோட் பலவின் சுளை விளை தீம் பழம்
உண்டு படு மிச்சில் காழ் பயன் கொண்மார்,
கன்று கடாஅவுறுக்கும் மகாஅர் ஓதை;
மழை கண்டன்ன ஆலைதொறும், ஞெரேரெனக்
கழை கண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்;
தினை குறு மகளிர் இசை படு வள்ளையும்,
சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர்
பன்றிப் பறையும்; குன்றகச் சிலம்பும்;
என்று இவ் அனைத்தும், இயைந்து ஒருங்கு, ஈண்டி,
அவலவும் மிசையவும் துவன்றிப் பல உடன்,
அலகைத் தவிர்த்த எண் அருந் திறத்த
மலை படு கடாஅம் மாதிரத்து இயம்ப—

நன்னனது மலை வழியில் செல்லும் வகை

குரூஉக் கண் பிணையற் கோதை மகளிர்
முழவுத் துயில் அறியா வியலுள் ஆங்கண்
விழவின் அற்று, அவன் வியன் கண் வெற்பே;
கண்ண் தண்ண்ணெனக் கண்டும் கேட்டும்,
உண்டற்கு இனிய பல பாராட்டியும்,
'இன்னும் வருவதாக, நமக்கு' எனத்
தொல் முறை மரபினிர் ஆகி, பல் மாண்
செரு மிக்குப் புகலும் திரு ஆர் மார்பன்
உரும் உரறு கருவிய பெரு மலை பிற்பட,
இறும்பூது கஞலிய இன் குரல் விறலியர்

நறுங் கார் அடுக்கத்து, குறிஞ்சி பாடி,
கைதொழூஉப் பரவி, பழிச்சினிர் கழிமின்.

குன்றும் குகைகளும் நெருங்கிய மலை வழி

மை படு மா மலை, பனுவலின் பொங்கி,
கை தோய்வு அன்ன கார் மழைத் தொழுதி,
தூஉயன்ன துவலை துவற்றலின்,
தேஎம் தேருக் கடும் பரிக் கடும்பொடு,
காஅய்க் கொண்ட நும் இயம் தொய்படாமல்,
கூவல் அன்ன விடரகம் புகுமின்:
இருங் கல் இகுப்பத்து இறு வரை சேராது,
குன்று இடம்பட்ட ஆர் இடர் அழுவத்து,
நின்று நோக்கினும் கண் வாள் வெளவும்,
மண் கனை முழவின்தலை, கோல், கொண்டு,
தண்டு கால் ஆக, தளர்தல் ஓம்பி,
ஊன்றினிர் கழிமின்; ஊறு தவப் பலவே:
அயில் காய்ந்தன்ன கூர்ங் கற் பாறை,
வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து,
கதிர் சினம் தணிந்த அமயத்துக் கழிமின்.

அரண்களும் நடுகற்களும் உள்ள வழிகள்

உரை செல வெறுத்த அவன் நீங்காச் சுற்றமொடு
புரை தவ உயரிய மழை மருள் பல் தோல்,
அரசு நிலை தளர்க்கும், அருப்பமும் உடைய;
பின்னியன்ன பிணங்கு அரில் நுழைதொறும்,
முன்னோன் வாங்கிய கடு விசைக் கணைக் கோல்
இன் இசை நல் யாழ்ப் பத்தரும், விசி பிணி
மண் ஆர் முழவின் கண்ணும், ஓம்பி,
கை பிணி விடாஅது பைபயக் கழிமின்.
களிறு மலைந்தன்ன கண் கூடு துறுகல்
தளி பொழி கானம் தலை தவப் பலவே;
ஒன்னாத் தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென,
நல் வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல் இசைப் பெயரொடு நட்ட
கல் ஏசு கவலை எண்ணு மிகப் பலவே;
இன்புறு முரற்கை நும் பாட்டு விருப்பு ஆக,
தொன்று ஒழுகு மரபின் நும் மருப்பு இகுத்துத் துனைமின்

புதியவர்களுக்கு வழி தெரிய, புல்லை முடிந்து இட்டுச் செல்லுதல்

பண்டு நற்கு அறியாப் புலம் பெயர் புதுவிர்
சந்து நீவிப் புல் முடிந்து இடுமின்.

நன்னனுடைய பகைவர் இருக்கும் அரு நிலங்கள்

செல்லும் தேஎத்து, பெயர் மருங்கு அறிமார்,
கல் எறிந்து, எழுதிய நல் அரை மராஅத்த
கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை,
ஒட்டாது அகன்ற ஒன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்கும் சுரம் தவப் பலவே:
தேம் பாய் கண்ணித் தேர் வீசு கவிகை
ஓம்பா வள்ளற் படர்ந்திகும் எனினே,
மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர்
ஆங்கனம் அற்றே, நம்மனோர்க்கே;
அசைவுழி அசைஇ, அஞ்சாது கழிமின்.

கோவலரது குடியிருப்பில் பெறும் உபசாரம்

புலி உற, வெறுத்த தன் வீழ் பிணை உள்ளி,
கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து,
சிலை ஒலி வெரீஇய செங் கண் மரை விடை
தலை இறும்பு கதழும் நாறு கொடிப் புறவின்,
வேறு புலம் படர்ந்த ஏறுடை இனத்த
வளை ஆன் தீம் பால், மிளை சூழ் கோவலர்,
வளையோர் உவப்ப, தருவனர் சொரிதலின்,
பலம் பெறு நசையொடு பதிவயின் தீர்ந்த நும்
புலம்பு சேண் அகல, புதுவிர் ஆகுவிர்;
பகர் விரவு நெல்லின் பல அரி அன்ன,
தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇ,
கல்லென் கடத்திடைக் கடலின் இரைக்கும்
பல் யாட்டு இன நிரை எல்லினிர் புகினே,
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்;
துய்ம் மயிர் அடக்கிய சேக்கை அன்ன,
மெய் உரித்து இயற்றிய மிதி அதட் பள்ளி,
தீத் துணை ஆகச் சேந்தனிர் கழிமின்.

நாடு காக்கும் வேடர் திரள்கூளின் செய்கை

கூப்பிடு கடக்கும் கூர் நல் அம்பின்
கொடு விற் கூளியர் கூவை காணின்,
படியோர்த் தேய்த்த பணிவு இல் ஆண்மை,
கொடியோள் கணவற் படர்ந்திகும் எனினே,
தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ,
ஓம்புநர் அல்லது, உடற்றுநர் இல்லை;
ஆங்கு வியம் கொண்மின்; அது அதன் பண்பே.

மாலை சூடி, நீர் அருந்தி, குளித்துச் செல்லுதல்

தேம் பட மலர்ந்த மராஅ மெல் இணரும்,
உம்பல் அகைத்த ஒண் முறி யாவும்,
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி,
திரங்கு மரல் நாரில், பொலியச் சூடி,
முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென,
உண்டனிர், ஆடி, கொண்டனிர் கழிமின்.

புல் வேய்ந்த குடிசைகளில் புளிங் கூழும் பிறவும் பெறுதல்

செவ் வீ வேங்கைப் பூவின் அன்ன,
வேய் கொள் அரிசி, மிதவை சொரிந்த,
சுவல் விளை நெல்லின், அவரை அம் புளிங் கூழ்,
அற்கு, இடை உழந்த நும் வருத்தம் வீட,
அகலுள் ஆங்கண் கழி மிடைந்து இயற்றிய
புல் வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்;
பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி
வெண் எறிந்து இயற்றிய மாக் கண் அமலை,
தண்ணென் நுண் இழுது உள்ளீடு ஆக,
அசையினிர் சேப்பின், அல்கலும் பெறுகுவிர்—
விசையம் கொழித்த பூழி அன்ன,
உண்ணுநர்த் தடுத்த நுண் இடி நுவணை:
நொய்ம் மர விறகின் ஞெகிழி மாட்டி,
பனி சேண் நீங்க இனிது உடன் துஞ்சி,
புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்.

நன்னனது தண் பணை நாட்டின் தன்மை

புல் அரைக் காஞ்சி, புனல் பொரு புதவின்,
மெல் அவல், இருந்த ஊர்தொறும், நல் யாழ்ப்
பண்ணுப் பெயர்த்தன்ன, காவும், பள்ளியும்,
பல் நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும்,
நன் பல உடைத்து, அவன் தண் பணை நாடே:

உழவர் செய்யும் உபசாரம்

கண்பு மலி பழனம் கமழத் துழைஇ,
வலையோர் தந்த இருஞ் சுவல் வாளை,
நிலையோர் இட்ட நெடு நாண் தூண்டில்,
பிடிக் கை அன்ன செங் கண் வராஅல்,
துடிக் கண் அன்ன, குறையொடு விரைஇ,
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்,
ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த,

விலங்கல் அன்ன, போர் முதல் தொலைஇ,
வளம் செய் வினைஞர் வல்சி நல்க,
துளங்கு தசும்பு வாக்கிய பசும் பொதித் தேறல்,
இளங் கதிர் ஞாயிற்றுக் களங்கள்தொறும், பெறுகுவிர்;
முள் அரித்து இயற்றிய வெள் அரி வெண் சோறு,
'வண்டு படக் கமழும் தேம் பாய் கண்ணித்
திண் தேர் நன்னற்கும் அயினி சான்ம்' எனக்
கண்டோர் மருள, கடும்புடன் அருந்தி,
எருது எறி களமர் ஓதையொடு நல் யாழ்
மருதம் பண்ணி, அசையினிர், கழிமின்.

சேயாற்றின் கரைவழியே செல்லுதல்

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ,
செங் கண் எருமை இனம் பிரி ஒருத்தல்,
கனை செலல் முன்பொடு கதழ்ந்து வரல் போற்றி,
வனை கலத் திகிரியின் குமிழி சுழலும்,
துனை செலல் தலைவாய், ஓ இறந்து வரிக்கும்,
காணுநர் வயாஅம், கட்கு இன் சேயாற்றின்
யாணர் ஒரு கரைக் கொண்டனிர் கழிமின்.

நன்னனது மூதூரின் இயல்பு

நிதியம் துஞ்சும், நிவந்து ஓங்கு வரைப்பின்,
பதி எழல் அறியாப் பழங் குடி கெழீஇ,
வியல் இடம் பெறாஅ விழுப் பெரு நியமத்து,
யாறு எனக் கிடந்த தெருவின், சாறு என,
இகழுநர் வெரூஉம், கவலை மறுகின்,
கடல் என, கார் என, ஒலிக்கும் சும்மையொடு,
மலை என, மழை என, மாடம் ஓங்கி,
துனி தீர் காதலின் இனிது அமர்ந்து உறையும்,
பனி வார் காவின் பல் வண்டு இமிரும்,
நனி சேய்த்தன்று, அவன் பழ விறல் மூதூர்.

மூதூர் மக்கள் விருந்து எதிர்கொள்ளுதல்

பொருந்தாத் தெவ்வர் இருந் தலை துமிய,
பருந்து படக் கடக்கும் ஒள் வாள் மறவர்
கருங் கடை எஃகம் சாத்திய புதவின்,
அருங் கடி வாயில் அயிராது புகுமின்:
மன்றில் வதியுநர் சேட் புலப் பரிசிலர்,
'வெல் போர்ச் சேஎய்ப் பெரு விறல் உள்ளி
வந்தோர் மன்ற, அளியர் தாம்' என,
கண்டோர் எல்லாம், அமர்ந்து, இனிதின் நோக்கி,

விருந்து இறை அவர்அவர் எதிர் கொளக் குறுகி,
பரி புலம்பு அலைத்த நும் வருத்தம் வீட—

அரண்மனை வாயிலில் காணும் பொருள் வளம்

எரி கான்றன்ன பூஞ் சினை மராஅத்து,
தொழுதி போக வலிந்து அகப்பட்ட
மட நடை ஆமான், கயமுனிக் குழவி,
ஊமை எண்கின் குடாவடிக் குருளை,
மீமிசைக் கொண்ட கவர் பரிக் கொடுந் தாள்
வரை வாழ் வருடை வன் தலை மாத் தகர்,
அரவுக் குறும்பு எறிந்த சிறு கட் தீர்வை,
அளைச் செறி உழுவை கோள் உற வெறுத்த
மடக் கண் மரையான் பெருஞ் செவிக் குழவி,
அரக்கு விரித்தன்ன செந் நில மருங்கின்,
பரற் தவழ் உடும்பின் கொடுந் தாள் ஏற்றை,
வரைப் பொலிந்து இயலும் மடக் கண் மஞ்ஞை,
கானக்கோழிக் கவர் குரல் சேவல்,
கானப் பலவின் முழவு மருள் பெரும் பழம்,
இடிக் கலப்பு அன்ன, நறு வடி மாவின்
வடிச் சேறு விளைந்த தீம் பழத் தாரம்,
தூவற் கலித்த இவர் நனை வளர் கொடி,
காஅய்க் கொண்ட நுகம் மருள் நூறை,
பரூஉப் பளிங்கு உதிர்த்த, பல உறு திரு மணி,
குரூஉப் புலி பொருத புண் கூர் யானை
முத்துடை மருப்பின் முழு வலி மிகு திரள்,
வளை உடைந்தன்ன வள் இதழ்க் காந்தள்,
நாகம், திலகம், நறுங் காழ் ஆரம்,
கருங் கொடி மிளகின் காய்த் துணர்ப் பசுங் கறி,
திருந்து அமை விளைந்த தேக் கட் தேறல்,
கான் நிலை எருமைக் கழை பெய் தீம் தயிர்,
நீல் நிற ஓரி பாய்ந்தென, நெடு வரை,
நேமியின் செல்லும் நெய்க் கண் இறுஅல்,
உடம்புணர்பு, தழீஇய ஆசினி, அனைத்தும்,
குட மலைப் பிறந்த தண் பெருங் காவிரி
கடல் மண்டு அழுவத்துக் கயவாய் கடுப்ப,
நோனுச் செருவின் நெடுங் கடைத் துவன்றி—

முற்றத்தில் நின்று விறலியர் நன்னனைப் போற்றுதல்

வானத்து அன்ன வளம் மலி யானை,
தாது எருத் ததைந்த, முற்றம் முன்னி,
மழை எதிர் படு கண் முழவு கண் இகுப்ப,

கழை வளர் தூம்பின் கண் இடம் இமிர,
மருதம் பண்ணிய கருங் கோட்டுச் சீறியாழ்
நரம்பு மீது இறவாது, உடன் புணர்ந்து ஒன்றி,
கடவது அறிந்த இன் குரல் விறலியர்
தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது,
அருந் திறற் கடவுட் பழிச்சிய பின்றை—

கூத்தர்கள் நன்னனைப் போற்றுதல்

விருந்தின் பாணி கழிப்பி, 'நீள் மொழிக்
குன்றா நல் இசைச் சென்றோர் உம்பல்,
இன்று இவண் செல்லாது உலகமொடு நிற்ப,
இடைத் தெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தென,
கொடைக்கடன் இறுத்த செம்மலோய்' என,
வென்றிப் பல் புகழ் விறலோடு ஏத்தி,
சென்றது நொடியவும் விடாஅன்,

நன்னன் கூறும் முகமன் உரை

'நசைதர
வந்தது சாலும்; வருத்தமும் பெரிது' என,

நாளோலக்கத்திற்கு அழைத்துச் செல்லுதல்

பொரு முரண் எதிரிய வயவரொடு பொலிந்து,
திரு நகர் முற்றம் அணுகல் வேண்டி,
கல்லென் ஒக்கல் நல் வலத்து இரீஇ,

நன்னனது குளிர்ந்த நோக்கம்

'உயர்ந்த கட்டில், உரும்பு இல் சுற்றத்து,
அகன்ற தாயத்து, அஃகிய நுட்பத்து,
இலம் என மலர்ந்த கையர் ஆகி,
தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்,
நெடு வரை இழிதரு நீத்தம் சால் அருவிக்
கடுவரல் கலுழிக் கட்கு இன் சேயாற்று
வடு வாழ் எக்கர் மணலினும், பலரே;
அதனால், புகழொடும் கழிக, நம் வரைந்த நாள்!' என,
பரந்து இடம் கொடுக்கும் விசும்பு தோய் உள்ளமொடு,
நயந்தனிர் சென்ற நும்மினும், தான் பெரிது,
உவந்த உள்ளமோடு, அமர்ந்து இனிது நோக்கி,

நன்னனது கொடைச் சிறப்பு

இழை மருங்கு அறியா நுழை நூற் கலிங்கம்
எள் அறு சிறப்பின் வெள் அரைக் கொளீஇ,

முடுவல் தந்த பைந் நிணத் தடியொடு,
நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது,
தலை நாள் அன்ன புகலொடு, வழி சிறந்து
பல நாள் நிற்பினும், பெறுகுவிர்; 'நில்லாது
செல்வேம்தில்ல, எம் தொல் பதிப் பெயர்ந்து!' என,
மெல்லெனக் கூறி விடுப்பின், நும்முள்
தலைவன் தாமரை மலைய, விறலியர்
சீர் கெழு சிறப்பின் விளங்குஇழை அணிய,
நீர் இயக்கன்ன நிரை செலல் நெடுந் தேர்,
வாரிக் கொள்ளா வரை மருள் வேழம்,
கறங்கு மணி துவைக்கும் ஏறுடைப் பெரு நிரை,
பொலம் படைப் பொலிந்த கொய் சுவற் புரவி,
நிலம் தினக் கிடந்த நிதியமோடு, அனைத்தும்,
இலம்படு புலவர் ஏற்ற கைந் நிறைய,
கலம் பெயக் கவிழ்ந்த கழல் தொடித் தடக் கையின்
வளம் பிழைப்பு அறியாது, வாய் வளம் பழுநி,
கழை வளர் நவிரத்து மீமிசை, ஞெரேரென
மழை சுரந்தன்ன ஈகை நல்கி,
தலை நாள் விடுக்கும் பரிசில்—மலை நீர்
வென்று எழு கொடியின் தோன்றும்
குன்று சூழ் இருக்கை நாடுகிழவோனே.

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல் குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னனைப் பாடியது.

மலைபடுகடாம் முற்றும்

தனிப் பாடல்

தூஉத் தீம் புகை தொல் விசும்பு போர்த்ததுகொல்?—
பாஅய்ப் பகல் செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்?—
மாஅ மிசையார் கோன் நன்னன் நறு நுதலார்
மாஅமை எல்லாம் பசப்பு!

சிறப்புப் பெயர் முதலியவை

அ

அகழ் 214
அசையும் நல் புலம் 67
அதட் பள்ளி 419
அம்பு 421
அமை 522
அயில் 373
அயினி 467
அரக்கு 507
அரசு 74
அரம் 35
அரவு 504
அரிசி 440
அருங் கலம் 71
அருப்பம் 378
அருவி 278, 554
அல் (இரவு) 254, 256, 437
அலகை 234, 347
அவரை 110
அவரைஅம் புளிங் கூழ் 436
அவல் (உணவு வகை) 121
அவல் (பள்ளம்) 198
அவையம் 77
அளை 300
அறிஞர் 287

ஆ

ஆஅல் (ஆரல்) 100
ஆகுளி 3, 140
ஆசினி 139, 526
ஆணி 27
ஆமான் குழவி 500
ஆரம் 520
ஆலம் 268
ஆலை 119, 340
ஆன் தீம் பால் 409

இ

இகழுநர் 73
இஞ்சி 92, 126
இடங்கர் 211
இடி 512
இதணம் 204
இயங்கள் 277
இயங்குநர் 18
இயம் 232, 269
இருங்கல் அரும் பொறி 194-195
இரும்பு 113
இலஞ்சி 228
இழுது 244, 442
இளி 7
இறடி 169
இறுஅல் 525

ஈ

ஈகைமாரி 72

உ

உடும்பின் ஏற்றை 508
உந்தி 34
உந்தூழ் 133
உம்பல் 429
உயவை 136
உலகம் 541
உழவர் 60
உழுவை 505

ஊ

ஊகம் 208
ஊறு நிரம்பிய ஆறு 284
ஊன் 146
ஊன் ஆர் வட்டியர் 152

எ

எஃகம் 490
எஃகு 300
எண் 106
எண்கின் குருளை 501
எய் 301
எருது 469
எருமை 472, 523
எருவை மென் கோல் 224
எல் (இரவு) 416
எல்லரி (சல்லி) 10

ஏ

ஏறு 330, 408
ஏறுடைப் பெரு நிரை 573
ஏறு பொருஉம் கம்பலை 335
ஏனம் 247
ஏனல் 108

ஐ

ஐயவி 123
ஐவன வெண்ணெல் 115

ஒ

ஒக்கல் 157
ஒருத்தல் 297
ஒன்னாத் தெவ்வர் 386

க

கட்டில் 550
கடம் 415
கடமான் 175
கடல் 52, 483
கடவுள் 230
கடவுள் பழிச்சல் 538
கடிப்பகை 22
கடு (ஒரு வகை மரம்) 14

கடும்பு 159, 286, 364, 468
கடுவன் 237
கண்ணி 399, 430, 466
கண்ணுளர் ஒக்கல் 50
கண்பு 454
கணை 226
கதிர் 375
கயம் 47, 213, 220, 259
கயமுனி 107
கயமுனிக் குழவி 500
கயவாய் (புகார்) 528
கரும்பு 119, 341
கல் அளை 255
கல் எறிந்து எழுதிய கடவுள் 395-396
கல்லாப் பார்ப்பு 312
கலப்பை 13
கலம் 50
கலை 292, 315, 405
கவண் உமிழ் கடுங் கல் 206
கவலை 128
கவலை மறுகு 482
கழுது 243
கழை 180, 207, 237, 248, 533, 579
கழை பெய் தீம் தயிர் 523
கள் 522
களங்கனி 36
களம் (நெற்களம்) 464
களமர் 469
களிறு 6, 129, 211, 260, 384
கன்று 307

கா

கா 451. 486
காஅய்க் கொண்ட இயம் 365
காஅய்க் கொள்ளுதல் 515
காஞ்சி 449
காடு காத்து உறையும் கானவர் 279
காடு படு தீ 248
காந்தள் 336, 519
கார் 142, 483
காரி உண்டிக் கடவுள் 83
காவிரி 527
காழ் (விதை) 338
காழ் மண்டு எஃகம் 129
கான் யாற்று நடவை 214
கானம் 54, 69, 242
கானவர் 17, 155, 298, 301

கி

கிடங்கு 91
கிழங்கினர் 152
கிழங்கு 425
கிளி கடி மகளிர் 329
கிளை 54
கிளை (சுற்றம்) 313

கு

குட மலை 527
குடிஞை 141
குருசில் 186
குவளை 189, 251
குழல் 8
குறமகள் 183
குறவர் 203, 320, 333
குறவரும் மருளும் குன்றம் 275
குறிஞ்சி 334
குறிஞ்சி பாடுதல் 359
குறும் பரம் தூம்பு 7
குன்றகச் சிலம்பு 344
குன்று நல் இசைச் சென்றோர் 540

கூ

கூர்ங் கற் பாறை 373
கூவல் 366
கூவை 137, 422
கூளியர் 422
கூற்றம் 209

கே

கேழல் 193
கேள்வி 22

கை

கைபிணி விடாஅது பைபயக் கழிதல் 383

கொ

கொடி (நறைக் கொடி) 514
கொடிச்சியர் 304
கொடியோள் கணவன் 424
கொடுவரி 302
கொடைக் கடன் 89, 543
கொழுநர் 302

கோ

கோடியர் 143
கோடியர் மகாஅர் 236
கோடு (ஒரு வகை வாத்தியம்) 5
கோடு (மரக் கிளை) 268
கோவலர் 333, 409
கோழிச் சேவல் 510

ச

சந்து நீவிப் முடிந்து இடுதல் 393

சி

சிலை 406
சிலையர் 274
சிறுகுடி 156
சிறு நெறி 16

சீ

சீறியாழ் 534

சு

சுவல் விளை நெல் 436
சுற்றம் 80, 376
சுனை 104, 251

சூ

சூர் புகல் அடுக்கம் 239
சூழி 228

செ

செங் காந்தள் 145
செந் நிலம் 507
செம்மல் 543
செய்யாப் பாவை 125
செயலை 160
செரு 186
செரு மிக்குப் புகலும் திரு ஆர் மார்பன் 356

சே

சேஎய் 493
சேக்கை 418
சேஞேன் 243
சேம்பு 343
சேயாறு 476, 555

சோ

சோலை 69

ஞு

ஞுமலி 42

ஞா

ஞாயிறு 85, 272

ஞெ

ஞெகிழி 446
ஞெண்டு 460

த

தட்டை 328
தட்டை (கரடிகை) 9
தடி 425
தண்டு 371
தண்ணுமை 471
தண் பணை நாடு 453
தயிர் 523

தா

தாமரை 569
தாயம் 551

தி

திரு 1
திருமணி 516
திலகம் 520
திவவு 21
திணைகுறு மகளிர் 342

தீ

தீ 145
தீத்துணை ஆகச் சேத்தல் 420
தீர்வை 504

து

துஞ்சு மரம் 261
துடவை 122
துடி 458
துணை 17
துரு 217
துருவை 414
துளை 27

தூ

தூண்டில் 456
தூம்பு 6, 533

தெ

தெரு 481
தெவ்வர் 86, 386, 397, 488

தே

தேஎம் (திசை) 273, 364
தேம் 317
தேமா 138
தேர் 323, 571
தேர் வீசு கவிகை 399
தேறல் 171, 463, 522
தேனினர் 152

தொ

தொடி 21, 577
தொல்லோர் 89

தோ

தோகை 44
தோரை 121
தோல் 377

ந

நட்ட கல் 388-389
நடவை 432
நரம்பு 23
நவிரம் 82, 579
நறவு 172, 320
நன்னன் 467, வெ. 1
நன்னன் சேய் நன்னன் 64

நா

நாகம் 520
நாடு காண் நனந்தலை 270
நாடு படு வல்சி 68

நாவல் 135
நாள் மகிழ் இருக்கை 76

நி

நிணம் 244
நிதியம் 478, 575
நியமம் 480
நில நாடு 192
நிழல் 290

நு

நுட்பம் 551
நுண் கோல் வேரல் 223
நுவணை 445

நூ

நூழிலாட்டுதல் 87
நூற் கலிங்கம் 561
நூறை 515

நெ

நெடுங் கடை 529
நெய்தல் 124
நெல்லின் அரி 180

நே

நேமி 238, 525

நொ

நொடி 11

ப

பகர் விரவு நெல் 413
பகல் செய்வான் வெ. 1
பகன்றைக் கண்ணி 459
பச்சை 29
பசுங் கறி 521
பண் 2
பணவை 298
பதலை (ஒரு கண் மாக் கிணை) 11
பயம்பு 199
பரிசில் 581
பரிசிலர் 492
பருந்து 489
பரூஉக் கொடி 216
பலவின் சுளை விளை தீம்பழம் 337
பலவின் பெரும் பழம் 511
பலவு 12, 144
பழங் குடி 479
பழன் 263, 282
பழனம் 454
பழையர் மகளிர் 459
பள்ளி 451
பளிங்கு 516
பறை 236
பன்றி 153
பன்றிப் பறை 344

பா

பாக்கம் 162
பாகர் 327
பாசி 221
பாட்டு 390
பாண்டில் 4
பாணர் 40
பாணி 11
பாம்பு 199, வெ.1
பார்ப்பு 208
பால் 417
பாறை 15,276

பி

பிடி 127, 307
பிணங்கு அரில் 379
பிணவு 177
பிணையல் 349
பிரசம் 239

பீ

பீலி அணித் தழை 5

பு

புகழுநர் 73
புதவு 449, 490
புரவி 574
புரிசை 229
புல் வேய் குரம்பை 439
புலம் பெயர் புதுவர் 392
புலரி விடியல் 448
புலவர் 576
புலவோர் 72
புலி 309, 404, 517
புழகு 219
புழை 194
புள் (வளையல்) 253
புளி 179
புறவு 48
புனல் 48

பூ

பூ 262, 283

பெ

பெயல் 99
பெரியோர் 542
பெரும் பழம் 292
பெரு மரக் குழாம் 265

பே

பேரியாழ் 37

பொ

பொதி 252
பொன் 440

போ

போர் (நெற் சூடு) 461

ம

மகமுறை 185
மகாஅர் 339
மகார் 217, 253
மஞ்சள் 343
மஞ்ஞை 235, 509
மண இல் 151
மணி 250, 573
மந்தி 311
மரல் 431
மராஅ 428, 498
மராஅத்த கடவுள் 395-6
மருதம் 470
மருதம்(பண்) 534
மருப்பு (யாழ்) 391
மருப்பு (யாழ்த் தண்டு) 37
மரையான் 331
மரையான் குழவி 506
மரை விடை 406
மலை 69
மலைத் தாரம் 170
மலை படு கடாஅம் 348
மலை மிசை நாடு 188
மழை 1, 377
மறவர் 387, 489
மன்றில் வதியுநர் 492

மா

மாசுணம் 261
மாடம் 484
மாதிரம் 287, 348
மாமை 35
மாரி 233
மால்பு (கண் ஏணி) 316
மாவின் தீம் பழம் 512-513
மான் தோற் சிறுபறை 321

மி

மிதவை 417
மிளகு 521
மிளை 409

மு

முசுண்டை 101
முடுக்கர் 213
முடுவல் 563
முத்துடை மருப்பு 518
முதலை 90
முரம்பு 198, 432
முரற்கை 390
முழவின் கண் 382
முழவின் தலைக்கோல் 370
முழவு 3, 143, 350, 532
முளவு மா 176
முற்றம் 531
முனை 59

மூ

மூதூர் 93, 401, 487

மே

மேதி 111

மோ

மோர் 179

யா

யா 429
யாட்டு இன நிரை 416
யாப்பு 28
யாழ் 450, 469
யாழ்ப் பத்தர் 381
யாறு 52
யானை 154, 205, 227, 517, 530

வ

வகுந்து 242
வடி 512
வண்டு 30, 56, 466, 486
வதுவை 30
வயவர் 547
வயிரியம் 164
வரகின் குரல் 24-25
வரகு 24, 113
வராஅல் 457
வருடை 503
வரைஅரமகளிர் 190
வரை சேர் வகுந்தின் கானம் 242
வல்சி (நெல்) 462
வலையோர் 455
வழூஉம் மருங்கு 215
வழை 181
வள்ளல் 400
வள்ளை 342
வளை 519
வளையோர் 410
வனை கலத் திகிரி 474

வா

வாதி 112
வாதி கை 112
வாயில் 491
வாழை 131
வாளி 17
வாளை 455
வான் 75
வான்அரமகளிர் 294
வான்கண் 257
வானம் 97, 530

வி

விசும்பு 1
விசையம் 444
விடியல் 196, 257
விண் 2
விரவு மொழி 327
விருந்தின் பாணி 539
விருந்து 496
வில் 422
விழவு 351
விளை புனம் 193
விறலியர் 46, 201, 358, 536,569

வெ

வெண்ணெல் அரிநர் 471
வெண்ணெல்லின் அரிசி 564
வெண் புடைக் கொண்ட துய்த்தலைப் பழன் 178
வெள் அரி வெண் சோறு 465
வெள்ளை 414
வெளில் 326
வெறிக் களம் 150
வென்றிப் பல் புகழ் 544

வே

வேங்கை 305, 434
வேத்தவை 39
வேய் 171
வேய் கொள் அரிசி மிதவை 435
வேல் நிழற் புலவோர் 88
வேவை 168
வேழம் 325, 572
வேள் 164

வை

வைகறை 172